பதிப்பாசிரியர் :

ச. சச்சிதானந்தம் பிள்ளை, B.A.,L.T.

# வீரபாண்டியக் கட்டபொம்மு

ஆசிரியை :

குமாரி - வி. சே. லீலா, B.A., B.T.

அருணா பப்ளிகேஷன்ஸ் லிமிடெட்.,

175-A, லாயிட்ஸ் ரோட், இராயப்பேட்டை P.O.

சென்னை - 14

பதிப்புரிமை] 1951 [விலை ரூ. 1

V2¹¹:51771L60
N51
TAMIL NADU ARCHIVES LIBRARY
11193
EGMORE, MADRAS

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை-14

# முன்னுரை

பதினெட்டாம் நூற்றாண்டில், தமிழ்நாட்டின் தனிப் பெரும் வீரராக வாழ்ந்து, அந்நியருக்கு அடிபணிய மறுத்து, நகைமுகத்துடன் தூக்குமேடை ஏறி உரிமைப்போரில் உயிர் நீத்த உத்தமராகிய வீரபாண்டியக் கட்டபொம்முவின் சரிதை, தமிழர் பேணிவரும் ஒரு பெருஞ்செல்வம். அவ் வீரரின் நினைவை நாம் இன்றுவரையிலும் போற்றிவந்துள்ளோம். தம்போன்ற பாளையக்காரர்கள் பலரும் கோழைகளாய் வெளிநாட்டாருக்கு அடங்கி வாழ்ந்துவந்த காலத்தில், அவர் ஒருவரே அடிமையாய் வாழ மறுத்து, வலிமிக்க அந்நியரை எதிர்த்துப் போராடித் தம் புகழை நிலைநாட்டினார். இன்று நம் நாட்டில் அடிமை வாழ்வு அகன்றுள்ளதென்றால், அதற்கு அடிகோலியவர் வீரபாண்டியரே யாவார். அவருடைய சரிதம், பொதுவாக நம் நாட்டு மக்களனைவருக்கும், சிறப்பாக மாணவர்க்கும் ஒரு வழிகாட்டியாக உதவும். வாழ்க்கைப் பாதையில் காணும் பல உண்மைகளை உணர்த்தி, அவர்கள் வாழ்க்கையை வளம் பெறச் செய்யும்.

எல்லா நாடுகளிலும், எந்தக் காலத்திலும் வீரர்கள் போற்றப்பட்டு வந்துள்ளனர். "வீரஞ் செறிந்த தமிழ்நாடு"ம் எண்ணிலாத வீரர்களைப் படைத்ததே. பண்டைத் தமிழ் நூல்களில் காணப்படும் வீரச் செயல்கள் சிலருக்குப் பழங் கனவென்று தோன்றலாம். அவற்றின் உண்மையைச் சரித வாயிலாகவே மெய்ப்பிக்க எத்தனையோ உதாரணங்கள் உள. தேசிங்கு மன்னரும் வீரபாண்டியக் கட்டபொம்முவும் பிற் கால சரிதத்தில் திகழும் பெருவீரர்களாவர்.

இச் சிறுநூல், கவிராஜ பண்டிதர்-ஜெகவீரபாண்டியனார் இயற்றிய பாஞ்சாலங் குறிச்சி வீரசரித்திரம், தி. நா. சுப்பிரமணியனார் எழுதிய கட்டபொம்மு, ஆனந்தவிகடனில் வெளியிடப்பட்டு வந்த கட்டபொம்மு கதை என்னும் நூல் களையும், சில கும்மிகளையும், நாடோடிப் பாடல்களையும் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பெற்றது. மேற்குறித்த ஆசிரியர்கட்கு எனது நன்றி உரியது.

இந் நூல் பெரிதும் சரிதப்போக்கிலேயே அமைந்ததொன் றெனினும், இது ஆராய்ச்சி நூலன்று; சிறிதளவு நவீன முறையையும் தழுவி எழுதப்பட்டதாகும். இம் முயற்சியை மாணவர்களும் ஆசிரியர்களும் ஆதரிப்பார்கள் என்று நம்பு கிறேன்.

ஆசிரியை.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வீரக்கல் | ... | 1 |
| 2. | மரபும் தோற்றமும் | ... | 4 |
| 3. | பாஞ்சாலங் குறிச்சி | ... | 11 |
| 4. | வர்த்தகக் குழுவினர் | ... | 18 |
| 5. | ஜாக்ஸன் சூழ்ச்சி | ... | 24 |
| 6. | இராமலிங்க விலாசம் | ... | 32 |
| 7. | தானாபதி விடுதலை | ... | 42 |
| 8. | கும்பினியாரின் சீற்றம் | ... | 47 |
| 9. | போர் முரசு | ... | 54 |
| 10. | பகைவர் பாசறையில் | ... | 66 |
| 11. | முற்றுகை | ... | 70 |
| 12. | காட்டிக்கொடுத்த கயமை | ... | 80 |
| 13. | குற்றச்சாட்டு | ... | 90 |
| 14. | ஊமைத்துரையின் மறைவு | ... | 99 |
| 15. | வீர வணக்கம் | ... | 105 |
| | மாதிரி வினாக்கள் | ... | 108 |


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - DEC 1951
MADRAS



கட்டபொம்மு, ஊமைத்துரை முதலியவருடன், ஜாக்ஸனைக் காணப் புறப்படுதல்

—*By kind permission of Editor* "Ananda Vikadan."

# வீரபாண்டியக் கட்டபொம்மு

## 1. வீரக்கல்

மதுரைக்கும் திருநெல்வேலிக்கும் இடையே கயத்தாறு என்னும் ஊருக்கு மேல்புறத்தில் உள்ள மங்கம்மாள் சாலையில், அகிலாண்டத்தம்மை கோயில் சந்நிதியில், ஒரு கட்டைப் புளியமரம் இருந்தது. அது, தனக்கு ஏற்படப்போகும் அவமானத்தை நினைந்து நினைந்து, உடம்பு குன்றி, குட்டையாய் வளர்ந்து, "கட்டைப்புளி" எனப் பெயர் பெற்றிருந்தது போலும்! அதன் சுவடுதானும் இன்று இல்லை ; அது தானாகவே பட்டுப்போயிருக்க வேண்டும். ஆனால் அவ்விடத்தை மக்கள் மறக்க வில்லை. அவ் வழியாகச் செல்வோர் யாவரும் அவ்விடத்தில் ஒரு கல்லை எடுத்துப் போடுவதுண்டு. பெரியனவும் சிறியனவுமான கற்கள் பல அங்கே மேடாகக் குவிந்துள்ளன. வழிப்போக்கர் ஒவ்வொருவரும் ஒரு கல்லை எடுத்து அக் குவியலில் போடுவதுடன், அதை வணங்கிவிட்டும் செல்வார்கள். எதற்காக மக்கள் இவ்வாறு அவ்விடத்தை வணங்குகிறார்கள் ?

1799-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ம் நாளன்று தமிழ்மகன் வெட்கித் தலைகுனிய வேண்டிய கொடுமை ஒன்று அவ்விடத்தில் நிகழ்ந்தது. மானமே பெரிதென மதித்து, அன்னியருக்கு அடிபணிய மறுத்து, வீரவாள் தாங்கி, வீரப்போர்

புரிந்த வீரபாண்டியக் கட்டபொம்ம நாயக்கர் அன்று கும்பினி வெள்ளையரால் தூக்கிலிடப்பட்டார். 'ஈடுமெடுப்புமில்லாத அவ்வீரனுக்கு நான் தானா தூக்கு மரமானேன் ?' என்று மனம் நொந்து, அக் "கட்டைப்புளி" தற்கொலை செய்துகொண்டிருக்க வேண்டும் ! தம்மைக் காட்டிக் கொடுத்த தமிழ் நாட்டை விடுத்து அமரவாழ்வெய்தினார் கட்டபொம்மு. அவர் உடலுடன் பிறந்தது நாட்டுப்பற்று ; அப் பற்றுக் காரணமாக மேற்கொண்ட பெரும் பணியில் அவர் தம்மையே பலி கொடுத்தார். அவர் பூத உடல் மறைந்தது ; ஆனால் புகழுடம்பு நிலைத்து மக்கள் மனத்தில் கோயில் கொண்டுள்ளது. வானும் கடலும், ஞாயிறும் திங்களும், தமிழ் நாடும் தமிழும் உள்ளவரை அவர் பெயர் மறையாது. தமிழ் மக்கள் அவரைப் பண்பு மிக்க வீரரெனப் போற்றுகின்றனர்.

நமது நாடு இன்று உரிமை பெற்றுள்ளது. மகாத்மா காந்தி நம் நாடு விடுதலை பெறும் பொருட்டு முப்பது ஆண்டுகள் அந்நியருடன் அறப் போர் புரிந்தார். ஆயினும் இதற்கு முன்பே 1857-ஆம் ஆண்டில் நமது நாட்டில் ஒரு பெரும் போராட்டம் நிகழ்ந்தது. அதையே முதல் உரிமைப் போர் எனப் பலர் கூறுகின்றனர். ஆனால் இதற்கும் அரை நூற்றாண்டுக்கு முன்னரே உரிமைப் போரைத் துவக்கிய பெருமை தமிழனையே சாரும். 'அன்னியரை நாம் நமக்கு அதிகாரிகளாய் அண்டவிடுவதா! அவர்கள் ஆட்சிக்கடங்கிக் கப்பம் செலுத்துவதா !' எனச் சீறி எழுந்த வீரபாண்டியக் கட்டபொம்மு உரிமைப்போர் நடப்பில் முதல் பலியானார். ஆனால் அவர் பெருமைக்கு உரிய அளவில் நினைவுச் சின்னம் இன்னும் ஏற்படவில்லை. அத்தகைய தொன்று நிறுவுவதற்கு மக்கள் செய்த முயற்சிகள் யாவும் ஆங்கிலேயரின் அடக்குமுறையால் அவலமாயின. ஆயினும் கட்டபொம்முவினிடம் பேரன்புகொண்ட நாட்டுமக்கள் அவர் சரிதையை நாட்டுப்பாடல்களில் இசைத்துப் பாடலாயினர்; நாடகமாக்கி நடிக்கலாயினர். அவையாவும் ஆட்சியாளரின் அடக்குமுறையால் மறைந்தன. அதன் பின்னரே, மேற்குறித்தபடி, கற்குவியல் ஒரு நினைவுச்சின்னமாகத் தோன்றலாயிற்று. மக்களின் அன்பினால் வளர்ந்த அக் குவியலை வீரக்கல் எனக் கருதுவது பொருத்தமாகும். இன்று கவிராஜ பண்டிதர் ஜெகவீரபாண்டியனார், "வீரபாண்டியம்" எனும் சிறந்த காவியத்தை இவ் வீரன்மீது இயற்றியுள்ளார்.



தமிழ்நாட்டின் விடுதலைக்காகப் பெரும் போரிட்டு வீரமரணம் எய்திய வீரபாண்டியர் சரித்திரம்,

> "அடிமை விலங்கையெல்லாம் அறுத்தெறியும்—நல்ல
> ஆற்றல் கொடுக்கும்"

என்று ஒரு கவிஞர் கூறுகின்றார். அச் சரிதையை நாம் படித்துப் பயன் அடைவோமாக.

## 2. மரபும் தோற்றமும்

தென்பாண்டி நாட்டில், திருநெல்வேலிச் சீமையில், நெல்லையம்பதிக்கு வடகிழக்கே, நாற்பது மைல் தொலைவில், பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அழகிய வீரபாண்டியபுரம் என்றொரு நகரம் இருந்தது. அந் நகரில் அமர்ந்து, ஜக வீரபாண்டியன் என்னும் பெயரினையுடைய மன்னன், அரசு புரிந்துவந்தான். அவன் மதுரைப் பாண்டிய மன்னர் மரபில் தோன்றியவன் ; நல்ல அறிவும் நற்குணங்கள் பலவும் பொருந்தியவன் ; குடிமக்கள் அவனைக் குலதெய்வமேபோல் போற்றி வந்தனர்.

அக்காலத்தில், அழகிய வீரபாண்டியபுரத்திற்குச் சிறிது தொலைவிலுள்ள *சாலிகுளம் என்னுமூரில், பால்ராஜா என்பான் ஒருவன் வாழ்ந்து வந்தான். இங்கு வருமுன்னர், அவன், பல்லாரி நாட்டில் வாடிக்கோட்டைப் பகுதிக்குச் சிற்றரசனாக இருந்தவன். அவன் மனைவியின் பெயர் வீரலக்கம்மாள். இவர்கட்கு எட்டாவது பிள்ளையாகப் பொம்மு என்பவன் பிறந்தான். சில ஆண்டுகளான பின், அப் பகுதியில் மூன்று வருடகாலம் மழை பொய்த்துவிட்டது. மக்கள் பெருந் துன்பங்கட்காளாயினர். அரசாங்கம் நிலைகுலைந்தது. அரசன் செய்வகை யறியாது திகைத்து நின்றான். அச் சம

* இது மணியாச்சிக்கு வடகிழக்கே 10 மைல் தொலைவிலுள்ளது.



யத்தில், அத் தேயத்தை ஆண்டுவந்த இஸ்லாமிய மன்னனொருவன் பால்ராஜாவின் புதல்வியை மணம் புரிய விரும்பிப் பரிசம் பேசினான். அதனைக் கேட்ட சிற்றரசன் மனம் வருந்தினான். இங்ஙனம் தன் குலப் பெருமை குன்றுவதைப் பொறுக்க இயலவில்லை ; ஆனால், முகம்மதிய மன்னனுடன் எதிர்த்துப் போரிடவோ வன்மையில்லை. எனவே மனைவி மக்களும், உறவினரும், ஆநிரைகளும், உடன் தொடர்ந்து வர, இரவோடிரவாகத் தென்னாடு போந்து, சாலிகுளத்தை யடைந்தான். அங்கே வேலி வளைத்துக் கன்றுகாலிகளை நன்கு பாதுகாத்து, உற்றாருடன் உறைந்திருந்தான். அப்பொழுது அவனுடைய அருமை மகன் பொம்முவுக்கு வயது பதினாறு.

சாலிகுளத்தில் வாழ்ந்துவந்த பொம்மு, கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி, படைக்கலப் பயிற்சி பெற்று, வளர்ச்சியும் வனப்பும் வாய்ந்த இளைஞனாய்த் திகழ்ந்தான். ஓர்நாள், நள்ளிரவில் கொள்ளையடித்துக் கொண்டு அவ்வழியே வந்த கள்வர் கூட்டத்தினரை, அவன் ஒருவனாகவே எதிர்த்து நின்று தாக்கி வீழ்த்தி வெற்றி பெற்றான். இவனது ஆற்றலைக் கண்டு பெற்றோரும் உற்றோரும் பெரிதும் மகிழ்ந்தனர். அவனைக் ‘ கெட்டி பொம்மு ’ என்று அருமை பாராட்டி உவந்து அழைத்தனர். மேற்குறித்தபடி அவனது இயற்பெயர் பொம்மு என்பது; தனித்து நின்று அவன் காட்டிய ஆண்மையை நோக்கிக் கெட்டி எனச் சிறப்பித்தனர். ‘ கெட்டி

பொம்மு' என்னும் தெலுங்குப் பெயர், நாளடைவில் கட்டபொம்மு எனத் தமிழில் மருவி வழங்கலாயிற்று. அவ்வமயம் அவன் இருபத்தொரு வயது வாய்ந்த இளங்காளை.

இங்ஙனம் இருந்து வருங்கால், ஜகவீரபாண்டியனைப் பகைத்து வந்த மறவர் குலக் குறுநில மன்னர் இருவர், அவனை எதிர்த்துப் போர் துவக்கினர். மன்னன் மிக வருந்தி அலமந்து நின்றான். அந்நிலையில் கட்ட பொம்முவினது அருந்திறலைக் கேள்வியுற்று, அவனுக்குப் படைத்தலைமை வழங்கி, பகைவருடன் போர் புரிய அனுப்பினான். இளைஞனும் படைத்தலைமை வகித்துப் போரில் வாகை மாலை சூடித் திரும்பி வந்தான். அதனையறிந்த அரசன் அகமிக மகிழ்ந்து, அவ்வீரனை அவைக்கு வரவழைத்துப் பல சிறப்புக்களைச் செய்து, வீரபாண்டியன் என்ற பட்டப் பெயரை அளித்தான். அன்றுமுதல் இருவரும் உள்ளன்புடன் ஒழுகி வந்தனர். மன்னனுக்குச் சந்ததி இல்லாமையால், முடிவில் அரசுரிமையை அவ் விளைஞனுக்கே அளித்து விண்ணுலகடைந்தான். வீரபாண்டியக் கட்டபொம்மு அரியணையில் அமர்ந்து அரசு செலுத்தலானான்.

வீரபாண்டியக் கட்டபொம்மு, கம்பளசாதியில் தோக்கலவார் அல்லது தொட்டிய நாயக்கர் என்னும் குலத்தினர். ஆதியில் இவர்கள் கம்பிலி நாட்டில் வசித்து வந்தவராதலின், இவர்களுக்குக் கம்பளத்தார் என்றும் பெயருண்டு. இவர்கள் தாய்மொழி



தெலுங்கு. அப் பிரிவைச் சேர்ந்த கட்டபொம்மு, அரசுரிமை பெற்றதும், ஒரு புதிய தலைநகரம் நிருமிக்க நினைத்து, அதற்கேற்ற இடமொன்றைத் தேடி நின்றார். அதுகாலை, அவருடைய படைவீரருட் சிலர், சாலிகுளத்துக் காட்டில் வேட்டையாடச் சென்றனர். வீரபாண்டியபுரத்திற்கு இரண்டு கல் தொலைவிலுள்ள ஓரிடத்தில், தம் வேட்டைநாய்களையெல்லாம் முயலொன்று துரத்தும் அதிசயத்தைக் கண்டனர். உடனே இதனைத் தம் தலைவரிடம் தெரிவித்தனர். அவ்விடமே தலைநகருக்கு ஏற்றதெனக் கட்டபொம்மு திட்டமாகக் கொண்டார். அவ்விடத்தில் கோட்டை கொத்தளங்களை அமைத்து, தமது பாட்டனாராகிய பாஞ்சாலன் என்பாரது நினைவுக் குறியாகப் பாஞ்சாலங் குறிச்சி என்ற பெயரை அக் கோட்டைக்கு வழங்கினார். இது 'பாஞ்சை' என்றும் சுருக்கிக் குறிக்கப்படும். இம் மன்னவன் அரசுரிமை பெற்றது கி.பி. 1101-ம் ஆண்டில். அவர் ஆந்திர நாட்டினின்றும் தம் இனத்தார் பலரை அழைத்து வந்து, தென்னாட்டில் குடிபுகும்படி செய்தார். அவருக்குப் பின் அரசுரிமை பெற்றவர் அனைவரும் கட்டபொம்மு என்ற பெயரை மரபுப் பெயராகச் சூட்டிக்கொண்டனர்.

ஆதிக் கட்டபொம்முவின் வழிமுறையில் நாற்பத்தெட்டு மன்னர்கள் சற்றேறக்குறைய எழுநூறு ஆண்டுகள் ஆட்சி புரிந்து வந்தனர். அவர்களுள் நாற்பத்தாறுவது மன்னராக இருந்தவர் ஜெகவீரக் கட்டபொம்மு. இவர் காலத்தில் தென்னாடு முழு

வந்தும் ஆர்க்காட்டு நவாபுக்கு உட்பட்டிருந்தது. ஆனால் அது அவருக்கடங்காமல் குழப்பம் விளைத்து வந்தது. நவாபின் பிரதிநிதியான சாதிகான் பாஞ்சை மன்னரைக் கண்டு துணைவேண்டினார். ஜெகவீரபாண்டியரும் இசைந்து, திக்குவிசயம் செய்து, குழப்பங்களையடக்கி, நவாபுக்குச் சேர வேண்டிய வரிகளை வசூலித்துத் தந்தார். அதன்பின் வசூலாகும் தொகையில் ஆறிலொரு பங்கை இவர் எடுத்துக் கொண்டு, எஞ்சியதை நவாபுக்கனுப்பினால் போதுமென்று சாதிகான் நன்றியுடன் சொல்லித் திரும்பினார். பாஞ்சை மன்னர் திக்குவிசயன் என்னும் பெயரோடு திகழ்ந்தார். இவர் திருச்செந்தூர் முருகனிடத்தில் சிறப்பு முறையில் பக்தி பூண்டவர். இவருக்கும் இவர் மனைவியாகிய ஆறுமுகத்தம்மைக்கும் 3-1-1760-ல் ஓர் அருமை மைந்தர் தோன்றினார். அம் மைந்தரே பிற்காலத் தமிழ் நாட்டின் பெருமையை நிலைநாட்டிய மாபெரும் வீரர்—வீரபாண்டியக் கட்டபொம்மு.

இத் திருமகன் பிறந்து ஆறு யாண்டுகள் கழிந்த பின், அவனுக்குத் தம்பியாக ஒரு மகன் உதித்தான் இவனுக்குத் தளவாய்க் குமாரசாமி என்று பெயரிட்டனர். அவன் திக்கித் திக்கிப் பேசும் இயல்புடையவன். ஆதலால், அவன் பிறருடன் அதிகமாக உரையாடாமல் பெரிதும் மௌனமாக இருந்து வந்தமையால் ஊமைத்துரை எனப் பெயர் பெற்றான். இவனுக்குத் தம்பியாகத் துரைச்சிங்கம் என்ற புதல்வன் பிறந்தான். இவனுடைய செல்லப் பெயர் சுப்பையா. சுப்பையாவுக்குப் பின் ஈசுர வடிவு, துரைக்கண்ணு என்னும் இரு புதல்வியர் தோன்றினர். குமரர் மூவரும் கலைகள் பல பயின்று உடற்பயிற்சியிலும் படைப்பயிற்சியிலும் வல்லமை பெற்று விளங்கினர். அறிவும் வலிமையும் ஒருங்கே அமையப்பெற்று,கண்கவர் வனப்புடன் விளங்கிய கட்டபொம்முக்கு உரிய வயதில் வீரசக்கம்மாள் என்ற பெண்மணி வாழ்க்கைத் துணைவியாக வாய்த்தாள்.



திக்குவிசயர் தமது அரசுரிமையைப் பெரும் சிறப்புடன் தமது அரும்பெறல் மைந்தர் வீரபாண்டியருக்கு நல்கினார். அப்போது (2-2-1790) வீரபாண்டியக் கட்டபொம்முவுக்கு வயது முப்பது. தம்பியரிருவரும் இளவரசராக அமர்ந்தனர். வேளாளர்மரபிலுதித்த சிவசுப்பிரமணிய பிள்ளை என்பவர் அமைச்சராக அமர்ந்தார். இவரைத் தானபதிப் பிள்ளையென்றும், பிள்ளைமகன் என்றும் மக்கள் அழைத்து வந்தனர். இவர் மதிநுட்பம் மிகுந்தவர்.

வீரபாண்டியர் சிவந்த மேனியர் ; ஒளிவீசும் வட்டமான முகத்தினர்; கருத்த கண்களும், அடர்ந்த புருவமும், படர்ந்த நெற்றியும் படைத்தவர் ; திரண்டுயர்ந்த தோளினர் ; அடர்ந்த மீசையினர்; நீண்ட கைகளும் அகன்று நிமிர்ந்த மார்பும் அவருடைய வனப்பைப் பன்மடங்காக்கின. ஏறுபோன்ற நடையும், பெருமிதத் தோற்றமும், கேட்போரைப் பரவசப்படுத்தும் இனிய சொற்களும், கனிந்த உள்ளமும் அவருடைய இயற்கைப் பண்புகள்.

இவரது தம்பியர் இருவரும் ஆற்றல் மிக்கவர்கள். இவர்களைக் கலக்காமல் கட்டபொம்மு எக் காரியத்தையும் மேற்கொள்ளார்.

ஊமைத்துரைக்கு வெள்ளையரைக் கண்டால் வேம்பு. சில வேளைகளில் இவர் தம் இடது உள்ளங்கையில் வைக்கோல் துரும்புகளை வைத்துக்கொண்டு, வாயினால் ஊதி அவற்றைப் பறக்கச் செய்வார். வெள்ளையரை வைக்கோல் துரும்புகளைப்போல் ஊதிப்போடவேண்டும் என்ற கருத்தே இச் செயலின் உட்குறிப்பாகும். வெள்ளையர் இவரை 'டம்பு பிரதர்' (Dumb brother) என்று அழைத்தனர்.

இவ்வகைத் திறன் வாய்ந்த தம்பியருடனும் அமைச்சருடனும் வீரபாண்டியக் கட்டபொம்மு அரசுரிமை ஏற்றார்.

## 3. பாஞ்சாலங் குறிச்சி

தென்னாட்டில் பாண்டியருடைய ஆட்சியும் சோழருடைய ஆதிக்கமும் மறைந்த பின்பு, பல மன்னர்கள் சிறுசிறு பகுதிகளை ஆண்டுவரலாயினர். கி. பி. 1404-ம் ஆண்டில் விஜயநகரத்தார் தென்னாடு நுழைந்து பாண்டிய நாட்டைத் தமது மேற்பார்வையில் கொணர்ந்தனர். ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர், விஜயநகர சாம்ராஜ்யத்தின் வலிமை குறையலாயிற்று. அப்பொழுது விஜயநகர மன்னருக்குப் பதிலாகத் தென்னாட்டை ஆண்டு வந்த பிரதிநிதிகள், தமது மண்டிலங்களைத் தாமே ஆட்சி புரியத் தலைப்பட்டனர். அது கண்ட விஜயநகர மன்னர் தென்னாட்டுக்குப் படைகளை அனுப்பி, அந்தப் பிரதிநிதிகளை வென்று, நாட்டைச் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியையும் ஒவ்வொரு படைத்தலைவனிடம் ஒப்புவித்தார். விஜயநகரம் அழிந்ததும், படைத்தலைவர்களே அந்தந்தப் பகுதிகளுக்குக் குறுநில மன்னராயினர். இங்ஙனம் தோன்றிய குறுநில மன்னரே பாளையக்காரர். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு பாஞ்சாலங் குறிச்சியும் ஒரு பாளையப்பட்டாக மாறிற்று.

அக் காலத்தில் நெல்லை மண்டலத்தில் முப்பது பாளையப்பட்டுக்கள் இருந்தன. இவ் வட்டங்களெல்லாவற்றிலும் செல்வம், வீரம், கொடை

முதலிய நலங்களில் பாஞ்சாலங் குறிச்சியே தலை சிறந்து விளங்கியது. இது தொண்ணூற்றாறு கிராமங்களைக்கொண்டது. இவை ஆறு வணிதங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத்திலடங்கிய ஆறு வணிதங்களிலுமிருந்த குடிமக்கள் தம் பாளையக்காரருக்கு வரி செலுத்தி வந்தனர். அவ் வரியானது ஆடுமாடுகளாகவோ, தானியமாகவோ, பணமாகவோ வசூலிக்கப்பட்டு வந்தது. மேலும் பாஞ்சாலங் குறிச்சிப் பாளையப்பட்டுக்குத் தலங் காவல், திசைகாவல் என்ற இரு உரிமைகளும் இருந்தன. ஆர்க்காட்டு நவாபுக்குச் சொந்தமான பகுதிகளைப் பாதுகாப்பதற்கு அப் பகுதிகளில் வாழும் மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரித் தொகையே தலங்காவல் வரியாகும். நவாபின் இராச்சியத்தையும் எல்லைப்புறங்களையும் பாதுகாப்பதற்காக நவாபினிடமிருந்து பெற்றுவந்தபொருளே திசைகாவல் என்பது. நெல்லைச் சீமையிலிருந்த முப்பது பாளையக்காரர்களிடமிருந்தும் கட்டபொம்மு தாமதமின்றி இறைப்பணத்தை வசூல் செய்து, அதில் தமக்கு ஒரு பகுதி எடுத்துக்கொண்டு, மீதியை ஆர்க்காட்டு நவாபுக்கு அனுப்பிவந்தார். இந்த வருவாய்கள் வாயிலாகத் தமது படையைப் பெருக்கி, கொலைகளவுகளைத் தடுத்து, நாட்டில் நீதியையும் அமைதியையும் நிலைநாட்டி, அடைந்தோரை ஆதரித்து, குடிமக்கள் அனைவரையும் பாதுகாத்து வந்தார். மற்ற பாளையக்காரர்கள் இவரைப் பின்பற்றியே ஆண்டு வந்தனர். இவரது புகழ் தென்னாடு முழுதும் பரவலாயிற்று.



தமிழ்நாட்டில் வழங்கிவரும் நாடோடிப்பாடல்களில் இவருடைய ஆட்சி பின்வருமாறு புகழப்பட்டுள்ளது: நாடெங்கும் வாவிகளும் குளங்களும் சோலைகளும் அன்னசாலைகளும் நிறைந்திருந்தன. வாழையும் பலாவும் சுவைமிகுந்த பழம் சொரியும் மாமரங்களும் கமுகும் சோலைகளில் காணப்பட்டன. நந்தவனங்களும் சந்தனச் சோலைகளும் செந்நெல் விளையும் வயல்களும் காண்போர் கண்களைக் கவரும் தன்மையவாக விருந்தன. நகரில் விந்தைவிந்தையான வீதிகளும், விஸ்தாரமான கடைகளும், வாரணச்சாலையும், பரிவளரும் சாலையும், அங்கங்கே தோரண மேடைகளும் ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்தன. தென்பாஞ்சைப்பதி நாட்டில், முயல் திரும்பி நாயைத் துரத்துமாம். பசுவும் புலியும் ஓர் துறையில் ஒரு பக்கமாய் நின்று நீர் அருந்துமாம்! கட்டபொம்முவின் பேரைச் சொன்னால் கறந்த பாலையும் காகம் குடிக்காதாம்! இந்த வர்ணனை சிறிது மிகைபடக் கூறுவதாக நமக்குத் தோன்றினாலும், இதிலிருந்து நாட்டின் சீரிய நிலைமையை நாம் ஒருவாறு நிதானிக்க இயலும்.

கட்டபொம்முவின் சேனையில் கம்பளவர், மறவர், கவுண்டர் முதலிய பல இனங்களைச் சேர்ந்த பதினாயிரவர் போர்த்தொழில் புரிந்து வந்தனர். வேல், வாள், வல்லயம், ஈட்டி முதலியவை படை வீரரின் முக்கிய ஆயுதங்கள். இவையேயன்றி,

ஆயிரக்கணக்கான கம்புகளும் வில், கவண், வெடி, பரசு, பிண்டி, பாலம் முதலியனவும் நூற்றுக் கணக்கில் இருந்தன. இவருடைய படையில் குதிரைகளும் யானைகளும் ஒட்டகங்களும் இருந்தன. போர் வீரர் யாவரும் பாளையத்தைச் சேர்ந்த குடிமக்களே. தேவையானபொழுது நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆண்மகனும் போர்வீரனாகி விடுவான்; அப்பொழுது மன்னன் அவனுக்கு உணவும் உடையும் அளிப்பான்; போர் முடிந்தவுடன் வீரன் தன் முன்னைய தொழிலை மேற்கொள்வான்.

கட்டபொம்மு சவாரிசெய்வதற்கு நூற்றிருபது குதிரைகளும் நான்கு யானைகளும் இருந்தன. பெட்டி வண்டி இழுக்கும் காளைகள் இருநூற்றைம்பதும், களியாட்டத்திற்குரிய செம்மறிக்கடாய்கள் அறுபதுமிருந்தன. முத்துராமு என்பது வீரபாண்டியரது பட்டத்து வெண்பரி. அது வேகத்திலும் பெருமிதத்திலும் இணையற்றது; அதன்மீதுதான் அவர் பவனி வருவது வழக்கம். அவர் குல தெய்வம் திருச்செந்தில் முருகன். அக்கோயிலுக்கு அவர் நானூறு ஏக்கர் நிலம் மானியம் அளித்தார். மேலும் தாமும் தேவியாரும் அணிந்திருந்த அணிகலன்கள் அனைத்தையும் அம் முருகனுக்கே அர்ப்பணம் செய்தார். அவருடைய அறச்செயல்கள் பல. அறத்தை ஆருயிரெனக் காத்தார்; கலையும் வளமும் ஓங்கச் செய்தார். இவருடைய ஆட்சியில் நல்லோர் நலம் பெற்றனர்; வஞ்சகர் ஒடுங்கினர். தென் பாண்டிநாடு முழுதும் இன்புற்று வாழ்ந்து வந்தது.



பாஞ்சை நகரையும் அதன் மன்னரையும் பாஞ்சைக் கோவையின் ஆசிரியர், "வெற்றிமிகு திருவோடு வீரமிகு பாஞ்சையினில் விளங்குகின்றான்" என்று சிறப்பித்துப் பாடியுள்ளார்.

இம் மாண்புடைய பாஞ்சலங் குறிச்சி என்னும் நகரின் நடுவில் ஒரு கோட்டை அமைக்கப்பெற்றிருந்தது. கோட்டையின் நாற்புறங்களிலும் வாயில்கள் இருந்தன; தெற்கு வாயிலே பிரதான வாயில். கோட்டை பார்வைக்கு அழகாக இருந்ததெனச் சொல்வதற்கில்லை. ஆனால் அது மிகுந்த வன்மை வாய்ந்தது. நகரைச் சுற்றிலும் மதில்கள் அரண்களாக அமைந்திருந்தன. கோட்டையின் நீளம் ஐந்நூறு அடி; அகலம் முந்நூறு அடி. மதில்கள் மண்ணாலானவை. அந்த மட்சுவர்கள் பனஞ்சாற்றினாலும் இராகிக் கூழாலும் பிசைந்து கட்டப்பட்டிருந்தன. ஆதலால் அவை கற்சுவர்போல் உறுதி பெற்று வன்மை மிகுந்து விளங்கின. சுவர்களின் அடிப்பாகம் பதினைந்து அடி கனம்; உச்சி மூன்று அடி கனம்; உயரம் பன்னிரண்டு அடி. இவை உட்புறம் சரிவாகவும் வெளிப்புறம் செங்குத்தாகவும் அமைக்கப்பட்டிருந்தன. இச்சுவர்கள் இரட்டையாக அமைக்கப்பட்டிருந்தன; நடுவில் உமி, பதர், வரகு, வைக்கோல், கம்பு முதலிய பொருள்கள் நிரப்பப்பெற்றிருந்தன. அதுகாரணம் பற்றி இச்சுவர்களை எளிதில் தகர்க்க இயலாது. நமது நாட்டுச் சரித்திரத்தில் புகழ்பெற்றுள்ள பரதபுரிக் கோட்டையை இடிப்பதற்கு ஆங்கிலேயர் செய்த

முயற்சிகள் யாவும் பயனற்றுப்போகவில்லையா? அதுவும் மண்ணால் அமைக்கப்பட்ட கோட்டையே. மதிற்சுவர் வெளிப்புறத்தில் செங்குத்தாக இருப்பதால், வெளியிலிருந்து தாக்குபவர் மதில்மேல் ஏறி உட்செல்ல இயலாது; உள்ளிருப்போர் மட்டும் எளிதில் மதிற்சுவரின் மேல் ஏறக்கூடும்.

கோட்டையின் நான்கு மூலைகளிலும் கொத்தளங்களும், நடுவில் கிளிக்கூண்டு போன்ற அலங்கங்களும் அமைக்கப்பட்டிருந்தன. போர்க் காலங்களில் கோட்டைக்குள்ளிருப்பவர்கள், தாம் இருக்கும் இடத்தைப் பிறர் அறியாவண்ணம், மறைந்திருந்துகொண்டு, வெளியிலிருக்கும் பகைவர் நிலையைத் தாம் அறிந்து போர்புரிய இவ்வலங்கங்கள் பயன்பட்டன. இவற்றிலிருந்து எதிரிகளின்மேல் துப்பாக்கிகொண்டு சுடவும் கூடும். கொத்தளங்களைச் சுற்றிலும் சிறிய மதில்கள் இருந்தன. மதிலின் உச்சியில் போர்வீரர் நடமாடுவதற்குச் சிறுபாதையும் கைப்பிடிச் சுவரும் உண்டு. இவைகளேயன்றி கோட்டையின் உட்புறத்தில், சுண்ணாம்புக் காரையினால் கட்டப்பட்ட மற்றொரு கோட்டையும் இருந்தது. கோட்டை அமைக்கப்பட்டிருந்த இடம் ஒரு சமவெளி; சுற்றிலும் அகழ் இல்லை. ஆதலால், பாதுகாப்புக்காகக் கோட்டையைச் சுற்றிலும் இலந்தை மரங்கள் அடர்ந்த காடு ஒன்று வளர்க்கப்பட்டிருந்தது.

கோட்டையின் உட்புறத்தில் கட்டபொம்முவின் அரண்மனை இருந்தது. அவரும் அவருடைய சுற்றத்தாரும் அதில் வசித்து வந்தனர். அவர்களுடைய குலதெய்வமாகிய சக்கம்மாதேவிக்கு ஒரு



ஆலயமும் இருந்தது. நெற்களஞ்சியங்களும் ஆயுத சாலைகளும் கோட்டைக்குள்ளிருந்தன. கோட்டைக்கு வெளிப்புறம் பெரிய சாலை ஒன்றும், அதன் தெற்கிலும் கிழக்கிலும் முறையே வேதியர் வீதியும் வேளாளர் வீதியும் இருந்தன; மேற்கிலும் வடக்கிலும் மற்றையோர் வதியும் வீதிகள் அமைந்தன.

இவ்வளவு சிறப்புக்கள் வாய்ந்த பாஞ்சாலங் குறிச்சியிலிருந்துகொண்டு வீரபாண்டியக் கட்டபொம்மு நாயக்கர் ஆண்டு வந்தார். அவர் துரைத்தனம் செய்த விதத்தைப் பின்வரும் நாடோடிப் பாடல் நன்கு விளக்குகிறது:

"வேட்டைக்குப் போவதும், கோட்டைக்கு வருவதும்,
விஸ்தார மாய்வினை யாடுவதும்,
தாட்டிக மாய்ச் சேவல் கட்டுவதும்,
தன்னர சாய்ச்சீமை யாளுவதும்,
வில்லுங் கையுமாகத் திரிவ தும், வரி
வேங்கைப் புலிபோலே வருவதும்,
முல்லை யரும்பு தொடுப்பதும், கன
மோடியாய்க் கூடி நடப்பதும்,
சொல்லுய ருந்திருச் செந்தூ ரிற்சிவ
சுப்பிரம ணியரைப் பூசிப்பதும்,
ஆயி மனோன்மணி சக்கதேவி பொம்மி
யம்மன் பூசை தின முடிப்பதும்,
நியாய விசாரணை கேட்பதும், அந்த
நியாயம் பைசல் பண்ணித் தீர்ப்பதும்,
ஏழை பரதேசிக் கன்னம் கொடுப்பதும்,
இந்திரன் போற்கொலு விருப்பதும்,
இப்படியாகத் துரைத்தனம் செய்து கொண்
டேயிருந்தான் கட்டபொம்முத் துரை."

# 4. வர்த்தகக் குழுவினர்

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் மேல் நாட்டினர் கீழ் நாடுகளுடன் வாணிபம் செய்யத் தொடங்கினர். அதன் பயனாகப் பல ஐரோப்பிய வணிகக் குழுவினர் கீழ் நாடுகளில் பல பண்டசாலைகளை அமைத்துப் பெரும்பொரு ளீட்டலாயினர். இங்ஙனம் தோன்றிய குழுக்களில் கிழக்கிந்தியக் கம்பெனியும் (East India Company) ஒன்றாகும். இக் குழுவினர் ஆங்கில நாட்டவர். இவர்களுக்குக் கும்பினியார் என்ற பெயர் நமது நாட்டில் வழங்கலாயிற்று. தமிழகத்திலும் இக் குழுவினருடைய பண்டசாலைகள் பல தோன்றின. பொருளீட்டுவதில் வெற்றிபெற்ற அக் குழுவினர், நாட்டு மக்களின் நிலையைக் கண்டு, தாமே நாடாளும் ஆசையை வளர்க்கலாயினர்.

ஆர்க்காட்டில் முகம்மதலி என்ற நவாபு ஆண்டுவந்த காலத்தில் தமிழகத்தின் பெரும்பாகம் அவரது ஆட்சிக்குள் அடங்கியிருந்தது : வேறு தனியரசு ஒன்றும் இல்லை. பாளையக்காரர் நவாபுக்கு வரிப்பணம் செலுத்தி வந்தனர். அந் நிலையில் முகம்மதலி தம் அரசுரிமைக் கடமைகளைக் கவனிக்காமல், அவருடைய போகபாக்கியங்களையே கருத்தில் கொண்டவரானார்: மக்களின் நலனைப் பேணாமல், வரிப்பணம் வசூலிப்பதில் மட்டும் கண்ணும் கருத்துமாக இருந்தார். அதனால் ஆட்சி நிலைகுலையத்



தொடங்கியது. நவாபின் உறவினர் நாட்டின் பல பாகங்களுக்குச் சென்று, வரிவசூல் திரட்டலாயினர். நாட்டில் அறம் சுருங்கிற்று; மறம் பெருகிற்று. வசூலாகும் வரிப்பணம் நவாபின் தேவைக்குப்போதவில்லை. அந்த நிலைமையில் ஆங்கில வர்த்தகக் குழுவினர் அவருக்குத் தேவையான பொழுதெல்லாம் செலவுக்குப் பணம் கொடுத்து உதவலாயினர். அக் கடனைத் திருப்பிக் கொடுக்க அவரால் இயலவில்லை. ஆதலால், பெற்ற கடன் தொகைக்கு ஈடாக நாட்டில் வரி வசூலிக்கும் உரிமையை வர்த்தகக் குழுவினருக்கு வழங்கி விட்டார். இதனால் ஆர்க்காட்டு நவாபுக்குக் கப்பம் செலுத்தி வந்த பாளையங்கள் யாவும் கும்பினியாரின் ஆட்சிக்கு உட்பட்டன. கும்பினி ஆட்கள் நாடுமுழுதும் வரிப்பணம் தண்டலாயினர். சென்னையில் அக் குழுவினரின் தலைமை நிலையம் இருந்தது. தமிழகத்தின் பல பகுதிகளில் பண்டசாலைகளையும் கோட்டைகளையும் அவர்கள் ஏற்படுத்திக்கொண்டனர். திருச்சிராப்பள்ளியிலும் திருநெல்வேலியிலும் கிளைச்சங்கங்கள் அமைத்தனர்.

நாட்டை ஆர்க்காட்டு நவாபு ஆங்கிலேயருக்கு உரிமை செய்ததை அறிந்த பாளையக்காரர் பலர், ஆங்கிலேயருக்கு வரிசெலுத்த மறுத்தனர். ஆனாலும் கும்பினியார் தமது உரிமையை விளம்பரப்படுத்தி, நவாபின் உதவியாலும் தமது படைபலத்தாலும் பாளையக்காரரை வற்புறுத்தி வரி வசூல் செய்து வந்தனர். இங்ஙனம் பாளையக்காரரில் பலர் கும்பினியாரின் ஆட்சிக்கு அடிபணியலாயினர்.

ஆனால் பாஞ்சாலங் குறிச்சியார் மட்டும் வரி கொடுக்க மறுத்தனர். இதன் பயனாக, ஆங்கில வர்த்தகக் குழுவினருக்குப் பாஞ்சாலங் குறிச்சியின் மீது பகை வளரலாயிற்று. எட்டையாபுரமும் பாஞ்சாலங் குறிச்சியும் ஒன்றுக்கொன்று அருகில் உள்ள பாளையங்கள். அவைகளிடையே நீண்ட காலமாக ஒற்றுமை நிலவி வந்தது. இவ்வுறவை வெள்ளையர் பிரிக்கத் தலைப்பட்டனர். தமது வலிமையைத் தமிழகத்தில் வளர்த்துக் கொண்ட கும்பினியார், நிலங்களை அளந்து அதிக வரி வசூல் செய்யக் கருதி, நில அளவை செய்ய முற்பட்டனர். லெப்டினன்ட் கர்னல் மாக்ஸ்வெல் என்பான் நில அளவை அதிகாரியாக அமர்ந்தான். அவ்வமயம் எட்டையாபுரத்தின் குறுநில மன்னராக விருந்த எட்டப்ப நாயக்கர், கர்னல் மாக்ஸ்வெல்லுக்குப் பேருதவி புரிந்து, கும்பினியாருடைய தயவைத் தேடிக் கொண்டார். ஏனைய பாளையக்காரரும் மாக்ஸ்வெல்லுக்குக் கீழ்ப்படிந்தனர். ஆனால் கட்டபொம்மு மட்டும் அவ்வாறு செய்யவில்லை. இது மாக்ஸ்வெல்லுக்கு மனக்கொதிப்பை உண்டாக்கியது. அதன் பயனாக மாக்ஸ்வெல் பாஞ்சாலங் குறிச்சியாருக்கு இடையூறு செய்ய முற்பட்டான்

1792-ம் ஆண்டில் நடந்த நில அளவையில், பாஞ்சாலங் குறிச்சியாருக்குச் சொந்தமாயிருந்த அருங்குளம், சுப்பலாபுரம் என்ற இரண்டு ஊர்களை மாக்ஸ்வெல் எட்டையாபுரத்துடன் இணைத்து விட்டான். இதனால் பாஞ்சாலங் குறிச்சிக்கும் எட்டையாபுரத்துக்கும் இடையில் பகை மூண்டது. எட்டையாபுரத்திலும் கும்பினியாரின் மற்றக் கிராமங்களிலும் பாஞ்சாலங் குறிச்சியார் கொள்ளையும் கலகமும் செய்யத் துவக்கினர்.



1755-ம் ஆண்டில் கர்னல் ஹீரான் என்பான் பாஞ்சாலங் குறிச்சியின்மேல் படையெடுத்தான். ஆனால் அவன் கோட்டையைத் தாக்காமலே திரும்பிச்சென்றான். 1783-ம் ஆண்டில் மேஜர் புல்லர்டன் என்பான் படைத்தலைமை தாங்கிவந்தான். அவ்வமயம் கட்டபொம்மு நாயக்கர் தலைநகரில் இல்லை. மேஜர் புல்லர்டன் கோட்டைக்குள் புகுந்து நாற்பதாயிரம் வராகன்களைக் கொள்ளையிட்டுச் சென்றான். அதன் பின்பும் பாஞ்சாலங் குறிச்சியார் அடிபணியவில்லை. வீரபாண்டியக் கட்டபொம்மு அரசுரிமை ஏற்றபின், டோரின் என்பவன் 1792-ம் ஆண்டில் இராமநாதபுரம் கலெக்டராகப் பதவி ஏற்றான். அவனுக்கு மாத ஊதியம் 250 வராகன். இது நீங்கலாக, வரிவசூலில் நூற்றுக்கு ஒன்றரை வீதம் தரகு உண்டு. இவனுக்குத் தேவையான பொழுது வரிவசூலுக்கு உதவி செய்யப் பாளையங்கோட்டையில் ஒரு படையும் வைக்கப்பட்டிருந்தது. ஆனாலும் கும்பினியாரின் வலிமையைக்கண்டு கட்டபொம்மு மனங்கலங்கவில்லை.

நல்லரசின்றித் தமிழகம் தவிப்பதைக் கண்டு காட்டுப்பற்று மிகுந்த வீரபாண்டியர் மனம் நொந்தார். தென்பாண்டி நாட்டளவிலேனும், அந்நிய

ராட்சி நிலைப்பதைத் தடுக்க வேண்டுமென்று விரதம் பூண்டார். அந் நாட்டிலிருந்த பாளையக்காரரில் சிலர் அவருக்குத் துணையாக நின்றனர். மீதிப் பேர் சுய நலமே சுவர்க்கம் என மதித்துக் கும்பினியாருக்குக் கப்பங் கட்டி வாழத் தலைப்பட்டனர்.

இந் நிலையில் கி.பி. 1798-ல் ஆலன் துரை என் பான், எவ்வாறாயினும் பாஞ்சாலங் குறிச்சியாரிட மிருந்து வரிவசூல் செய்யவேண்டும் என்ற நோக்கத் துடன் பாஞ்சைப்பதி வந்து சேர்ந்தான். ‘காகம் பறவாத கட்டபொம்முவின் கோட்டை’யை அணு கிக் கம்பெனியாருடன் நல்லுறவு கொள்வதே நலம் என்று எடுத்துரைத்தான். வரி என்ற பெயரால் சிறிது பொருள் அளித்தாலும் போதும் என்றும், இல்லையேல் பாளையக்காரரில் பலர் வரி கொடுக்க மறுத்து விடுவர் என்றும் சொல்லி மன்றாடினான். ஆனால் கட்டபொம்மு வரி கொடுக்க இசையவில்லை. “வரி என்ற பெயரால் அரைக்காசும் கொடுக்க மாட் டோம்” என்று திட்டமாகக் கூறிவிட்டார். ஆலன் துரை கும்பினி நிர்வாகிகளுக்குத் தமது தோல்வியை விளக்கமாக எழுதியனுப்பினான். கும்பினித் தலை வர்கள் கூடி ஆலோசித்தனர். பாஞ்சாலங் குறிச்சி யாரோடு மற்றப் பாளையக்காரர் உறவு கொள் வதைத் தடுத்து, பாஞ்சாலங் குறிச்சியின்மீது பல புகார்களை எழுப்பவேண்டும் என்றும், இறுதியாகப் போர் தொடுக்க வேண்டும் என்றும் அன்னார் முடிவு செய்தனர். அதன் பயனாகப் பாஞ்சாலங் குறிச்சி



யார்மீது கோள் கூறும்படி மற்ற பாளையத்தாரைத் தூண்டினர்.

கும்பினியாரின் முடிவை ஆதரித்து எட்டையா புரத்தின் பாளையக்காரர் பாஞ்சாலங் குறிச்சியார் பேரில் புகார் எழுப்பினார். தமக்குப் பாஞ்சாலங் குறிச்சியார் தொல்லை கொடுத்து வருவதால் கட்டபொம்முவை அடக்கித் தம்மைக் காப்பாற்ற வேண்டுமென்று கோரினார். ஊற்றுமலை, சிவகிரி முதலான பாளையத்தலைவர்களும் கட்டபொம்முவின் மேல் பழிகூறினர். இவற்றின் பயனாக வெள்ளையர் பாஞ்சாலங் குறிச்சியாரை வம்புக்கிழுக்கலாயினர்.

# 5. ஜாக்ஸன் சூழ்ச்சி

கும்பினியாருக்குக் கட்டபொம்முவின்மீது புகார்கள் வந்து குவிந்த வண்ணமாக இருந்தன. பாஞ்சாலங் குறிச்சியை எவ்வகையிலாயினும் தமது ஆட்சியின்கீழ்க் கொண்டுவரவேண்டும் என்று வெள்ளையர் முடிவு செய்தனர். அத் தீர்மானத்தை நிறைவேற்றுந் திறமை வாய்ந்த ஒருவனை இராமநாதபுரம் கலெக்டராக நியமித்தனர். 1797-ம் ஆண்டில் துடுக்கு மிகுந்த ஜாக்ஸன் என்பான் கலெக்டர் பதவியை ஏற்றான். எட்டப்ப நாயக்கர் முதலான பாளையக்காரர் பலர் ஜாக்ஸனைப் பாளையங் கோட்டையில் கண்டு தமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர். ஆனால் பாஞ்சைப்பதியின் தலைவர் வந்து கலெக்டரைக் கண்டுகொள்ளவில்லை.

பாஞ்சைத் தலைவரும் அவருடைய ஆட்களும் கும்பினியாரைச் சற்றும் மதிக்காமல் பல விடங்களில் கொள்ளையடிப்பதாகவும், கால் நடைகளை வளைத்து ஓட்டிச் செல்வதாகவும், தூத்துக்குடியில் வெள்ளையர் வீடுகளில் கொள்ளையடித்ததாகவும், காடுகளையும் பயிர் பச்சைகளையும் தீக்கிரையாக்கினதாகவும், அவர்களுடைய துஷ்டத்தனத்தை எடுத்துரைக்க இயலாது என்பதாகவும் எட்டையாபுரத்தார் ஜாக்ஸனிடம் செய்தபுகாரில் பலவாறு குற்றஞ் சாட்டியிருந்தனர். அவற்றைக்கேள்வியுற்ற ஜாக்ஸன் சினங்கொண்டெழுந்தான். "அங்ஙனமாயின், கட்டபொம்முவை நேரிலே வரவழைத்து அவனுக்குப்



பாடம் கற்பிக்கிறேன். நமக்குச் சேரவேண்டிய வரிப்பணத்தை அவன் இன்றுவரை செலுத்தவில்லை" என்று கூறி, உடனே ஒரு வாரத்திற்குள் தன்னை வந்து காணவேண்டும் என்றும், வரிப்பணத்தை அனுப்பிவைக்கவேண்டும் என்றும் ஒரு கடிதம் வரைந்தான். அதற்கு ஏதும் பதில் கிடைக்கவில்லை. மூன்று மாதங்கள் கழித்து, கிஸ்தி பாக்கிகளை வசூல் செய்வதற்கு வைகுண்டம் பிள்ளை என்பவனைக் கட்டபொம்முவினிடம் அனுப்பினான். வரிப்பணத்தை அனுப்பாவிடில் உடனே புறப்பட்டு வந்து நேரில் தன்னைக் காணவேண்டும் என்று ஒரு கடிதமும் அனுப்பினான். இதற்கும் மறுமொழி கிடைக்கவில்லை. மீண்டும் பாஞ்சைக் காவலருக்கு ஓர் அறிக்கை அனுப்பப்பட்டது. அதில், "உடனே வந்து கலெக்டரைக் கண்டு கொள்ளாவிடில் உமது அழிவு திண்ணம்" எனக் கண்டிருந்தது.

இக் கடிதங்களால் ஜாக்ஸன் எதிர்பார்த்த பலன் ஏதும் கிட்டவில்லை : வரிப் பணமும் கிடைக்கவில்லை ; பதிலும் வரவில்லை ; கட்டபொம்முவும் கலெக்டரைக் காணச் செல்லவில்லை. மிகவும் ஏமாற்றம் அடைந்த ஜாக்ஸன் ரெவினியூ போர்டுக்குப் பின்வரும் கருத்துக்கள் அடங்கிய கடிதங்கள் பல வரைந்தான்: "பாஞ்சாலங் குறிச்சியார் இதுவரை கும்பினியாருக்குச் சேரவேண்டிய வரிப்பணத்தைக் கட்டவில்லை. கும்பினியாரின் கிராமங்களிலும் அவர்களே வரி வசூலித்து விடுகின்றனர். வரிப்பணத்திற்கு

மட்டுமின்றி, கும்பினியாரிடம் முன்பணம் பெற்றுத் தறி நெய்பவர்கள் கொடுக்கவேண்டிய தொகைக்கும் இதனால் மோசம் வரும். அதனால் வியாபாரத் துறையில் கும்பினியாருக்குப் பெரு நஷ்டம் ஏற்படும். பாஞ்சையில் கட்டபொம்மு இருக்கும் வரை அப் பாளையத்தை நாம் வசப்படுத்த முடியாது. வரிகொடாதிருப்பின், அவருடைய பாளையம் பறிமுதல் செய்யப்படும் என்று அவருக்கு அறிவிக்கவேண்டும். கட்டபொம்முவைப் பணியவைக்கப் பாளையங்கோட்டையிலிருந்து ஒரு படையை அனுப்பிவைக்கவேண்டும்." பின்பு, உண்மையை விசாரித்து உசிதம்போல் நடக்கக் கும்பினியார் ஜாக்ஸனுக்கு அனுமதி அளித்தனர்.

இறுதியாக ஜாக்ஸன் வீரபாண்டியருக்கு ஒரு கடிதம் அனுப்பினான். அவர் 5-9-1798-க்குள் தன்னை வந்து காணவேண்டுமென்றும், இன்றேல் பாஞ்சையின்மேல் படையெடுக்க நேரிடும் என்றும் எழுதி, அக் கடிதத்தை இரண்டு வீரர் வசம் பாஞ்சாலங்குறிச்சிக்கு அனுப்பினான். கட்டபொம்மு கடிதத்தைப் படித்துப் பார்த்து, "இன்னும் ஒரு வாரத்தில் ஜாக்ஸனை வந்து காண்போம்" எனக் கூறி அவ் வீரரை அனுப்பிவிட்டார். பின் தமது தம்பியரையும் அமைச்சரையும் கலந்து ஆலோசனை செய்தார்; முடிவாக ஜாக்ஸனைப் போய்ப் பார்ப்பதென்று தீர்மானித்தார். அம் முடிவின் விளைவாக, கட்டபொம்மு பிரயாணத்திற்குச் சித்தஞ் செய்யலானார். ஊமைத்துரை தானபதிப் பிள்ளையை அழைத்து



"அமைச்சரே! விரைவில் சேனைகளைத் தயார் செய்யுங்கள். நாம் ஜாக்ஸனை நமக்குரிய முறையில் காணச் செல்ல வேண்டும். உடனே நமது பயணத்தை அறிவிக்கும் பேரிகை முழங்கட்டும்" என கட்டளையிட்டார்.

உடனே படைவீரர் யாவருக்கும் ஓலை அனுப்பப்பட்டது. சிறிது சிறிதாகக் கம்பளத்தார் யாவரும் பாஞ்சை நகரை அடைந்தனர். வெள்ளையத்தேவன் பச்சைத் தலைப்பாகை தரித்துப் பிச்சிப்பூ சூடிவந்தான். வசந்தகாலத்தில் சஞ்சரிக்கும் மேகங்கள் போலப் படைவீரர் குவிந்தனர். வீரபாண்டியர் சமுகத்தை யடைந்து அனைவரும் வணக்கம் செய்தனர். அவர்களைப் பார்த்துக் கட்டபொம்முவும் தம்பியரும் பெருமிதம் அடைந்தனர்.

படைவீரர் யாவரும் தாய்நாட்டின்மேல் பற்று மிகுந்தவர்கள்; தம் உயிரைக் கொடுத்து மானத்தைக் காப்பாற்றும் உத்தம வீரர்கள். இவர்கள் அந்நியரின் கூலிப்படைகள் அல்ல. வீரபாண்டியரின் நகைமுகம் ஒன்றே இவர்களுடைய ஊதியம். பயணபேரிகையின் ஒலியைக்கேட்டவுடன் திரண்ட ஆயிரம் கம்பளத்தாரும் ஐந்நூறு சேவகரும் அணிவகுக்கலாயினர். கூரிய வேல் தாங்கிய வீரர் ஒருபால்; வல்லயம், வில், அம்பு, ஈட்டி தாங்கிய வீரர் ஒருபால்; கம்புகொண்டு அடித்துப் பகைவரைக் கொல்ல வல்லவர் ஒருபால்; போர்முனையில் காயமுற்றோர்க்கு மருத்துவம் செய்வோர் ஒருபால்; ஒற்றர் ஒருபால்—இங்ஙனம் இவர்கள் குழுமினர்.

நடுவே, மும்முறை தீட்டிய வேல்தாங்கி வெள்ளையத் தேவன் ஏறுபோல் நடந்தான். வெள்ளையன் இளஞ் சிங்கத்தை யொத்தவன்; வீரபாண்டியரிடம் பக்தி மிகுந்தவன்; அவரால் புதல்வன்போல் வளர்க்கப் பட்டவன்; விசுவாசத்தின் சின்னம்.

படைவீரர் அணிவகுத்து நிற்பதைப் பார்த்து அகமகிழ்ந்தார் கட்டபொம்மு. புன்முறுவல் பூத்து, படைவீரர் யாவருக்கும் ஒரே மாதிரியான உடைகள் வழங்கக் கட்டளையிட்டார். தாமும் திருநீறு அணிந்தார்; கண்ணுக்கு மைதீட்டிக் கொண்டார்; நெற்றியில் புனுகும் சவ்வாதும் கலந்த திலகம் அணிந்தார்; அதன்மேல் சந்தனப்பொட்டு வைத்துக் கொண்டார். விரல்களில் வைர மோதிரம்; கழுத்தில் கண்டி, சரப்பணி, மோகனமாலை; காதினில் கடுக்கன்; மேலே துப்பட்டா—இவைகளுடன் சுத்த வீரராக இனிது விளங்கினார். சகோதரனுடைய அலங்காரத்தைக் கண்டு மகிழ்ந்தனர் தம்பியர். அவர்களும் விரைவில் தயாராயினர். அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளை தாமதமாகவே தமது காரியங்களை முடித்துக் கொண்டார். சிவபூசை சமயத்தில் அவர் உலகத்தையே மறந்துவிடுவார். சிறந்த ராஜதந்திரி; நல்ல அறிஞர்; 'மந்திரிக் கழகு வரும் பொருளுரைத்தல்' என்பதற்கு அவர் ஒரு சான்று. அவரும் நீராடிச் சிவபூசை முடித்து, உணவருந்திப் பின்வந்து சேர்ந்தார்.

மானமே பெரிதென மதிக்கும் பாஞ்சைத் தலைவர், தம்பியர் உடன்வர, படைவீரர் மத்தியில் வேங்கைப்புலிபோல் நடந்து சென்றார். யாவரும் சக்கதேவி ஆலயத்திற்குச் சென்று அம்மனை வணங்கினர். "உலக நாயகியே! எமை ஆதரிக்கும் சக்கம்மையே! உன்னை நம்பினோர்க்கு நீயே உதவ வேண்டும். எங்கட்கு நல்வாக்குக் கொடுக்க வேண்டும். அந்நியர்க்கு எங்களைக் காட்டிக் கொடுக்காதே அன்னையே!" என்று பாஞ்சைநாயகர் வரம் வேண்டி வணங்கி நின்றார். ஊமைத்துரை பயணத்தைத் துரிதப்படுத்தினார். அரண்மனை வாயிலை அடைந்ததும் கட்டபொம்மு தமது வெண்பரியாகிய முத்துராமுவின்மீது ஏறி அமர்ந்தார். தம்பியர் வேறு இரண்டு குதிரைகளின்மேல் அமர்ந்தனர். தானாபதிப் பிள்ளை பல்லக்கில் அமர்ந்தார். சேனைவீரர் ஊர்வலம் போல் காட்சியளித்தனர். நகரமாந்தர் பற்பல விடங்களில் கூடிநின்று இந்த வைபவத்தைக் கண்டு மகிழ்ந்தனர். தமது பரிவாரங்கள் புடைசூழக் கட்டபொம்மேந்திரர் திருநெல்வேலியை நோக்கிச் செல்லலுற்றார்.

நெல்லையம்பதியை அடைந்ததும், கலெக்டர் அங்கே இல்லை என்றும், திருக்குற்றாலம் சென்றுள்ளார் என்றும் அறிந்தார் கட்டபொம்மு. உடனே குற்றாலத்தை விரைவில் அடைந்தார். அங்கே ஜாக்ஸனும் முகாம் போட்டிருந்தான். கட்டபொம்மு, திருக்குற்றால நாதர் சந்நிதி வாயிலில், தமிழ் நாட்டு வழக்கப்படி, வெள்ளிக் கால் நட்டு, விதானம் கட்டி, சித்திரக் கூடாரத்தில் பரிவாரங்கள் புடைசூழக் கொலுவிருந்தார். ஜாக்ஸனோ குற்றாலத்தின் வடபாரிசத்தில் கூடாரம் போட்டு, சுற்றி

லும் பீரங்கி வண்டிகளை நிறுத்தி, சிப்பாய்கள் புடைசூழச் சபை கூட்டினான். கட்டபொம்மு பரம்பரை மன்னவர்; ஜாக்ஸனோ அன்று வந்த அதிகாரி. அன்னவன் கட்டபொம்முவின்மேல் ஆத்திரம் கொண்டிருந்தான். திருநெல்வேலிச் சீமையில் வீரபாண்டியருக்கு மிகவும் செல்வாக்கு இருந்தது. அவர் திருநெல்வேலிச் சீமையில் இருக்கும் வரையில் அவருடைய செல்வாக்குக் குறையாது; கலெக்டருடைய அதிகாரம் ஓங்காது. ஆதலால் இப் பாளையக்காரரை எவ்வாறாயினும் திருநெல்வேலிச் சீமையை விட்டு இராமநாதபுரம் கொண்டுபோய் விடவேண்டும் என்பது ஜாக்ஸனுடைய கருத்து. இராமநாதபுரத்தில் கும்பினியார் ஆதிக்கம் வகித்து வந்தனர். அங்குத் தன் விருப்பப்படி ஜாக்ஸன் பாளையக்காரரை நடத்தலாம். நெல்லையிற் போலவே குற்றாலத்திலும் அவருக்குப் பேட்டி யளிக்க மறுத்தால், அவர் ஒருக்கால் தமது பதிக்கே திரும்பி விடுவார். இல்லையேல், ஒவ்வோர் ஊராக அவரை அலைக்கழித்தால் தன்னைப் பின் தொடர்ந்து வருவார் என்று ஜாக்ஸன் கருதினான். என்ன கீழ்த்தரமான கருத்து!

கட்டபொம்முவுக்கோ பேட்டியை முடித்துக் கொண்டு ஊர்திரும்பவேண்டும் என்பது எண்ணம். இராமநாதபுரம் சென்றால் தமக்கு ஏதேனும் கெடுதல் நேரும் என்றும் அஞ்சினார். குற்றாலத்தில் பேட்டி அளிக்க முடியாது என்றும், சொக்கம்பட்டி முகாமில் பார்க்கலாமென்றும் ஜாக்ஸன் தெரிவித்தான்.



இச் செயல் வீரபாண்டியரின் ஐயத்தைப் பலப்படுத்தியது. இவ்விதமாகக் கலெக்டரைப் பார்க்கக் கட்டபொம்மு பரிவாரத்துடன் அவன் பின்னாலேயே சொக்கம்பட்டி, சிவகிரி, சேற்றூர், ஸ்ரீவில்லிபுத்தூர், பேறையூர், பாவாலி, கமுதி, அலங்கானூர் முதலான பல இடங்களுக்கெல்லாம் சென்றார். செப்டம்பர் மாதம் 9-ம் தேதி ஜாக்ஸன் இராமநாதபுரம் வந்து சேர்ந்தான். கட்டபொம்முவும் அவனைப் பின் தொடர்ந்து இராமநாதபுரத்தை யடைந்தார். தன்னைக் காணவந்த கண்ணியரை ஊரூராக இழுத்து அலைக்கழிக்கும் இந்த அற்புத வித்தையைக் கண்டுபிடித்த பெருமை ஜாக்ஸனையே சாரும்!

# 6. இராமலிங்க விலாசம்

பாஞ்சாலங் குறிச்சியிலிருந்து பல ஊர்களைக் கடந்து தன்னைக் கட்டபொம்மு நானூறு மைல்கள் பின்தொடர்ந்து வருமாறு செய்தான் ஜாக்ஸன். இருபத்துமூன்று நாட்கள் இக்கொடுமை நடைபெற்றது. தமக்கும் கீழ்ப்பட்ட பல பாளையக்காரர் எதிரில் தம்மை இவ்வாறு அவமானப்படுத்தியது வீரபாண்டியருக்குப் பெரிதும் மனவருத்தமாக இருந்தது. இதைக் கும்பினியாரே தங்கள் கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளனர். 1798-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் நாள் காலை கட்டபொம்மு தமது படையுடன் இராமநாதபுரத்தை யடைந்து, கோட்டைக்குத் தெற்குப் பாரிசத்தில் கூடாரம் அடித்தார்.

ஆகா! கட்டபொம்முவின் கொலுச் சிறப்புத் தான் என்னே! வெள்ளிக் கால்கள் நிறுத்தி, அவற்றின்மேல் முத்துக் குஞ்சலம் கோத்து விதானம் அமைக்கப்பட்டது. அதன் கீழே மெத்தையும் திண்டும் தலையணையும்வைத்துஅமர்ந்தார் கட்டபொம்மு. வீரர் இருவர் சங்கநாதம் செய்தனர்; நாட்டிய மாதர் நடனமாடினர். இருவர் 'ஜயவீர சூரதீர திக்விசய சக்கதேவி தாசன், செந்திலாதிபன் சீர்பாதம் மறவாத சிந்தையன், வீரபாண்டிய கட்டபொம்மேந்திரன் பராக்!' எனக் கட்டியங் கூறினர். ஓர் புறம் வெள்ளையத் தேவனும் அவன் தோழர்களும்



சேவல்களைச் சண்டைக்கு விட்டனர். வெள்ளைச் சேவல் ஒன்று; மற்றொன்று கறுப்புச்சேவல். வெள்ளைச்சேவல் தோற்பதில் அவர்களுக்குப் பேரானந்தம். வெள்ளைச் சேவல் தோற்றால் வெள்ளையன் வீழ்ந்தான் என்று ஆர்ப்பரிப்பர்!

'இராமலிங்க விலாசம்' என்னும் மாளிகை இராமநாதபுரச் சேதுபதிக்குச் சொந்தமானது. அதைத் தனக்கு இருப்பிடமாக அமைத்துக் கொண்டான் ஜாக்ஸன். தனக்கு உதவியாகவிருந்த கிளார்க்கு என்பானை அழைத்துப் பல யோசனைகளைச் செய்தான். கட்டபொம்முவை எப்படியாவது பிடித்துச் சிறைசெய்யவேண்டும் என்று நிச்சயித்தான். கட்டபொம்மு கோலாகலத்துடன் கொலு விருப்பதைக் கண்டு அவன் நெஞ்சம் பற்றி எரிந்தது. ஆங்காங்கே தன் படைவீரரை அமர்த்தினான். "கட்டபொம்முவைக் கைப்பிடியாகப் பிடிக்காவிடில் நான் கலெக்டர் அல்ல" என்று வீறுப்புப் பேசினான்.

"நீரும், உமது தம்பியரும், தானாபதிப் பிள்ளையும் இக்கடிதம் கண்டவுடன் எம்மைக் காண வந்து சேரவேண்டியது. உமது பரிவாரங்களுடன் வரக்கூடாது" என்று பல கருத்தமைந்த ஒரு கடிதத்தில் எழுதி ஒரு போர்வீரன் மூலமாகக் கட்டபொம்முவுக்குக் கொடுத்தனுப்பினான் ஜாக்ஸன். அக் கடிதத்தைக் கண்ட கட்டபொம்மு பிரமித்தார். பரிவாரங்களுடன் வரக்கூடாது என்று ஜாக்ஸன் கூறுவதன் கருத்து யாது? ஊமைத்துரை அக் கடிதத்

தைப் படித்துப் பார்த்து வீராவேசம் கொண்டார். தூதனை நோக்கி, "பரிவாரங்களுடன்தான் வருவோம்; தனிமையில் வரமாட்டோம்" எனப் பதிலளித்தார். அவ்வாசகத்தைத் தூதன் ஜாக்ஸனிடம் அறிவித்தான். அதைக்கேட்ட ஜாக்ஸன் கடுங்கோபம் கொண்டான். எவ்வாறாயினும் வீரபாண்டியரைத் தனிமையில் வரவழைக்கவேண்டும் என்று மனம் துணிந்தான்.

அப்பொழுது ஒரு துரோகி ஜாக்ஸனை நண்ணினான். தனது இனத்தாரைத் தானே காட்டிக் கொடுக்கும் கயவர் கும்பலைச் சேர்ந்தவன் அவன். அவன் பெயர் ரங்கப்பன். அவன், "நம்மிடம் கோபாலையன் என்றொரு குமாஸ்தா உள்ளான். அவன் முன்னம் பாஞ்சாலங் குறிச்சியாரிடத்தில் மணியம் வேலை பார்த்தவன். அவனைக் கட்டபொம்முவினிடம் அனுப்பினால், தந்திரமாகப்பேசி வீரபாண்டியரைத் தனியாகக் கொணர்வான்" என்றான். உடனே ஜாக்ஸன் கோபாலையரை அழைத்து, "நீ கட்டபொம்முவை இங்கே அழைத்துவா. உனக்கு நான் நன்மை பல செய்கிறேன்" என்றான்.

கட்டபொம்முவின் சமுகத்தில் கோபாலையன் வந்து நின்றான். அவனைக் கட்டபொம்மு ஆசார உபசாரத்துடன் வரவேற்றார். கோபாலையன் இருதலைக்கொள்ளி எறும்பு போலானான். ஒரு புறம் கட்டபொம்முவின் உண்மை நட்பு; மற்றொரு புறம் ஜாக்ஸனின் ஆதரவு. அவனுடைய இரு கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகிற்று. கலங்கி நின்ற



கோபாலையன் கட்டபொம்முவை நோக்கி, "மன்னவரே! ஜாக்ஸன் தங்களையும் ஊமைத்துரையையும் தானாபதிப் பிள்ளையையும் பரிவாரங்களின்றி வரச் சொன்னார். அங்கு ஏதோ வஞ்சகச் செயல்கள் நடந்துகொண்டிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் காணப்படுகின்றன. சிப்பாய்கள் தயாரான நிலையில் உள்ளனர். ஆதலால், தாங்கள் ஆலோசனை செய்து முடிவுக்கு வரக் கோருகிறேன்" எனச் சொல்லிப் பணிந்து நின்றான்.

'நாம் இவ்வளவு தொலை வந்து ஜாக்ஸனைக் காணாமல் திரும்பினால், ஏளனத்திற்குள்ளாவோமே, எட்டையாபுரத்தார் நம்மைக் கண்டு நகைப்பரே' என்று எண்ணமிட்டு, கோபாலையனை விளித்து, "நாங்கள் மூவர் மட்டும் வருவதாகக் கலெக்டருக்குத் தெரிவி" எனச் சொல்லியனுப்பினார் கட்டபொம்மு.

ஊமைத்துரையோ சினம் கொண்டார். "பனைமரத்திலேறிப் பாளையைத் தொடாமல் இறங்கலாமோ? சங்கு சுட்டால் அதன் வெண்மை போகுமோ? பசுந்தங்கம் கெட்டால் அதன் நிறந்தான் குன்றுமோ? சிங்கத்திற்கு முன் நரி எம்மாத்திரம்? துரைச்சிங்கம் நரிக்கு அஞ்சுமோ? பாஞ்சைப் பதிக்கு நான் வேங்கைப்புலி. எப்படியாயினும் நாம் பின்வாங்கப் போவதில்லை" என்று ஆர்ப்பரித்தார்.

1798-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம் நாள் தானாபதியும், தம்பியரும், மெய்க்காப்பாளரும் உடன்

வர, பாஞ்சைக் காவலர் கலெக்டரைக் காணப் புறப்பட்டார். ஏதேனும் இடையூறு நேருமென்று முன்னரே அறிந்திருந்தமையால், ஆங்காங்கே தம் படைவீரரை ஆயத்தமாய் நிறுத்தி வைத்தார். தமது படைத்தலைவர்களை அழைத்து, "நாங்கள் மூவரும் இராமலிங்க விலாசத்திற்குச் செல்கிறோம். நீங்கள் மிகவும் கவனத்துடன் வெளியே இருங்கள். ஏதேனும் கலகம் நேர்ந்தால், கூக்குரல் கேட்கும்; அப்பொழுது உள்ளே வந்து விடுங்கள்" என எச்சரித்தார். தமது அன்புக்குரிய மெய்க்காவலன் வெள்ளையத்தேவனை மாளிகையின் முகப்பில் காவலாக நிறுத்தினார். பின்பு ஊமைத்துரையும் தானாபதியும் பின் தொடர மாளிகையினுள்ளே நுழைந்தார்.

கட்டபொம்முவைப் பார்த்தான் ஜாக்ஸன். உண்மை ஊழியரும் அருமைத் தம்பியரும் புடைசூழ வரும் உத்தமனையும், செயலே சொல்லெனக் கருதி வாழும் இளஞ்சிங்கமான ஊமைத்துரையையும் பார்த்துக் கட்டுக் கடங்காத கோபம் கொண்டான். உடனே அவர்களைப் பிடித்துச் சிறையிலிடக் கருதினான். ஆங்கிலமொழியில் அப்பொருள் படத் தன் ஆட்களுடன் பேசினான். நெஞ்சில் வஞ்சனையும் முகத்தில் புன்சிரிப்பும் கொண்டு கட்டபொம்முவை வரவேற்றான். இருவரும் சற்றுநேரம் உரையாடினர். ஊமைத்துரையும் தானாபதியும் உள்ளே வர அனுமதிக்கப்படவில்லை; காவலாளர் அவர்களை உட்செல்லாதவாறு தடுத்துவிட்டனர்.



பேட்டி சமயத்தில் ஜாக்ஸன் கட்டபொம்முவின் பேரில் குற்றங்களை அடுக்கினான். கும்பினியாருக்கு வரிகொடாமல் இருப்பது, எட்டையாபுரத்தானுடன் இணங்கி வாழாதிருப்பது, மற்ற பாளையக்காரரைக் கும்பினியாருக்கு வரி கொடாமலிருக்குமாறு தூண்டுவது, கும்பினியாரைச் சேர்ந்த சில கிராமங்களைத் தம் பாளையத்துடன் சேர்த்துக் கொண்டது ஆகிய இவை குற்றச்சாட்டுகள். அதற்கு வீரபாண்டியர், "அடிமை வாழ்வுக்கு நாம் இணங்கோம். வரிகொடுக்கும் வழக்கம் எமக்கு இல்லை" என்று ஆத்திரத்துடன் மறுமொழி அளித்தார். பின்பு ஜாக்ஸன் தான் கட்டபொம்முவுக்கு எழுதிய கடிதங்களை அவருக்குப் படித்துக்காட்டினான். அவற்றுள் ஒன்றில், "எம்மை உடனே வந்து நீர் காணாவிடில், உமது பாளையம் பறிமுதல் செய்யப்படும்" எனக் கண்டிருந்தது. அதைக் கேட்ட கட்டபொம்முவின் கண்கள் சிவந்தன; மீசைதுடித்தது. கோபச்சிரிப்புடன், "கட்டபொம்முவுக்கும் இத்தகைய கடிதம் எழுத ஒருவனுக்கு துணிவு பிறந்ததா?" என்று கேட்டார்! ஜாக்ஸன் உடனே "உம்மைச் சிறை செய்திருக்கிறேன். நீர் இம்மாளிகையை விட்டு வெளியேறலாகாது; இது கும்பினியாரின் ஆணை" என்றான்.

"என்ன சொன்னீர்? நாடாளும் வீரபாண்டியன் நாடோடி வெள்ளையர்க்கு அஞ்சுவானா? நாமார்க்கும் குடியல்லோம்! பாஞ்சைத் தலைவன் புல்லரிடம் சிறைப்படுவதா! நன்று! நன்று!"

என்று சீறிக்கொண்டே கட்டபொம்மு மாளிகையை விட்டு வெளியேற முயன்றார். அதைக் கண்டு ஜாக்ஸன், “ நீர் உம்மை மறந்து பேசுகிறீர். மேலிருந்து உத்தரவு வரும்வரை நீர் இம்மாளிகையிலேயே தாமதிக்க வேண்டும் ; இது கும்பினியாரின் ஆணை ” என்றான். இங்ஙனம் சொல்லிமுடிக்கு முன்னரே மறைவிலிருந்த சில படைவீரர் மன்னன் மேல் பாய்ந்தனர். அதனைக் கண்ணுற்ற தமிழ் வேந்தர் உடைவாளை உருவி வீசினார். படைவீரரில் சிலர் அவர் வாளுக்கு இரையாயினர். இடைமறித்த ஜாக்ஸனை ஓர்புறம் தமது கையால் தள்ளிவிட்டு மேலே நடந்தார்.

இறைவனுடைய நிலையைக் கண்ட வெள்ளையத் தேவனும் ஊமைத்துரையும் மேல்மாடியை அடைந்தனர். அதற்குள் தாளிட்டிருந்த கதவுகளையெல்லாம் காலால் உதைத்துத் தகர்த்தெறிந்து பாஞ்சையதிபர் கீழிறங்கி வந்தார் ; வெள்ளையத் தேவனும் ஊமைத்துரையும் அவரைப்பின்தொடர்ந்தனர். அப்பொழுது உதவித் தளகர்த்தன் கிளார்க் என்பான் படைவீரர் சிலருடன் பாய்ந்து வந்து மூவரையும் வழிமறித்தான். அதைக் கண்ட மன்னர் சீறி எழுந்தார். ஊமைத்துரை இடிமுழக்கம் செய்தார். கட்டபொம்முவின் கைவாளுக்குப் பலியானான் கிளார்க்கு. அவ்வளவில் மன்னன் படைவீரரும் கும்பினியாட்களும் கைகலந்தனர். வாள்கள் மின்னின ; வேல்கள் துள்ளின. தமிழர் சேனை கும்பினிப் படைவீரரைச் சூறையாடி மாளிகையை



விட்டு வெளிப்போந்தது. கைகலப்பில் உயிர்நீத்த கிளார்க்கு என்பான் முப்பது ஆண்டுகளாக் கும்பினியாருக்கு உழைத்தவன். அவன் மரணம் அடைந்ததற்கு நஷ்டஈடாகக் கும்பினியார் அவன் மனைவிக்கு நெடுநாள் ‘ பென்ஷன் ’ அளித்து வந்தனர். ஆனால் அது கட்டபொம்முவின் பணத்திலிருந்து அளிக்கப்பட்டு வந்தது !

போர் வெறியில் கட்டபொம்முவின் படையினர் இராமநாதபுரத்திலிருந்த கடைகளில் புகுந்து கொள்ளையிட்டனர். பொன்னும் வெள்ளியும் கொள்ளைபோயின; ஜவுளி வகைகள் பறி முதலாயின ; வாசனைப் பொருள்கள் சூறைபோயின. வெள்ளையருக்கும் பாஞ்சையதிபருக்கும் பகை என்றால் கடைக்காரர் என் செய்வர் ? ஆனால் இது அந்தக் காலத்திய போர்முறை. கம்பளத்துப் படைவீரர் பூமாலைகளைச் சூடினர் ; தாம்பூலம் தரித்தனர் ; வாசனைப் பொருள்களைப் பூசிக்கொண்டனர் ; புது ஆடைகளை அணிந்தனர். முன்பொருநாள் வெள்ளையர் பாஞ்சைநகரில் புகுந்து கொள்ளையிட்டனரல்லவா ? அதற்கு இக் கொள்ளை “ பழிக்குப் பழி !” பின்பு யாவரும் இராமநாதபுரத்தை விட்டுப் புறப்பட்டனர்.

சிறிது தூரம் சென்றதும், “தானாபதிப் பிள்ளை எங்கே ?” என்று கட்டபொம்மு வினவினார். கூட்டத்தில் தானாபதிப் பிள்ளையைக் காணவில்லை. “ நம்பியவரை நட்டாற்றில் விட்டோமே ” என்று வீரபாண்டியர் மனம் புழுங்கினார். “ இராமநாத

புரம் திரும்பிச் சென்று தானபதிப் பிள்ளையை மீட்டு வருவோம்" என்று தமது வீரருக்குக் கட்டளையிட்டார். ஆனால், ஊமைத்துரையின் சொல்லுக்கிணங்கி, பாஞ்சாலங் குறிச்சியை நோக்கி விரைந்தார்.

கட்டபொம்முவின் பரிவாரத்தினர் சிலர் தூத்துக்குடியை அடைந்தனர். அது டச்சு ஆதிக்கத்திலிருந்து அப்பொழுது ஆங்கிலேயர் கைக்கு மாறியிருந்தது. முத்துக் குளிக்கும் திருநகரம் அல்லவா தூத்துக்குடி? அதனைப் பாஞ்சை வீரர்கள் கொள்ளையடித்தனர். கும்பினியாரின் உடைமைகளையுங் கொள்ளையடித்தனர்; கும்பினிக் கச்சேரிகள்கூடத் தாக்கப்பட்டன. தடுத்த ஆங்கிலேயர் தவிடுபொடியாயினர். பின்பு பாஞ்சை வீரர்கள் தம் பதியை அடைந்தனர்.

இதற்கிடையில், இராமநாதபுரத்தில் ஜாக்ஸன் கட்டபொம்மு விட்டுச் சென்ற பல்லக்கு, வண்டி, குதிரை முதலிய பொருள்களை ஏலம் போட்டான். பின்பு ஒரு உத்தரவை விளம்பரம் செய்தான்: "கிளார்க்கு துரையைக் கொன்ற கட்டபொம்முவைப் பிடித்துக் கொடுப்பவர்க்கு ரூ. 5000 பரிசு அளிக்கப்படும்" என்பதே அது. கட்டபொம்முவின் மேல் கொலைக்குற்றம் சாட்டிக் கும்பினியாருக்கு ஒரு நிருபம் வரைந்தான். அதை முடித்துவிட்டு மேல்மாடியிலிருந்து தெருவைப்பார்த்தான்; மேல் துண்டுடன் ஒருவர் நடந்து செல்வதைக் கவனித்தான். அவர் யார்? நமது தானபதிப் பிள்ளை



தான். அவர் தமது சுற்றத்தாரின் வீட்டில் சிவ பூசை முடித்துக்கொண்டு சிவப்பழமாக வந்துகொண்டிருந்தார். உடனே அவரை ஜாக்ஸன் பிடித்துச் சிறையிலிட்டான்!

கட்டபொம்முவின் மேல் ஆத்திரம் அடைந்த ஜாக்ஸன் தானபதிப் பிள்ளையைச் சித்திரவதை செய்தான். பழியோரிடம் பாவமோரிடம்! வரிப் பணம் கட்டச்சொல்லி அவரைக் கிட்டிபோட்டு நெருக்கினான்! நெற்றியில் பாறுங்கல்லை வைத்து வீதியில் நிறுத்தினான்! துப்பாக்கிமுனைகளால் குத்தினான்! நாலைந்து துப்பாக்கிகளை அவர் தோளில் வைத்து நெருக்கினான்! இவற்றால் ஒரு பயனும் கிட்டவில்லை. பின்பு கும்பினி நிர்வாகிகளின் ஆணைப்படி அவரைத் தகுந்த காவலுடன் திருச்சிக்கு அனுப்பிவைத்தான்.

# 7. தானாபதி விடுதலை

ஜாக்ஸன் தானாபதியைச் சிறைசெய்து திருச்சிக்கு அனுப்பினான் என்று சரித்திரம் கூறுகிறது. ஆனால் அவர் சென்னைக்கு அனுப்பப்பட்டார் என்றே நாட்டு வரலாறுகள் கூறுகின்றன. இது எவ்வாறாயினும், தானாபதிப் பிள்ளை தமது சொல்வன்மையினால் கும்பினி நிர்வாகிகளை ஜாக்ஸன் மீது சீற்றம் கொள்ளச் செய்தார் என்பது திண்ணம். பரிவாரங்களை வரவொட்டாமல் ஜாக்ஸன் தடுத்தது, பல முகாங்கட்குக் கட்டபொம்முவை இழுத்தடித்தது, பேட்டியின் பொழுது அவரை ஜாக்ஸன் அவமதித்தது, அவரை வஞ்சகமாகச் சிறைசெய்ய முயன்றது முதலான அக்கிரமச் செயல்களைக் கும்பினித் தலைவரிடம் கூறினார். தலைவர் தமது நிர்வாகிகளுடன் ஆலோசனை செய்து ஜாக்ஸன் நடந்துகொண்ட முறை தவறானது என முடிவுசெய்தார். அதன் பயனாக ஜாக்ஸன் வேலையிலிருந்து நீக்கப்பட்டான்; தானாபதியும் விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலைபெற்ற தானாபதிப் பிள்ளை பெருமகிழ்ச்சி அடைந்தார். கும்பினியார் அவரை மிகவும் கௌரவித்தனர். தலைமை நிர்வாகி அவருடன் கைகுலுக்கினார்; பின்பு அவர் பிள்ளையைப் பார்த்து, "கட்டபொம்முவை எம்மை வந்து காணும்படி கூட்டிவாரும்" என்று வேண்டினார். பிள்ளையின் மனம் குளிர்ந்தது. 'ஆகட்டும்' என்று விடையளித்தார்; விரைவில் ஒரு பல்லக்கில் ஏறிப் பாஞ்சாலங் குறிச்சி நோக்கிப் புறப்பட்டார்.



தானாபதிப் பிள்ளையின் வருகை அறிந்த கட்டபொம்மு மனம் பூரித்தார். திருநீறும் சந்தனப்பொட்டும் தரித்த முகத்துடன் அவர் ஆசாரமாகப் பல்லக்கை விட்டிறங்கிய வைபவத்தைப் பார்த்துப் பாஞ்சையதிபர் களிப்படைந்தார். "உம்மை உயிருடன் காணப்பெற்றேனே; அந்தப் பாக்கியமே போதும்" என்று சொல்லிக் கட்டித் தழுவி ஆனந்தக் கூத்தாடினார்.

"நான் மீண்டேன் என்பது மட்டும் அல்ல. கும்பினியார் நமக்கு இப்பொழுது உகந்த நண்பராயினர். ஜாக்ஸனைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டனர். தங்களோடு நட்புக்கொள்ள விழைகின்றனர். அடடா! அவர்கள் எனக்குச் செய்த உபசாரங்களை என்னால் எடுத்துரைக்க இயலாது. எட்டு நாட்களுக்குள் தங்களைக் காண வேண்டும் என அவாக்கொண்டுள்ளனர். அவர்களோ வல்லமை மிகுந்தவர்கள்; நாமும் வல்லமை படைத்தவர்களே. இருதிறத்தவரும் நட்புரிமை பூண்டால் நாட்டுக்கு நன்மையுண்டாகும். ஆதலால் புறப்படுங்கள்" என்று தானாபதிப் பிள்ளை மன்னவரைத் துரிதப்படுத்தினார்.

பிள்ளைமகன் சொற்களைக் கேட்ட கட்டபொம்மு தமது பரிவாரங்களுடன் சிவிகை மீதேறி மதுரைக் கோட்டைக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்த கும்பினியாரின் கர்னல் அவரை வரவேற்று உபசரித்தான். கட்டபொம்மு சொக்கநாதர் ஆலயத்திற்குச் சென்று தரிசனம் செய்துவிட்டுத் திருச்சிக்குப் புறப்பட்டார். சரித்திரத்தில் கட்டபொம்மு

திருச்சியிலிருந்த கும்பினித் தலைவரைச் சந்தித்த தாகக் கூறப்படுகிறது. ஆனால் கர்ணபரம்பரை யாகச் சென்னை மாநகரம் சென்றார் என்று கூறப் படுகிறது. இஃது எவ்வாறிருப்பினும், கட்ட பொம்முவைக் கும்பினியார் விமரிசையாக வரவேற் றனர். வரவேற்பு அளித்த இடத்தில் வாழைத் தோரணம் கட்டினர்; ராணுவ அதிகாரிகள் அணிவகுத்து மரியாதை செய்தனர்; குதிரைப் படைகள் அணிவகுத்து நின்றன; பாண்டு வாத் தியம் முழங்கிற்று; இடையிடையே பீரங்கிகள் நிறுத்தப்பட்டிருந்தன. வெள்ளித்தடி பிடித்த தூதுவன் ஒருவன் கட்டபொம்முவை அழைத்து வந்தான். அவரைக் கும்பினியார் மரியாதையுடன் வரவேற்று, உள்ளே அழைத்துச் சென்றனர்.

கட்டபொம்முவை அந்தரங்கமாக விசாரித் தார் கும்பினி அதிகாரி. இராமநாதபுரத்தில் நடந்த போரைப்பற்றி விவரமாகக் கேட்டார். ஜாக்ஸன் செய்த அக்கிரமங்களைக் கட்டபொம்மு எடுத் துரைத்தார். "எங்களுக்கு இராமநாதபுரத்தில் வேட்டைகிடைத்தது; விளையாடித் தீர்த்தோம்" என்று கூறினார். அதைக்கேட்ட அதிகாரி பிரமித்துப் போனார். கட்டபொம்மு ஆளழகன் மட்டுமல்ல; அஞ்சா நெஞ்சினனுமாவன் என்றுணர்ந்தார். தூத் துக்குடியில் கொள்ளையிட்டதற்கும் அஞ்சாது பதி லளித்தார்: "என் சேவகருக்குச் சம்பள நிலுவை இருந்தது. அதற்காகப் பணத்தைக் கொள்ளை யிட்டேன்" என்றார். கும்பினியார் தம் சிப்பாய்



களுக்குச் சம்பளம் கொடுக்கப் பணம் இல்லையானால், வெற்றிபெறும் ஊர்களில் கொள்ளையடிப்பது வழக் கம். மதுரையிலும் பாஞ்சாலங் குறிச்சியிலும் இவ் விதமாகவே கொள்ளைகள் நடந்தன. இதையே கட்டபொம்மு சுட்டிக்காட்டினார். வரிப்பணத்தைக் கட்டவில்லை என்பது இறுதிக் குற்றச்சாட்டு. "வரி கொடுப்பது எமது பரம்பரையில் இல்லை. வரி என்ற பெயரால் நாம் அரைக்காசும் கொடோம். வேறெதுவும் தருதற்கும் மழைக் குறைவினால் நாடு வளங் குன்றியுளது. என் செய்வது?" என்றார். கட்டபொம்முவின் சொற்களும் செயலும் அவ்வதி காரிகளை மயக்கிவிட்டன. "நான் முன்போல் பெருமையுடன் ஆண்டுவர நீங்கள் ஒருப்படின், நாம் இருவரும் நட்புப்பூண்டு வாழலாம்" என்றார் கட்ட பொம்மு. அதிகாரிகளும் அவ்விதமே விரும்பினர்.

தினந்தோறும் அவருக்கு அதிகாரிகள் விருந்து அளித்தனர். ஓழிந்த நேரங்களில் அவருடன் உரை யாடினர். கட்டபொம்மு குதிரை யேற்றத்தில் முதன்மையானவர் என்பது பிரசித்தம்; அதைக் காணக் கும்பினியார் அவாக் கொண்டனர். அவ் வாறே ஏழு சிறந்த பரிகள் கொணர்ந்து நிறுத்தப் பட்டன. அவற்றுள் முரட்டுக் குதிரையொன்றின் மேல் கட்டபொம்மு சுலபமாகத் தாவி அமர்ந்து சவாரிசெய்தார்; அப்பரியும் அவருக்கு அடங்கியிருந் தது. கும்பினியார் அதைக் கண்டு அதிசயித்தனர். அவருடன் நட்புரிமை பூணுவதே நலம் தரும் என்று கருதினர். அவருக்குத் 'தென்னாட்டுச் சிங்கம்'

என்றும், 'துரைகள் சூடாமணி' என்றும் பட்டப் பெயர்களை அளித்தனர்; முத்துமாலையும், துப்பாக்கியும், வாளும், வாகனமும், பல்லக்கும் பரிசுகளாக வழங்கினர்; ஏழு பரிகளையும் அவருக்கே அளித்தனர். பின்பு அவரை வாழ்த்தி விடையளித்தனர்.

வரிசைகள் பல பெற்றுத் திரும்பிய வீரபாண்டியரைப் புதுக்கோட்டைத் தொண்டைமானாகிய விஜயரகுநாதன் என்பான் விருந்துக்கு அழைத்தான். புதுக்கோட்டையில் ஒருநாள் கட்டபொம்முவுக்கு உயர்ந்த விருந்தும் உபசாரமும் நடந்தன. பாஞ்சை நகரை அடைந்தவுடன், கட்டபொம்மு நேரே தமது அன்னையைக் கண்டு அடிபணிந்து நின்றார். வெள்ளையர் அளித்த வரிசைகளை அன்னைக்குக் காட்டினார். தம்முடன் வந்திருந்த பரிவாரத்தினருக்குப் பரிசுகள் பல வழங்கினார். பாளையத்து மக்கள் தம் மன்னனுடைய புகழைக் கேட்டு மகிழ்ந்தனர். அனைவரும் இன்புற்றிருக்கும் வகையில் கட்டபொம்மு அரசு நடத்தினார். அவருடைய ஆட்சித்திறனைப் பற்றிப் பல பிரபந்தங்கள் இயற்றப்பட்டன. அவற்றுள் ஒன்று பாஞ்சைக் கோவை. அம்மானை, கும்மி என்ற வகைகளிலும் சில பாடல்கள் எழுந்தன.

சின்னாள் கழிந்ததும், கட்டபொம்மு, களிப்பு மிகுதியால் அரசகாரியங்களை நாடொறும் நேரிற் கவனிப்பதைக் கைவிட்டார். தம் ஆருயிர்க் காதலியுடன் சாலிகுளம் சாரலில் அமைந்திருந்த வசந்த மாளிகை சென்று, கவலை சிறிதுமின்றி இன்புடன் வாழ்ந்து வரலானார்.

# 8. கும்பினியாரின் சீற்றம்

கும்பினியார் விடுதலை செய்தது முதல் தானாபதிப் பிள்ளை மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தார். கும்பினியார் தமக்கு நெருங்கிய நண்பராகி விட்டனர் என்றும், தமது திறமையாலும் சொல்வன்மையாலுந்தான் பாஞ்சைக் காவலருக்கும் பேட்டி கிடைத்தது என்றும் இறுமாப்புக் கொண்டிருந்தார். இந்த நிலைமையில், அரசர் தம் கடமைகளை மறந்து களியாட்டத்தில் மயங்கியிருந்த சந்தர்ப்பமும் நேர்ந்தது. அமைச்சர் அகந்தையும் விஞ்சியது. இச் சூழ்நிலையில் தானாபதியின் மகன் வேலாயுதம் பிள்ளைக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. அச் செய்தியறிந்த வீரபாண்டியர் அமைச்சருக்கு இரண்டாயிரம் பொன்னும் நூற்றைம்பது கோட்டை நெல்லும் மனமுவந்து உதவினார். ஆனால் அமைச்சரின் மனைவி முத்துவடிவம்மை, இக் கொடையளவில் திருப்தியடையாமல், விவாகத்தில் பலகாரத்திற்கு ஆகும்படி பதினாறு கோட்டைப் பச்சை நெல் தனியே வேண்டுமென்று கணவரை வற்புறுத்தினாள். அவ்வளவு நெல் தானாபதியினிடம் இருப்பில்லை. வெள்ளைக் கும்பினியார் வரிப்பணத்திற்கு ஈடாக மக்களிடமிருந்து வசூலித்த நெல்லைப் பல இடங்களில் களஞ்சியங்களில் சேமித்து வைத்திருந்தனர். பேர்க்கட்டு என்பான் பாளையங்கோட்டை, ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார் திருநகரி முதலான இடங்களிலிருந்த களஞ்சியங்கட்குத் தலைமைக் காவலனாக

இருந்து வந்தான். நெல்லுக்கு விலையுயரும் காலங்களில் அவன் அதை விற்றுக் கும்பினியாருக்குப் பணத்தை அனுப்பி வந்தான். கும்பினியாரின் இந்தச் செய்கையைத் தானாபதிப் பிள்ளை வெறுத்தார். தாம் கும்பினியாரிடம் அடைந்த அவமானத்தையும் அவர் மறக்கவில்லை. பழிக்குப் பழி வாங்கச் சமயம் பார்த்திருந்தார்.

அதுகாலை லூஷிங்டன் என்பான் கலெக்டராக வந்தான். பாஞ்சாலங் குறிச்சியார் கும்பினியாருக்குக் கொடுக்க வேண்டிய வரிப்பணம் அதுவரையில் வந்து சேராமையால், வரிப்பணத்துடன் விரைவில் பாளையங்கோட்டைக்கு வரவேண்டும் என்று கட்டபொம்முவுக்கு அவன் கடிதம் வரைந்தான். மழையின்மையால் நாட்டில் விளைவு இல்லையென்றும், குடிகள் பலர் பயிர் செய்ய முடியாமல் வெளியேறி விட்டனர் என்றும், மீண்டும் சாகுபடி செய்தவுடன் வரிவசூலித்துச் செலுத்த இயலுமென்றும், இராமநாதபுரத்தில் கும்பினியார் பறிமுதல் செய்து ஏலத்தில் விட்ட தமது விருதுகளைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்றும் பாஞ்சைக் காவலர் பதில் அனுப்பினார். இக் கடிதம் கண்ட லூஷிங்டன், “கட்டபொம்மு வரி செலுத்தமாட்டான். இது ஒரு போலிச்சமாதானம். கும்பினியாரை எதிர்க்கவே இது ஒரு சூழ்ச்சி” என்று கும்பினியாருக்குக் கடிதம் வரைந்தனுப்பினான். அப்பொழுது கும்பினியாருக்கு எதிராக இராமநாதபுரத்தில் ஒரு பெருங் கலகம் மூண்டது. அதற்குக் காரணம்



இராமலிங்க சேதுபதி எனக் கும்பினியார் கருதினர். அதன் விளைவாகச் சேதுபதி சிறை செய்யப்பட்டார். இராமநாதபுரமும் கும்பினியாரின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டது. அதனால் பல பாளையங்களில் கலகங்கள் தோன்றலாயின ; வரிப்பணமும் சரிவர வசூலாகவில்லை. அது கண்டு லூஷிங்டன் மனம் வருந்தினான்.

நாட்டில் தோன்றியிருந்த அவல நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு தானாபதிப்பிள்ளை கும்பினியார் நெல்லின்மீது கண் வைத்தார். அவர் மனைவி தடுத்தும் அவர் கேட்கவில்லை. அவர் கட்டளைப்படி சேனைத்தலைவன் சின்னமாவேரி நாயக்கன் ஐந்நூறு வீரர்களுடனும், இருநூறு பொதிமாடுகளுடனும் ஸ்ரீ வைகுண்டத்தை யடைந்தான். கும்பினியார் களஞ்சியத்தில் நெல்லுக்குப் பஞ்சம் இருக்கவில்லை. பாஞ்சைவீரர் வானளாவிய வைக்கோற் பட்டரைகளில் சேமிக்கப்பட்டிருந்த நெல்லை எல்லாம் அள்ளலாயினர். அக் களஞ்சியத்தைக் காவல் செய்து வந்தவன் பாண்டியத்தேவன் என்பான். அவனும் அவனைச் சேர்ந்த வீரரும் நெல்லைப் பாதுகாக்கக் கடும்போர் புரிந்தனர். முடிவில் பாண்டியத்தேவன் உயிரிழந்தான். நெல்முழுவதும் பாஞ்சாலங்குறிச்சியை அடைந்தது.

உயிரிழந்த காவலாளன் பாண்டியத்தேவனுடைய மனைவி, தலைமைக் காவலனாகிய பேர்க்கட்டினிடம் சென்று முறையிட்டுக் கொண்டாள். பேர்க்கட்டு இச் செய்திகளைக் கும்பினியாருக்கு அறிவித்

தான்; கட்டபொம்முவுக்கும் ஒரு கடிதம் வரைந்தான். அதில், "தங்கள் தானாபதிப் பிள்ளை எமது நெல்லைக் கொள்ளைகொண்டது மட்டுமின்றிப் பாண்டியத்தேவனையும் கொலை செய்துள்ளார். இச் செயலுக்குத் தங்கள் உடன்பாடு இருந்திருக்காது என்றே கருதுகிறேன். ஆதலால் சுப்பிரமணியப் பிள்ளையை நம்மிடம் கைதியாகப் பிடித்துக் கொடுக்கவும்" எனக் கண்டிருந்தது. அதற்குப் பதிலொன்றும் வராததால், பர்கிட்டே நேரில் கட்டபொம்முவைக்கண்டு தானாபதிப் பிள்ளையின் அதிக்கிரமச் செயலைப்பற்றி விவரமாக அறிவித்தான்.

தானாபதியின் இச் செயலைக் கட்டபொம்மு ஆதரிக்கவில்லை. அமைச்சரை அவர் கடிந்து கொண்டாராயினும், வெள்ளையரிடம் அவரைப் பிடித்துக் கொடுக்க விரும்பவில்லை. "அமைச்சர் ஆணையால் கொள்ளையிடப்பட்ட நெல்லுக்கு ஈடாக ரூ. 3,300-ம், அவர் அடாத செயலுக்கு அபராதமாக ரூ. 700-ம் ஆக ரூ 4000 தருகின்றேன். ஆனால், என்னை அடைந்தோரை ஆதரிப்பது என் கடமை. எனவே, பிள்ளையைஅவர்பாற் பகைமைகொண்டோரிடம் காட்டிக்கொடுத்தல் எனக்கழகல்ல" என்று பதிலிறுத்தார். பெர்க்கட்டு பெரிதும் வெகுண்டு, "பாஞ்சைப் பாளையத்தின் கதி சில நாளில் தெரியும்" என்று கூறி விரைவாகப் பாளையங்கோட்டையை நோக்கிப் புறப்பட்டுவிட்டான். வீரபாண்டியர் மன மிக நொந்தார். இதற்கிடையில், நிலுவையாயுள்ள வரிப்பணத்தை உடனே செலுத்தவேண்டும் என்று

V2,11:5,7726 N15



கும்பினியாரும் நிருபம் வரைந்திருந்தனர். வரிப் பணம் என்ற சொல்லைக் கேட்டதும் ஊமைத்துரையின் கண்கள் கோபத்தால் சிவந்தன; உள்ளம் கொதித்தது; உடல் துடித்தது. அவருடைய இதயத்தினின்றும் எழுந்த சொற்களை நாட்டுப்பாட்டில் ஒரு கவிஞர் பின்வருமாறு அழகாக அமைத்து எழுதியுள்ளார்:

111931

"வானம் பொழியுது பூமி விளையுது
மன்னவன் கும்பினிக் கேன்கொடுப்பேன்?
சீனிச்சம் பாநெல்லு ஏன்கொடுப்பேன் பயந்தச்
சீரகச் சம்பாநெல் ஏன்கொடுப்பேன்?
என்னைப்போல் வெள்ளாண்மை இட்டானோ துரை
இங்கி லீசுவெள்ளைக் காரனுந்தான்?
மன்னவன் கும்பினி வந்தாக்கால் கத்தி
வாள்முனை யில்கிஸ்திப் பண"மென்றான்.

இவ் வரிகள் ஏட்டில் மட்டும் எழுதப்படவில்லை; தமிழ் மக்களின் இதயத்தில் எழுதப்பட்டன என்பதே பொருத்தமாகும். குடியாட்சியின் அடிப்படைக் கொள்கையை இவ் வரிகள் எவ்வளவு அழகாக எடுத்துரைக்கின்றன!

நெல் கொள்ளையிடப்பட்டது கட்டபொம்முவின் தூண்டுதலால்தான் என்றும், புரட்சிக்கான அறிகுறிகள் பலவிடங்களில் காணப்படுவதற்கும் அவரேதான் காரணம் என்றும் லூஷிங்டன் கருதினான். ஆதலால், கமுதியில் தன்னை வந்து சந்திக்குமாறு மீண்டுமொரு கடிதம் எழுதினான். கட்ட

பொம்மு, ‘ இன்று வருகிறேன், நாளை வருகிறேன் ’ என்று காலத்தைக் கடத்தினார். அப்பொழுது சிவகங்கைப் பக்கம் தமது பரிவாரத்துடன் புறப்பட்டார். சிவகங்கையில் அச்சமயம் கும்பினியாருக்கு எதிராகக் கலகம் நடந்து வந்தது. வீரபாண்டியர் கலகக்காரருடன் சேர்ந்து கொள்ளவே சிவகங்கைக்குச் செல்கிறார் என்று லூஷிங்டன் கருதினான். ஆதலால், “ உடனே எம்மைக் கமுதியில் காண வேண்டும் ” என மற்றொரு கடிதம் வரைந்தனுப்பினான். அக் கடிதத்தைக் கண்ட வீரபாண்டியர் சினங்கொண்டார். “ என்ன ஆணவம் ! உடனே வரவேண்டுமாம் ! இதை அவமதித்தலே நமது மரபுக்கு ஏற்றது ” எனக் கருதி, “ உடல் நலம் சரியாக இல்லை, நாளை வருகிறேன் ” எனச் செய்தி அனுப்பினார்.

தன்னைக் காண வரும்போது முப்பது வீரருக்கு மேல் உடன் அழைத்து வரலாகாதென்று லூஷிங்டன் கட்டபொம்முவுக்குத் தெரியப்படுத்தினான். ஆனால் பாஞ்சையதிபர் அதற்கு இணங்கவில்லை. கட்டபொம்முவின் போக்கு கலெக்டருக்கு விபரீதமாகத் தோன்றியது. வீரபாண்டியரை இவ்வாறு விட்டுவைத்தால், நிலைமை மோசமாகும் என்றும், உடனடியாகப் பாஞ்சாலங் குறிச்சியைக் கைப்பற்ற ஒரு பெரும்படையை அனுப்பவேண்டும் என்றும் சென்னை கவர்னருக்கு லூஷிங்டன் கடிதம் எழுதினான். கவர்னர் அது கண்டு கொதிப்படைந்தார். அப்பொழுது லார்ட் எட்வர்டு கிளைவ் என்பவர்



சென்னைக் கவர்னராக இருந்தார். அவர், மேஜர் பானர்மன் தலைமையில் பெரும்படை ஒன்றைத் திருநெல்வேலிக்கு அனுப்பினார். கலெக்டருடைய அதிகாரங்கள் யாவும் பானர்மனுக்கே அளிக்கப்பட்டன. இனிப் போர்புரிந்துதான் கட்டபொம்முவை அடக்கவேண்டும் என்று கும்பினியார் முடிவு செய்தனர்.

## 9. போர் முரசு

திருநெல்வேலிப் பாளையத்தைச் சேர்ந்த பாளையக்காரர்களுக்கும், மிராசுதாரர்களுக்கும், இதர மக்களுக்கும் கும்பினியார் ஒரு பிரகடனம் வெளியிட்டனர். அதில், பாளையக்காரரில் பலர் கும்பினியாரின் அதிகாரத்தை அலட்சியம் செய்து, நாட்டின் அமைதியைக் குலைத்து வருவதால், கும்பினியின் அதிகாரத்தை நிலைநிறுத்த வேண்டி மேஜர் பானர்மன் இராணுவத்தின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும், மக்கள் யாவரும் அவர் கட்டளைக்கு அடங்கி நடக்கவேண்டுமென்றும் குறித்திருந்தனர்.

மேஜர் பானர்மன் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் கும்பினியார் ஒரு உத்தரவை அனுப்பியிருந்தனர்: பாளையக்காரரில் முதன்மையானவர்கள் பிடிபட்டால் அவர்களைத் தகுந்த பாதுகாப்புடன் சென்னைக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்பது அவர்கள் கட்டளை. போர் செய்யாமல் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கான வழிகளை முதலில் ஆராயவேண்டும் என்றும் பானர்மனைக் கும்பினியார் கேட்டுக்கொண்டிருந்தனர். பானர்மன் 1799-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14-ம் தேதியன்று இராணுவத் தலைமைப் பதவியை ஏற்றான். பாஞ்சைக் காவலரை எவ்வாறாயினும் சிறை செய்து சென்னைக்கு அனுப்பக் கருதினான். தன்னைப் பாளையங்கோட்டையில் வந்து காணவேண்டுமென்று கட்டபொம்முவுக்கு ஓலை அனுப்பினான். பாளையங்கோட்டைக்குச் சென்றால் பானர்மன் தம்மைச் சிறைசெய்து விடுவான் என்பதைக் கட்டபொம்மு உணர்ந்திருந்தார். ஆதலால் "இன்று நாள் நன்றாக இல்லை; இன்னும் ஒரு வாரத்திற்குள் வருகிறேன்" எனச் சொல்லித் தூதுவனை அனுப்பிவிட்டு, மாப்பிள்ளை வன்னியர் என்பவரைப் பானர்மனிடம் அனுப்பிச் சமரசத்திற்கு வழிகோலுமாறு முயன்றார். பானர்மன் தூதுவந்த மாப்பிள்ளை வன்னியரை வஞ்சகமாகச் சிறைப்படுத்தினான். தன் சூழ்ச்சியைக் கட்டபொம்மு அறிந்துள்ளார் என்பதை உணர்ந்த பானர்மன் விரைவில் பாஞ்சாலங் குறிச்சியின்மீது படையெடுத்தான்.

அச்சமயம் திருச்செந்தூரில் முருகன் திருவிழா நடந்துகொண்டிருந்தது. செந்திலாண்டவன் பாஞ்சாலங்குறிச்சியாரின் குலதெய்வம். திருவிழாவில் கலந்துகொள்ள ஊமைத்துரை முதலான பாஞ்சை வீரர் செந்திலுக்குச் சென்றிருந்தனர். தானாபதிப் பிள்ளையும் ஸ்ரீவைகுண்டத்திற்கு அருகாமையில் உள்ள ஆற்றூரில் தங்கியிருந்தார். இதுவே படையெடுக்கத் தகுதியான சமயம் என்று பானர்மன் கருதினான். பகலில் படையெடுத்தால் பாஞ்சாலங் குறிச்சியார் உடனே அறிந்துகொண்டு எச்சரிக்கையாகிவிடுவர் என்று எண்ணி, தன் படையைத் திரட்டிக்

கொண்டு, பொழுது விடிவதற்குள் பாஞ்சாலங் குறிச்சி எல்லையை அடைந்துவிட்டான்.

1799-ம் ஆண்டு, செப்டம்பர்மாதம் 5-ம் நாளைத் தமிழ் மக்கள் என்றென்றும் மறக்கவொண்ணாது. அன்று பொழுது புலர்ந்ததும், காலைக் கதிரவனை வணங்குவதற்குக் கிழக்கே பார்த்து நின்ற பாஞ்சாலங் குறிச்சி மக்கள், கதிரவனைக் காணவில்லை; கும்பினியாரின் பட்டாளங்களையே கண்டனர். புல்வெளியில் வயிறார மேயும் பசுக் கூட்டங்களைக் காணவில்லை ; குடித்துவிட்டுக் கொக்கரித்துக் கூத்தாடும் கும்பினியாட்களைக் கண்டனர். பாஞ்சைக் கோட்டைக்கு அப்பால் பல கூடாரங்களில் முகாம் செய்திருந்தனர் வெள்ளையரின் கூலிப் படைகள். ஓட்டப் பிடாரத்தில் முகாம் செய்து வந்தான் பானர்மன். லெப்டினன்ட் டல்லாஸ் என்பவன் தலைமையில் ஒரு பீரங்கிப் படை பாஞ்சாலங் குறிச்சியைத் தாக்கப் புறப்பட்டது.

பானர்மன் தலைமையில் ஒரு பெரும் படை வருவது வீரபாண்டியருக்கு முன்னாளிரவே ஒற்றர் மூலமாகத் தெரியவந்தது. கோட்டையின் மீதிருந்த போர்முரசங்கள் மண்ணும் விண்ணும் அதிரும் வண்ணம் முழங்கின. அம் முரசொலியைக் கேட்ட படைவீரர் யாவரும் கோட்டைக்குள்ளே சென்று குழுமினர். கணநேரத்தில் கட்டபொம்முவின் படை திரண்டது. படைவீரர் அனைவரும் "ஒன்று போலே சோமன் கட்டினராம், அங்கே உருமால் சுங்கு விட்டுக் கட்டினராம், பொன்னும் சவ்வாது



பொட்டணிந்தனராம், கடைக்கண்ணுக்கு மையிட்டுச் சிறந்தனராம்". வீரத்தாய்மார் மைந்தரின் கால்களுக்கு வீரக்கழல் அணிவித்து விடை கொடுத்தனர். மனைவிமார் திலகமிட்டு ஆலத்தி சுற்றினர். இத் தமிழ் வீரர்களுக்கு உடைவாளும் வேலுமே ஆயுதங்கள்.

கட்டபொம்மு மனம் தளரவில்லை. காலையில் அவர் சக்கதேவியின் ஆலயத்தை அடைந்தார். அவ்வாலயம் ஓங்கார வடிவமானது. அதைச் சுற்றிலும் கோட்டைபோன்ற மதில்கள் ; ஆலயத்தினுள்ளே கர்ப்பக்கிருகத்தில் சிலை ஏதுமில்லை : ஒரு சூரியவாள் மட்டும் ஒரு மூலையில் தொங்கும். ஆண்டிற்கொருமுறை அவ் வாளுக்குப் பூசை நடக்கும். மக்கள் யாவரும் நீராடிக் களங்கமற்ற சிந்தையுடன் ஆலயத்தை அடைவர். பசுவின் நெய்யினால் எரியும் தீபங்கள் சுடர்வீசும். கனிவகைகளை ஜகதாம்பிகைக்குப் படைக்கப்படும். பந்தல் கரும்புக் கழிகளால் வேயப்பட்டது. பூசாரி, திருவிழாவுக்கு மூன்று நாட்கள் முன்பே விரதம் தொடங்கி இருந்து, ஒரு பட்டுத்துணியால் வாயைக் கட்டிக்கொண்டிருப்பான். உச்சி வேளையில் சிறிது நீர் பருகுவான். கூடம் எரிந்த வண்ணமாக இருக்கும். தொழுகை முடிந்தவுடன், கனிவகைகளை யாவருக்கும் வழங்குவர்.

அவ்வாலயத்தில் கட்டபொம்மு சென்று சக்கம்ம தேவியை வணங்கினர். "அம்மையே! நான் உனது அடைக்கலம். எல்லாம் உன் அருள். வெள்ளை

யரைப் போர்முனையில் சந்திக்கச் செல்கிறேன். என்னைக் காப்பது உன் கடமை" எனத் துதித்தார். கோட்டையில் குழுமிக்கொண்டிருக்கும் தமது படைவீரரைப் பார்த்தார். வீரரிற் பலர் கோட்டைச் சுவர்களின் மீதேறி வெள்ளையர் படையை வீர நோக்குடன் பார்த்தனர். "பொழுது புலர்வதற்குள் பாஞ்சைக்குள் வீரர் குழுமிவிட்டனரே! இவ் வீரரை எவ்விதம் தோற்கடிப்பது" என்று மனம் குழம்பிப் பலவாறு எண்ணினான் பானர்மன். முடிவில், இராமலிங்க முதலியார் என்பவரைத் தூதனுப்பத் தீர்மானித்தான்.

வெள்ளைக்கொடி தாங்கித் தமது அவைக்குள் புகுந்த இராமலிங்கமுதலியாரை உபசரித்து, வந்த காரியம் யாதென வினவினார் வீரபாண்டியர். "மன்னவ! கும்பினியார் கடுங்கோபம் கொண்டுள் ளனர். திரிசிரபுரத்தில் தாங்கள் கும்பினியாருடன் தோழமை பூண்டு வாழ்வதாகச் சொன்ன மொழி களை அன்னார் மறக்கவில்லை. தங்களுக்கு அங்குப் பல விருதுகளை வழங்கியதையும் அவர்கள் மறக்கவில்லை. ஆயினும், சமுகத்தின் இன்றைய மனப்பான்மை யைக் கண்டு அன்னார் படை யெடுத்துள்ளனர். அமைதி காண்பதே அறநெறி. சமுகம் சினம் நீங்கி, தளபதியைக் கண்டால் அமைதி ஏற்படும். ஆதலின் ஆவன செய்க" என முதலியார் மொழிந்தார்.

"நன்று, நன்று! அமைதியை விரும்பியிருந் தால் படையெழுச்சி ஏன்? தளபதி நேரே என் னிடம் வந்திருக்கலாகாதா? இவை பசப்பு வார்த்



தைகள். போர்முரசு முழங்கியாயிற்று. இனி வாள் முனையில்தான் பேச்சு" என மொழிந்தார் பாஞ் சைக்காவலர்.

அம் மொழிகளைத் தூதர் சொல்லக் கேட்ட பானர்மன், கோட்டையைச் சுற்றித் தன் படைகளை அணிவகுத்து நின்றான். தென்மேற்கு மூலையில் பீரங்கி மேடை அமைக்கப்பட்டது. குதிரை வீரர் கோட்டையை வளைத்துக்கொண்டனர். ஆனால் கோட்டைக்குள்ளிருந்து ஒரு சப்தமும் கிளம்ப வில்லை. பானர்மன் பாஞ்சாலங் குறிச்சிக்கோட்டை மீது காலை பத்துமணி சுமாருக்கு முதல் குண்டு வீசினான். வீரத்தமிழ் நாட்டில் உரிமைப் போர் புரிந்த தமிழரிடையே வெள்ளையரின் முதல் குண்டு வீழ்ந்தது!

உடன் பிறந்த தம்பியரோ இன்னும் வந்து சேரவில்லை. ஒன்று விட்ட தம்பி சிவத்தையா என் பான் மட்டும் வந்து சேர்ந்தான். கட்டபொம்மு தமது படைகளை அணிவகுத்துப் பார்வையிட்டார். தமது அன்புக்குரிய வெள்ளையத்தேவன் அங்கு இல்லாமலிருப்பதைக் கண்டார். ஒரு வீரன் முன் வந்து அவரை வணங்கி, "குருவி பறக்குதே! கண்ணி குத்தலாமா?" என்றான். வெள்ளையர் படையினரை வெள்ளைக் குருவிகள் என்று அழைப்பது அவ்வூ ராரின் வழக்கம். மற்றொருவன் முன்வந்து "போர் துவக்க உத்தரவுகொடுங்கள்" என்று வேண்டி நின்றான். ஆனால் கட்டபொம்மு மறுமொழி அளிக்க வில்லை. "வெள்ளையத்தேவன் எங்கே?" என்று

கேட்டார். அவ்வளவில் சுந்தரலிங்கம் என்பான் வெள்ளையத்தேவன் வீட்டிற்கு விரைந்தான்.

அவ்வேளையில் வெள்ளையத்தேவன் அயர்ந்து நித்திரை செய்வதைச் சுந்தரலிங்கம் கண்டான். அன்று அவன் எண்ணெய் தேய்த்துத் தலைமுழுகி இருந்தான். அவன் சிறந்த வீரன் ; ஆனால் துயிலில் கும்பகருணன் ! தூங்கத் துவங்கிவிட்டால் அவனை ஒருவரும் அண்ட முடியாது. அரைகுறைத் துயிலில் யாராவது அவனை எழுப்பிவிட்டால் வந்தது ஆபத்து! வாளால் உடனே அவனை வெட்டி வீழ்த்தி விடுவான். அவன் தலைப்புறம் உடைவாள் இருந்தது. உயிரிழக்காமல் அவ் வீரனை எப்படி எழுப்புவது என்று சுந்தரலிங்கம் யோசித்தான். அருகில் ஒரு நாணல் தட்டு கிடந்தது. அதை ஒரு புறத்தில் பிடித்துக்கொண்டு அதனால் அவனைச் சற்றே தட்டினான். அலறி எழுந்த வெள்ளையன் தன் உடைவாளை எடுத்து நாணல் தட்டை இரு துண்டுகளாக்கினான் ! சுந்தரலிங்கம் "மன்னவன் ஆணை !" என்று சொல்லி வணங்கி நின்றான்.

"மன்னவன் ஆணை" என்ற சொற்களைக் கேட்டவுடன், புலிபோல் பாயவந்த வெள்ளையத்தேவன் பூனைபோல் ஆனான். "போர்முரசு ஒலித்துவிட்டது. அரசர் உம்மைக் கூட்டிவரச் சொன்னார்." என்று சுந்தரலிங்கம் இயம்பினான். உடனே வெள்ளை துயில் நீங்கி எழுந்தான். கொண்டையில் பிச்சிப்பூவை அணிந்தான். ஆயுதங்களை எடுத்துக்கொண்டு மதம் கொண்ட யானைபோல் கிளம்பினான். நீர் அருந்துங்



கால் கலம் தவறிக் கீழே விழுந்தது ; நரி ஊளையிட்டது. முதற்கட்டில் வந்ததும் அவன் மனையாள் வெள்ளையம்மாள் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு தடுத்தாள் : "என் கணவரே ! இப்போது போகாதீர்கள். கெட்ட நிமித்தங்கள் பல தோன்றுகின்றன. அவற்றை நினைத்தாலும் என் உள்ளம் நடுங்குகிறது. கனவில், யான் குளிக்கப் புதுமஞ்சள் அரைத்தேன் ; அது காட்டுக்கரிபோல் கருமையாக இருந்தது. குலைதள்ளிய வாழைத்தோட்டம் அழியக் கண்டேன். மல்லிகைப்பூ கருகி உதிர்ந்தது; கூந்தல் அவிழ்ந்தது ; பாஞ்சை நகரம் அழியக் கண்டேன். ஆந்தை அலறிற்று ; கூகை கூவிற்று. பாஞ்சையை விட்டு இராஜ்யலட்சுமி நீங்கக் கண்டேன். உங்கள் உடலில் குண்டு பட்டு நீங்கள் அலறி விழுவதைக் கண்டேன். என் அருமைக் கணவரே ! போகாதீர், போகாதீர், போகாதீர் ! பிட்டுக்கு மண் சுமந்த சொக்கலிங்கத்தின்மேல் ஆணை. போகாதீர்கள் !" எனக் கூறி ஓவென்றலறி அவன் பாதங்களில் வீழ்ந்தாள்.

வெள்ளையன் இருபத்துநான்கு வயதடைந்த இளங்காளை ; கறுப்பழகன் ; அவனது வட்டமான பொட்டும் அரும்புமீசையும் மைதீட்டிய விழிகளும் எவரையும் மயக்கும் தன்மையன. தன் மனைவியை நோக்கி, "இதுவரை அன்னம் அளித்து நம்மைக் காத்துவந்த மன்னவனுக்குப் பேராபத்து வந்துள்ளது. சாவுக்குப் பயந்து நான் என் உயிரைக் காப்பாற்றிக்கொள்வது அழகாகுமோ ? ஆறிலும் சாவு,

நூறிலும் சாவு என்பதை நீ அறியாயோ? என் ஆண்டகையின் பணியில் உயிர் துறப்பதே அறம். ஆதலின் மனங்கலங்காதே" எனத் தேறுதல் கூறினான் வெள்ளையன். உடனே கோட்டையை நோக்கி விரைந்தான். தன்னை உட்புகாது தடுத்த அங்கியரை வெட்டி வீழ்த்தி வழி செய்துகொண்டு விரைவில் கட்டபொம்முவின் சமுகத்தில் வந்து வணங்கினான்.

இதற்குள் வெள்ளையரின் பீரங்கிகள் குமுறலாயின. அவர்களுடைய ஆயுதங்கள் துப்பாக்கிகளும் பீரங்கிகளும்; கட்டபொம்முவின் வீரர்கள் ஈட்டியும், வேலும், வாளும் தாங்கி எதிர்த்துத் தாக்கமுற்பட்டனர். சிவத்தையா பாதிப் படைவீரருடன் வடக்குக் கோட்டைவாயிலை யடைந்தான். வெள்ளையத்தேவன் தென்புறத்தில்தலைமைவகித்துப் பாய்ந்து பாய்ந்து எதிரிகளைத் தாக்கினான்; அவர்களை நொறுக்கினான்; இடிபோல் கர்ச்சித்தான்; மண்டை சிதறுமாறு அடித்தான்; இராஜாளிபோல் பாய்ந்துபாய்ந்து மாய்த்தான். அவனுடைய ஆற்றலைக் கண்ட வெள்ளையர் அவன்மேல் குண்டுமாரி பொழிந்தனர். போர்க்களத்தில் புகை சூழ்ந்தது; மேகங்களினிடையே தோன்றும் மின்னலைப்போல் புகைநடுவில் வெள்ளையன் காணப்பட்டான். ஆயினும் கும்பினிப் பட்டாளம் முன்னேறி வந்தது; அதன் தலைவன் காலன் துரை.

கும்பினியாரின் பீரங்கித் தாக்குதலினால் கட்டபொம்முவின் வீரரில் பலர் வீழ்ந்தனர். இருதிறத்திலும் கொலைகள் பல நிகழ்ந்தன. போர்க்களம் எங்கும் பிணக் குவியல்; இரத்தம் பெருக்கெடுத்தது. கரும்புகையின் படலமும் வெடிமருந்தின் நாற்றமும் எங்கும் சூழ்ந்தன. அந்நிலையில் கோட்டைச் சுவரின் ஒருபாகம் குண்டுமாரிக்கு ஆற்றாமல் சிறிது சரிந்தது. மேலும் மேலும் குண்டுகள் விழுந்ததால், அவ்விடத்தில் ஒரு வழியும் தோன்றிற்று. அச் சந்தினைக் கண்டதும் கும்பினிப் படையினர் கொம்மாளம் அடித்தனர். எதிரிப் படைவீரர் தம் தளபதியான காலனுடன் அவ்விடத்தை நண்ணினர். கோட்டை பிடிபட்டது என்று கூவினான் காலன். பகைவர் அச் சந்தின்வழியாக உட்செல்ல முயன்றனர். அதைக் கண்ட பாஞ்சைக் காவலர் இருபத்தைந்து துணைவருடன் அவ்விடத்தை யடைந்தார். அதற்குள் வெள்ளையத் தேவனுடைய ஈட்டி காலனுடைய இதயத்தில் பாய்ந்து முதுகுப் புறமாக வெளிவந்தது!

வேல்கம்பு தனது மார்பகத்தை நோக்கி வருவதைக் கண்ட காலன், உடைவாளை உருவி வெள்ளையத்தேவனைத் தாக்கினான். அப்பொழுது வெள்ளையத்தேவன் தன் சிரத்தைச் சற்றே சாய்த்துக்கொண்டான்: அதனால் அவ் வாள்வீச்சு பயனற்றுப் போயிற்று. காலனின் பின்னாலிருந்த மற்றொரு ஆங்கிலவீரன் தன் துப்பாக்கியால் வெள்ளையனை நோக்கிச் சுட்டான்; அந்தக் குண்டு வெள்ளையனின் கழுத்தில் பாய்ந்தது; வெள்ளையன் வீர சுவர்க்கம் அடைந்தான். அவன் இறந்தாலும் அவன் வீரம் இறக்கவில்லை. இறக்குமுன் பலர் அலறுவார்கள்; 'ஐயோ, அப்பா' எனக் கதறுவார்கள். ஆனால்

வெள்ளையனை கோட்டை மதிலின் ஓரத்தில் சாய்ந்து அமர்ந்தபடியே இறந்தான். அவன் தலையில் சூடிய பூவும் குலையவில்லை ; கையில் பிடித்த கத்தியும் நழுவி விழவில்லை !

தன் மணாளன் வீரமரணம் அடைந்ததைக் கேள்வியுற்ற வெள்ளையம்மை, அவன் சடலத்தின் அருகில்வந்து நின்றாள். அதனைத் தொட்டுத் தலையை நிமிர்த்தினாள் ; முகத்தை ஆவல் தீரப் பார்த்தாள் ; கரத்திலிருந்து வாளை உறுவிக்கொண்டு போர்க்களத்தில் குதித்தாள் ! பட்டுச்சேலை தரித்து, பசுமஞ்சள் பூசி, கொண்டையில் மல்லிகைமலர் சூடி, மங்கலியத்தில் செவ்வந்திப்பூ அணிந்து, நெற்றியில் திலகமிட்டுப் போர்முனையில் அவள் குதித்தது வீரத்திருமகள் தோன்றியதேபோல் காட்சியளித்தது ! வீராங்கனையாக உருவெடுத்த அவள், கண்ட இடமெல்லாம் வெள்ளையரை வெட்டிக் குவித்தாள். ஒரு படை வீரன் அவள்முன் வந்து, துப்பாக்கியை எடுத்துக் குறிபார்த்தான். அவனுடைய முண்டம் மட்டும் குறிபார்த்த வண்ணம் நின்றது ; அவன் சிரம் தரையில் உருண்டது ! போராடிக் களைத்தபின், அவ்வீர மாது, கணவனுடைய சடலத்தை இரு கரங்களாலும் தழுவினாள் ; அக்கணமே அவள் உயிர் உடலை விட்டுப் பிரிந்தது !

வெள்ளையன் இறந்த செய்தி கேட்ட கட்டபொம்மு கண்ணீர் விட்டுக் கலங்கினார் ; வாய்விட்டு அலறினார். அவன் உடலை எடுத்து மார்புடன் தழுவிக் கொண்டார். இருதரப்பிலும் சற்று நேரம் அமைதி நிலவியது. வெள்ளையத்தேவனையும் அவன் மனைவியையும் சந்தனச் சிதையில் வைத்துத் தகனம் செய்தனர். பாஞ்சை நகரிலிருந்த தாய்மார்கள் போர்க்களம் புகுந்து தமது மைந்தரின் உடம்புகளைத் தேடியெடுத்தனர்; மாரடித்துக்கதறியழுதனர்; மடியில் கிடத்தி முத்தமிட்டனர். கோட்டையைச் சுற்றிலும் எதிரிகள் ; சவங்களை அடக்கம் செய்ய இடமில்லை. ஆதலால் ஒரு பாழுங் கிணற்றில் பலரைப்போட்டு மண்ணை மேலே கொட்டினர். இவ்வாறு பாஞ்சையில் போர் முடியும்வரை நாள்தோறும் நடந்துவந்தது.



ஆங்கிலேயரால் நடப்பட்ட நினைவுக்கல் ஒன்று ஓட்டப்பிடாரத்தில் இன்றும் உள்ளது. அதன்மேல் " 1799-ம் ஆண்டு செப்டம்பர் மீ 5-ம் தேதியன்று பாஞ்சாலங் குறிச்சிப் போரில் மடிந்த டக்ளஸ், காலின்ஸ், பிளேக், பின்னி, டார்மெக்ஸ் என்ற ஐந்து தளபதிகளின் ஞாபகார்த்தமாக " என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால், அன்று மரித்த வெள்ளையத்தேவனுக்கு வீரக்கல் எங்கே ?

## 10. பகைவர் பாசறையில்

முதல்நாள் போரில் தோல்வியுற்ற வெள்ளையர் ஒட்டப்பிடாரம் சேர்ந்தனர். தலைவன் பானர்மன், மேலும் படைகளும் பீரங்கிகளும் தேவை என்று பாளையங்கோட்டைக்குச் செய்தி அனுப்பினான். அன்று இரவு கூடாரத்தில் கொம்மாளம்! முகாம் முழுவதும் தீபங்களின் ஒளி வீசிற்று. சிப்பாய்கள் அனைவரும் மது அருந்தி மயக்கம் அடைந்தனர். தூரதிருஷ்டிக் கருவியை எடுத்து ஒருவன் பாஞ்சாலங் குறிச்சியைப் பார்த்தானாம், ஒரு பொட்டல் காட்டின் நடுவில் ஒரு சிறிய கோட்டை தெரிந்ததாம். நாளைக்கே அதைப் பிடித்துவிடலாம் என்று சொல்லி நகைத்தானாம்!

கும்பினியார் முகாமில் குதூகலம் நிறைந்திருந்த அந்நேரத்தில் கட்டபொம்மு தம் தோழருடனும், திருச்செந்தூரிலிருந்து திரும்பிவந்த ஊமைத்துரையுடனும் மந்திராலோசனை நடத்தினார். எதிரியின் படைபலத்தை அறிவது நல்லது என்று தானாபதிப் பிள்ளை கூறினார். ஒற்றராக யாரை அனுப்புவது? மூவர் முன்வந்தனர். ஒருவன் சுந்தரலிங்கம்; கந்தன் பகடை இரண்டாமவன்; வீரமல்லு சேர்வை என்ற இளைஞன் மூன்றாமவன். இம் மூவரும் பாஞ்சை அதிபரிடம் தேவதா விசுவாசம் கொண்டவர்கள்.



மூவரும் ஒட்டப்பிடாரம் சென்று பகைவரின் படைபலத்தை உளவறிந்து வரவேண்டும் என்பது ஆணை. அவர்கள் ஒட்டப்பிடாரத்தை நோக்கி நடுநிசியில் கிளம்பினார்கள். செடிகளின் மறைவில் குனிந்து நடந்து அவ்விடத்தை அடைந்தனர். அங்கே எங்கும் ஒளிமயமாக இருந்ததைக் கண்டனர். "ஓகோ! வெள்ளையர் விழிப்பாகவே இருக்கின்றனர். இங்கிருந்து உளவறிந்து மீளுவது எப்படி? அவைநடுவில் வீரம் பேசிவந்தோமே. எடுத்த கருமத்தை முடிக்காவிடில் பெண்களும் நகைப்பரே" என்று மூவரும் மனம் வருந்தினர்.

அப்பொழுது ஒரு செடிக்கருகில் ஏதோ கறுப்பாகத் தோன்றவே, கும்பினியாரில் ஒருவன் அவ்விடத்தை நோக்கிப் பீரங்கியால் சுட்டான். குடிவெறியில் குண்டுகள் விண்ணை நோக்கிப் பறந்தன! நமது ஒற்றர் ஒளிந்துநின்று உயிரைக் காப்பாற்றிக் கொண்டனர். பொழுது புலரும் வேளை நெருங்கியும், மது வெறியில், வெள்ளையர் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு சுந்தரலிங்கமும் அவன் தோழரும் பகைவரின் பாசறையில் புகுந்தனர்.

பாசறையிலிருந்த விளக்குகளை அவர்கள் அணைத்தனர். அங்கிருந்த வீரரை வேட்டையாடினர். சிப்பாய்களை ஈட்டியால் குத்திப் பழிவாங்கினார்கள். அவ்வாறு சற்று நேரத்தில் நூறுபேர் மாய்ந்தனர். பாசறை எங்கும் இருள் சூழ்ந்தது. குடிவெறியில் தன் ஆள், மாற்றான் என்று இனம் தெரியாமல் ஒரு

வரையொருவர்குத்திக்கொண்டுஇறந்தனர் பலவெள் ளேயர் ! ஒரு குண்டினுல் கந்தன் பகடை இறந்தான். மற்ற இருவரும் வெள்ளேயரின் உடைகளே அணிந்து கொண்டு, பாஞ்சைநகரை நோக்கி நடந்தனர். அங்கே சேர்ந்ததும், அதிபரை வணங்கி எதிரிகளின் படை பலத்தைப்பற்றியும் தாம் விளேவித்த சேதத்தைப் பற்றியும் கூறினர் ; கந்தன் பகடை இறந்தான் என வும் பகர்ந்தனர். அவன் இறந்ததற்குக் கட்டபொம்மு மிகவும் இரங்கினுர்; மனங்கலங்கினுர். உடனடியாகக் கந்தன் பகடையின் மைந்தனே அழைத்து வாரி யெடுத்து, உச்சி மோந்து, மடியிலிருத்திக் கண்ணீர் விட்டார் அவ் வீரமன்னவர் ! மைந்தன் சின்னஞ் சிறுவன் ; ஆறு வயதும் நிரம்பாத பாலகன். "குழந் தாய் ! வருந்தாதே. நீர்மேல் குமிழி இக்காயம். தந்தையை இழந்தோமே என்று மனங்கலங்காதே. இனி உனக்குத் தாயும் தந்தையும் நானே" என்று கூறி, அம் மைந்தனே அவரே கனிவுடன் வளர்த்துவந்தார். என்னே அவருடைய அன்பு !

பாசறையில் நேர்ந்த சேதத்தை, மறுநாள் காலேயில் பானர்மன் கண்டு மனம் மருண்டான். உடனே இரண்டாம் நாள் போருக்கு ஆயத்தம் செய் தான். அதற்குள் பாளேயங்கோட்டையிலிருந்து புதிய பீரங்கிப் படைகள் வந்து சேர்ந்தன. இச்செய் தியைக் கட்டபொம்மு ஒற்றர் மூலம் அறிந்தார் ; கோட்டையை நோக்கிவரும் எதிரிப்படைகளே வரும் வழியிலேயே மடக்கிப் போர்புரிய வேண்டும் எனக் கட்டளேயிட்டார்.



உடனே முத்துவீரணச் சேர்வையின் தலேமை யில் முப்பது பேர் எதிரியை மடக்கக் கிளம்பினர். வழியில் உப்பளுற்று ஓடையில் அவர்கள் பதுங்கிக் கொண்டனர். வெள்ளேயரின் படை அணியணியாக வருவதைக் கண்டதும், மறைந்திருந்தவர் எழுந் தனர். அவர்களுடைய போர்க்கருவிகள் வில், அம்பு, கவண்கல், கைவெடிகள் ஆகியவைதாம். அவர்கள் கும்பினியாட்களின் நடுவில் கைவெடிகளே வீசிஞர்கள். அதனுல் பத்துப் பேர் உயிரிழந்தனர். கும்பினியார் அவர்களேப் பீரங்கியால் சுட்டனர். முப்பது வீரரும் வெந்து நீருகி வீரமரணம் அடைந் தனர். இரத்தப் பெருக்கிஞல் தரை தாமிரத்தகடு போல் ஆகிவிட்டது. என்ன கோரம் !

# 11. முற்றுகை

கும்பினிப் படைவீரர் பாஞ்சாலங் குறிச்சியை அடைந்து கோட்டையை வளைத்துக்கொண்டனர். பீரங்கிப் படைக்குமுன் ஈட்டியும் வேல்கம்பும் தாங்கிய படை எம்மாத்திரம் ? கும்பினியார் பட்டாளங்கள் வேட்டைநாய்போல் பாய்ந்து வந்தன. பாஞ்சை மாந்தர் முயல்போல் பதுங்கிப் போராடிவந்தனர். கொலையிலும் வஞ்சகத்திலும் பழகிய கும்பினிக் கூட்டத்திற்குமுன் நாட்டுப்பற்றும் வீரமும் மிகுந்த வீரர் ஆயுதபலமின்றி அலக்கணுற்றனர். இருதரப்பினரின் படைபலம் சமமாக இராமல் போயினும், பாஞ்சை மக்கள் வீராவேசத்துடன் போரிட்டது வியக்கற்பாலதே. கோட்டையின்மேல் குண்டுமாரி பொழிய ஆரம்பித்து விட்டது.

குண்டுமாரிக்குமுன் கோட்டை மதில்கள் படீர் படீரென வெடிக்கலாயின. வலிமைமிக்க கட்டபொம்முவின் கோட்டை கட்டுக் கட்டாக இடியத் தொடங்கிற்று. பாஞ்சைப் பதியில் தீயும் புகையும் எழும்பலாயின. வெப்ப மிகுதியாலும் போரின் வேகத்தாலும் வெள்ளைக்காரர் 'தண்ணீர் ! தண்ணீர் !' எனக் கதறலானார்கள். தண்ணீருக்குப் பதிலாக அவர்களுக்கு மதுவகைகள் வழங்கப்பட்டன. குடிவெறியில் தாக்குதல் கடுமையாயிற்று.



கோட்டையில் பல இடங்கள் இடிந்துபோயின. கோட்டை மதிற்சுவர்களுக்கிடையே சில நிலவறைகள் உண்டு. அவைகளை வெளியிலிருந்து காண முடியாது. அவைகளிலிருந்து ஈட்டிகள் எதிரிகளைத் தாக்கின. அதனால் பகைவர் முன்னேறிச் செல்ல முடியவில்லை. உள்ளிருந்து எறியப்பட்ட ஈட்டியும் வேலும் எதிரிகளைச் சாய்த்து வந்தன. கோட்டையில் பல இடங்களில் தீப்பிடித்துக் கொண்டது. அதற்குள் பொழுது சாய்ந்தது ; மாலைக் கதிரவன் மலைவாயினுள் புகுந்தான். இந்நிலையில் இரண்டாம் நாள் போர் நிறுத்தப்பட்டது.

கட்டபொம்மு மனம் கலங்கவில்லை. வெளியே முற்றுகை; கோட்டைக்குள்ளே கம்பளத்தார் சபை கூடிற்று. நிலைமையை ஆராய்ந்து பார்த்ததில் கோட்டைக்குள் அடைபட்டுக் கிடப்பதைக் காட்டிலும், வெளியே சென்று பகைவரைத் தாக்குவதே நல்லதெனத் தோன்றிற்று. அப்போது தானாபதிப் பிள்ளை எழுந்து தமது யோசனையை வெளியிட முற்பட்டார். இப்படி ஆலோசனை கூற முற்பட்ட அமைச்சர், அச் சமயம் எந்த மனநிலையோடிருந்தார் என்பதையும், அதற்குக் காரணம் யாது என்பதையும் இங்கே அறிந்துகொள்ளுதல் அவசியம் :

பாஞ்சாலங் குறிச்சியை நோக்கிப் பானர்மன் படையைச் செலுத்துமுன், ஆற்றூரில் தங்கியிருந்த தானாபதியைப் பிடித்துவரச் சில படைவீரரை ஏவியிருந்தான். அப் படையினர் பிள்ளையின் வீட்டை முற்றுகையிட்டனர். பிள்ளையின் மனையாளும் மக்

ருரும் மனம் மருண்டு, செயலிழந்து நின்றனர். பகைவரின் கையில் சிக்கிக்கொண்டால் யாது நேரிடுமோ என்று பயந்து, பிள்ளை கொல்லைப்புற மாக வெளிவந்து, ஒரு வைக்கோல் போரினுள்ளே மறைந்துகொண்டார்! அவரைக் காணுத பகைவர் அவர் மனைவி மக்களைக் கைது செய்ததுமன்றி, அவருடைய உடைமைகளையும் அபகரித்துக்கொண்டனர். பிள்ளையின் மனைவி மக்கள் சிறைப்பட்டதைக் கண்ட பானர்மன் சற்றே ஆறுதல் அடைந்தான்.

பகைவர் சென்றபின், தானுபதிப் பிள்ளை, தன் புகலிடம் விட்டு, இரவோடிரவாகப் பதுங்கியோடி வந்து பாஞ்சை நகரை அடைந்து, அதிபரைச் சரணடைந்தார். "ஐயோ! மாலையிட்ட மனைவியை மாற்ருர் சிறைப்படுத்த விட்டு வந்தேனே! இது அவமானமன்ருே? இது உமது அரசுக்கே சிறுமையல்லவா?" எனப் புலம்பினுர். மன்னவன் மனங் கனிந்து, "போர்நிலையில் துயரம் பல விளைதல் இயற்கையே. எவ்வாருயினும் உமது மனைவியை மீட்டுத்தர முயலுவேன்" என்று உறுதிமொழி அளித்தார். ஆயினும் தானுபதியின் மனம் தத்தளித்துக்கொண்டே இருந்தது.

இந்த நிலைமையில் இருந்துகொண்டுதான் மந்திராலோசனையில் தானுபதிப் பிள்ளை தமது கருத்தை வெளியிடலானுர். "காகம் பறவாத கோட்டை கட்டுக்காவலை மீறிவிட்டது. பொன் மிளிர்ந்த பாஞ்சையில் இப்பொழுது பிணம் மலிந்துள்ளது. கோட்டையோ இடியத் தொடங்கி



விட்டது. போரை நிறுத்திவிட்டு வெளியேறினுல் தான் நாம் பிழைக்கலாம்; இன்றேல் அழிவு நிச்சயம்" என்ருர்.

தானுபதியின் மொழிகளைக் கேட்ட ஊமைத்துரை கண்களில் கோபக்கனல் பரக்கச் சொல்லலுற்ருர்: "தானுபதியே! என்ன வார்த்தை சொன்னீர்! உமது மதி எங்கு போயிற்று? தீயில் மடிந்தாலும் கோட்டையை விட்டு வெளியேற மாட்டோம். இப்பொழுதே சென்று வெள்ளையர் கும்பலை விரட்டிவிட்டு வருகிறேன்" என்று சீறி எழுந்தார். நள்ளிரவில் கும்பினியார் கூடாரத்தினுள் ஊமைத்துரை புகுந்தார். அவருடன் சில வீரரும் சென்றனர்.

தமது கூடாரத்தில் புகுந்த பாஞ்சை வீரரை எதிர்த்துப் பகைவர் போரிடத் துவக்கினர். பாஞ்சை வீரர், ஆட்டுமந்தையில்புகுந்த புலிபோல் அனர்த்தம் விளைத்தனர். ஊமைத்துரைக்குத் தம் உயிர்மேல் விருப்பம் இல்லை. வெற்றியை எவ்வாறேனும் அடையவேண்டும் என்பதே அவருடைய நோக்கமாக இருந்தது. உடன்வந்தவரில் ஒருவன் எதிரிகளைச் சிலம்பக் கம்பால் அடித்தான். மற்ருெருவன் வெள்ளையரை வெள்ளரிக்காய்போல் வெட்டினுன். பின்னுமொருவன் பகைவரை ஈட்டியால் குத்திச் சாய்த்தான். ஒருவன் கும்பினியாரின் குதிரை லாயத்தில் புகுந்து, ஒரு அழகான பரியைச் சேணம் போட்டுக் கூட்டிவந்தான். ஊமைத்துரை அதன்மேல் ஏறிக்கொண்டு, பகைவர் தலைவனுடன் போரிட்டார். போர்

தீவிரமாக நடந்தது. அவ்வமயம் ஊமைத்துரையின் நெற்றியில் வாள்வெட்டு ஒன்று விழுந்தது. அவ்வளவில் கம்பளத்தார் படை ஊரை நோக்கித் திரும்பிற்று.

கருப்பன் என்பான் கம்பளத்தார் படைவீரன். அவன் வெள்ளையரிடம் அகப்பட்டுக்கொண்டான். ஆயினும் அவன் மூர்க்கமாகப் போர்செய்தான். ஒருவாள் அவன் வயிற்றைக் குத்திக் கிழித்தது; அதனால் அவன் குடல் வெளியே வந்துவிட்டது. ஆனால் கருப்பன் குடலைத் தன்கையால் உள்ளே தள்ளினான். மேலாடையால் வயிற்றை இறுகக் கட்டிக்கொண்டான். ஒரு கையினால் வயிற்றைப் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையினால் வாட்போரில் இறங்கினான்! பகைவரில் பலரைக் கொன்று குவித்தான்! இறுதியாக, பாஞ்சையை நோக்கித் திரும்பி வரும்பொழுது, அவனுடைய கால்கள் சகதியில் அகப்பட்டுக்கொண்டன. அவ்விடத்திலேயே அவன் உயிரை யிழந்தான்.

ஊமைத்துரைக்கு நேர்ந்த வெட்டுக் காயத்தைக் கண்ட கட்டபொம்மு கலக்கம் கொண்டார். கோட்டைக்குள் அடைந்து கொண்டு எத்தனை நாட்கள் போரிடுவது என்று எண்ணலானார். ஆதலால், பாஞ்சைநகரைவிட்டு வெளியேறிக் கும்பினித் தலைவர்களிடம் நேராகச் சமரசம் பேசினால் நற்பயன் விளையும் என்ற தானாபதிப் பிள்ளையின் கருத்துக்கு இசைந்தார். உடனே பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையைவிட்டு வெளியேற முடிவுசெய்தார் பாஞ்சை



அதிபர். அன்னையும் தம்பியரும் அக் கருத்துக்குச் சிறிதும் இணங்கவில்லை. கும்பினியாருடன் சமரசம் பேச முடியாவிடினும், வெளியிலிருந்து படைதிரட்டிப் போரிடலாம் என்பது அவருடைய கருத்து. அரண்மனையிலிருந்த வயோதிகர், மாதர், பாலர், பசுக்கள் முதலியோரைக் கவனத்துடன் வெளியேற்றினார். பின்பு தம்பியருடனும் மைத்துனருடனும் 1799-ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 7-ம் தேதி நள்ளிரவில் தமது மாளிகையை விட்டுப் பரதேசிபோல் வெளியேறினார். பயணம் அந்தரங்கமாகவே நடைபெற்றது. பசுவைப் பிரிந்த கன்றுபோல் மக்கள் கதறியழுதனர். அன்றொருநாள் சக்கரவர்த்தித் திருமகன் அயோத்தி நகரைவிட்டு நீங்கியபொழுது அந்நகர மாந்தர் எவ்வாறு துயரம் அடைந்தனரோ, அவ்வாறே பாஞ்சை மக்கள் துக்கித்தனர்.

கோட்டையைச் சுற்றியோ கும்பினிப் படை குவிந்திருந்தது. எவ்வாறு வெளியேறுவது? அப்பொழுது தானாபதிப் பிள்ளை, "கோட்டைமேல் ஏறிக் கொத்தளநெட்டில் சுவர்மீது சென்று பீரங்கி மேடு என்று சொல்லப்படும் மண்மேடு வழியாக ஏணிவைத்து இறங்கிவிடலாம்" என்றார். தாம் பெருமிதத்துடன் ஆண்டுவந்த கோட்டை மதிலின்மேல் நடுநிசியில் பதுங்கி வெளியேறும் கொடுமையை நினைக்குங்கால் வீரபாண்டியரது உள்ளம் எங்ஙனம் பதைபதைத்திருக்கவேண்டும்! கோட்டையை விட்டு வெளியேறியதும், தமது மனைவியாரையும் சில ஊழியரையும் தூத்துக்குடியி

விருந்த தமது நண்பரான டேவிசன் என்பாரிடம் உற்ற துணையுடன் அனுப்பிவைத்தார். பொழுது புலர்வதற்குமுன் அவரும், அவருடைய தம்பியரும், ஊமையரும் நாகலாபுரம் சேர்ந்தனர். நாகலாபுரத்தின் அதிபர் வந்த விருந்தினரை வரவேற்று உபசரித்தார்.

பாஞ்சையதிபர் தப்பிவிட்டார் என்ற செய்தியைக் கேட்டவுடனே பானர்மன் அவர் சென்றிருக்கக்கூடும் எனத் தான் கருதிய வழியிலிருக்கும் பாளையங்களின் தலைவர்கள் அனைவருக்கும் கடிதம் வரைந்தான். கட்டபொம்முவினால் காலிசெய்யப்பட்ட கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டான்; அதன் மேல் கும்பினிக் கொடியைப் பறக்கவிட்டான். போரில் காயமடைந்தோருக்கு அவ்விடத்தில் சிகிச்சை செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தான். பின்பு, தன் படையினருடன் நாகலாபுரம் நோக்கிப் பிரயாணம் செய்தான்.

அதற்குள் எட்டையாபுரத்துப் பாளையக்காரனிடத்திலிருந்து அவனுக்கு ஒருகடிதம்வந்தது. அதில் தான் கட்டபொம்முவைத் தேடிப்பிடிக்க உதவி செய்வதாக வாக்களித்து, தனக்குச் சில போர்வீரரை உதவிக்கு அனுப்பவேண்டுமென்று கோரியிருந்தான். உடனே பானர்மன், டல்லாஸ் தலைமையில் சில சிப்பாய்களை அனுப்பினான். எட்டையாபுரத்து வீரருடன் டல்லாசின் படையினரும் சேர்ந்து தேடி,



கட்டபொம்மு கோலார்பட்டிக்கோட்டையில் இருப்பதை அறிந்துகொண்டனர். எட்டையாபுரத்தாருக்கும் பாஞ்சாலங் குறிச்சியாருக்கும் கடுமையான போர் நடந்தது. முடிவில் கட்டபொம்மு தமக்கு அந்தரங்கமான ஆறு தோழருடன், பகைவரின் அணியைப் பிளந்துகொண்டு, குதிரைமீதேறித் தப்பித்துச் சென்றார். அவரைப் பின்தொடர்ந்து வந்திருந்த ஐம்பதின்மரில் முப்பத்து நான்குபேர் பகைவரிடம் சிக்கிக்கொண்டனர். அவர்களுள் முக்கியமானவர் தானாபதி சுப்பிரமணியப் பிள்ளை.

கட்டபொம்மு ஓடிப்போனால் என்ன ? கட்டபொம்முவைப் பின்னின்று ஆட்டிவைத்த பிள்ளை மகன் அகப்பட்டுவிட்டான் என்று கும்பினியார் களிவெறி கொண்டனர். தானாபதிப் பிள்ளையை நாகலாபுரத்தில் முகாம் செய்திருந்த பானர்மன் முன்பாக நிறுத்தினர். கும்பினியாரின் வெற்றியைக் கண்டு நாகலாபுரத்துப் பாளையக்காரன் கீழ்ப்படிந்தான். எட்டையாபுரத்தான் பல பரிசுகளைப் பெற்றான்.

தானாபதியின்மீது பானர்மன் மிகுந்த சீற்றம் கொண்டிருந்தான். அவரைத் தூக்கிலிடவேண்டும் என்று கும்பினித் தலைவருக்கு எழுதினான். அவர்களும் அதனை ஒப்புக்கொண்டனர். பிடிபட்ட பிள்ளை சிறைக்குள்ளே மனம் புழுங்கினார். பாஞ்சையைவிட்டு வந்தது மதியீனம் என்று தம்மையே நொந்துகொண்டார். மன்னரையும் வெளியேற

மாறு செய்தோமே என்று வருந்தினர்; என்ன தண்டனை கிடைக்குமோ என்று ஏங்கினர்; 'மனைவியைக் கைவிட்ட மாபாவி யல்லவா நான்' என்று பெருமூச்சு விட்டார்.

செப்டம்பர் மாதம் பதின்மூன்றும் நாள் பொழுது புலர்ந்ததும் பானர்மன் தன் படைகளை அணிவகுத்து நிறுத்தினன். தானாபதியைக் கொல்ல முடிவு செய்திருந்த போதிலும், விசாரணை நடத்தியே அவரைக் குற்றவாளியாக்க வேண்டும் என்று கருதினன். நாகலாபுரம் அரண்மனைக்கு அருகில் ஒரு கூடாரத்தை அமைத்து அதில் தானாபதிப் பிள்ளையின் விசாரணை நாடகத்தை நடத்தினன். சில பாளையக்காரரை விசாரணைக்கு அழைத்தான்.

தானாபதிப் பிள்ளையையும் அவருடன் பிடிபட்ட அவருடைய சோதரனையும் சபையின் முன்னே காவலாளர் கொணர்ந்து நிறுத்தினர். பேரளவில் ஏதோ விசாரணை நடந்தது. "கும்பினியாருக்கு நேரிட்ட துன்பங்களுக்கெல்லாம் நீயே காரணம். உனக்குத் தூக்குத்தண்டனை விதித்துள்ளேன்" என்று பானர்மன் தீர்ப்பளித்தான். அருகில் உயரமான ஒரு வேப்பமரம் இருந்தது. அதில் காலை ஒன்பது மணிக்குப் பிள்ளை தூக்கிலிடப்பட்டார். தூக்கு மரத்தில் துடிதுடித்து இறந்தார். சாவுக்குப் பின்னும் பகை உண்டா? ஆனல், பானர்மன் அவர் இறந்ததும் சர்க்கரை வழங்கினனம். அவன் பகைமை அதனேடு நீங்கவில்லை; பிள்ளையின் தலையை வெட்டி, ஒரு ஈட்டியில் குத்திக் கொண்டு போய், பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டைச்சுவரின் மேல், மாந்தர் அனைவரும் பார்க்கும்வண்ணம் நட்டு வைத்தான். இந்தக் கொடிய செய்கையை எண்ணுந்தோறும் நம்முள் தோன்றும் உணர்ச்சிகளை நாவினல் சொல்ல முடியாது. நடந்தது நியாய விசாரணை அல்ல; அது ஒரு படுகொலை என்றே நாம் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது.

## 12. காட்டிக்கொடுத்த கயமை

பாஞ்சாலங் குறிச்சியிலிருந்து வீரபாண்டிய ரைத் தொடர்ந்துவந்த ஐம்பதின்மரில், முப்பத்து நான்குபேர் கும்பினியாரால் சிறைப்படுத்தப் பட்ட னர் அல்லவா? மிகுந்தவரில் அறுவருடன் கட்ட பொம்மு அவ்விடத்தை விட்டு நீங்கினானன்றோ? எழுவரும் வாயுவேகமாக ஓடும் பரிகளின்மீது பறந்து சென்றனர். மன்னர் முத்துராமு என்னும் தம் குதிரையின்மேல் சென்றார். நெடுந்தூரம் விரைந் தோடியதால் அது வழியில் களைப்புற்று வீழ்ந்து மாண்டது. பரியை இழந்த பார்த்திபர் அலறி அழு தார்; அதன் சடலத்தை அன்புடன் அடக்கம் செய் தார். பின் தொடர்ந்தோருடைய பரிகளும் ஒன்றன் பின் ஒன்றாகக் கீழே சாய்ந்தன.

பரிகளை இழந்த வேந்தரும் தோழரும் கால்நடை யாகவே கடுகிச் சென்றனர். காலில் செருப்பு இல்லை; தலைக்குக் குடையுமில்லை. பல்லக்கிலும் பரிமீதும் சென்றுவந்த சீமான், இன்று கடும் வெயிலில் கால் நடையாகச் செல்வதைப் பார்த்த தம்பியரும் தோழ ரும் பதைபதைத்தனர். ஆலயம் சென்று ஆண்ட வனை வழிபடும் நேரம் தவிர, வேறு எச்சமயத்திலும் கால்நடையாக அவர் சென்றதில்லை. கல்லும் முள் ளும் காலில் உறுத்தின; கொப்புளங்கள் எழுந்தன. அதன் பின்பு தள்ளாடித் தள்ளாடி நடக்கலானார்.



சிறிது நேரத்தில் கதிரவன் மேற்கில் மறைந்தான். எழுவரும் சிவகங்கையைச் சேர்ந்த ஆனியூர் என்ற ஊரையடைந்து, அங்கிருந்த சாவடியில் சற்றே இளைப்பாற அமர்ந்தனர்.

அன்னாரின் வனப்பையும் முகவிலாசத்தினையும் கண்ட ஆனியூர் மக்கள் அவர்களை அணுகி உரை யாடினர். மன்னரின் பெருந்தன்மையையும் உடன் வந்தோரின் நேர்மையையும் கண்ட மாந்தர், அவரே பாஞ்சை அதிபர் என அறிந்துகொண்டனர். உடனே அன்னாருக்கும் அன்னாரின் தோழருக்கும் உள்ளன்புடன் உபசாரங்கள் பல செய்து விருந்து அளித்தனர். வழி நடந்த களைப்பும் உண்டபின் வரும் இளைப்பும் சேர்ந்து காவலரைத் துயிலில் ஆழ்த்தின. மறுநாள், ஆனியூர் மக்களின் வற்புறுத் தலுக்கிணங்கி, அவ்வூரிலேயே ஒரு வாரகாலம் தங்கி யிருந்தனர்.

காடல்குடி பாளையக்காரர் வீரகஞ்சய நாயக்கர் ஏழாம் நாளிரவு ஆனியூர் வந்து, பாஞ்சை அதி பரைக் கண்டு பெரிதும் வருந்தினார். தானாபதிப் பிள்ளை கும்பினியாரால் தூக்கிலிடப்பட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் கட்டபொம்மு வாய்விட்டு ஓ! என்று கதறியழலானார். "தாயின் சொல்லை மீறி, தாரத்தை விடுத்து, மதிகெட்டுத் தலைநகரை விட்டு நீங்கிப் பழிக்கு ஆளானேனே!" என்று விம்மி விம்மி அழுதார்.

பின்பு பானர்மன் பாஞ்சையில் கும்பினியாரின் கொடியை ஏற்றினான் என்று கேள்விப்பட்டதும்

வீறுகொண்டு எழுந்தார். "தம்பிமாரே! தாமதம் செய்யாதீர்கள். அன்னையும் உறவினரும் எங்குள்ளனரோ! அவர்கட்கு எது வந்துற்றதோ! பாஞ்சை மக்களுக்கு என்ன நேர்ந்ததோ! வெள்ளையரைப் பழிக்குப் பழி வாங்காவிடில் நான் உறக்கம் கொள்ளேன். போர்முனையில் உயிரை விடுவதே வீரனின் பண்பு" என்று கூறிப் பதறி எழுந்தார். அங்குக் குழுமியிருந்தோர் மன்னரை விளித்து, "மன்னவரே! சற்று அமைதி கொள்ள வேண்டுகின்றோம். தன் வலியும் மாற்றான் வலியும் தெரிந்தபின்பே போரில் இறங்கவேண்டும். பாஞ்சை நகருக்குச் செல்ல இது தருணம் அல்ல. நம்மிடம் படைவலிமை இல்லை. படைதிரட்டிய பின்னரே போரில் முனையவேண்டும்" என்று பலவிதமாகப் பேசி அவருடைய சினத்தைத் தணித்தனர்.

பொழுது புலர்ந்ததும், பார்த்திபர் புதுக்கோட்டைக்குப் பயணமானார். ஆனியூர் மாந்தர் அன்னாருக்குப் பிரியாவிடை அளித்தனர். தம்பியரும் துணைவரும் உடன் வர, கட்டபொம்மு, அன்றிரவு புதுக்கோட்டையைச் சேர்ந்த சோளபுரம் என்னும் கிராமத்தை அடைந்தார். அக் கிராமத்தார் வீரபாண்டியரை வரவேற்று உபசரித்தனர். அங்கே அவர் இரண்டு நாட்கள் தங்கியிருந்தார்.

கோலார்பட்டியிலிருந்து கட்டபொம்மு தப்பிச் சென்றதை அறிந்த பானர்மன் ஏமாற்றம் அடைந்தான். தன் படைவீரரைப் பல திசைகளிலும் ஏவினான். பலவிடங்களில் தேடியும் பாஞ்சையதிபரைக் காணாமல் அவர்கள் திரும்பிவந்தனர். பானர்மன் சளைக்காமல், "கட்டபொம்மு தப்பிச் சென்றுள்ளார். அவரைப் பிடித்துக் கொடுப்பவருக்குப் பரிசுகள் பல வழங்கப்படும்" என்று பாளையங்களுக்குச் செய்தி விடுத்தான்.



இச் செய்தியைக் கேள்வியுற்ற எட்டையபுரத்தான் தன் ஒற்றரைப் பல திசைகளிலும் அனுப்பினான். அவர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் சென்று தேடி, இறுதியில் கட்டபொம்மு புதுக்கோட்டைக் கருகில் இருப்பதை அறிவித்தனர். அதன் பயனாக, கட்டபொம்முவைப் பிடித்துச் சிறைசெய்ய வேண்டும் என்று புதுக்கோட்டைத் தொண்டைமான் விஜயரகுநாதனுக்கு ஆணைபோயிற்று.

முதலில் தொண்டைமான் உள்ளம் பதைபதைத்தான். ஒருபுறம் கும்பினியாரின் ஆணை; மறுபுறம் பாஞ்சையதிபரிடம் பெருமதிப்பு. "பாஞ்சை மன்னர் வீரசிகாமணி அல்லவா! மானமே பெரிதென மதிப்பவராயிற்றே! அவர் நமக்குப் பகைவரல்லவே! சென்ற ஆண்டில் அவருக்கு நாம் ஓர் பெரும் விருந்து அளித்தோமல்லவா! இவ்வாண்டில் அவரைக் காட்டிக் கொடுப்பதா! இது என்ன தர்மசங்கடம்!" என்று தொண்டைமான் வருந்தினான். ஆனால் கும்பினியாரின் ஆணையை மீற அவனுக்குத் தைரியம் இல்லை. தொண்டைமானுடைய தேவியோ, "பாஞ்சைக் காவலரைக் காட்டிக் கொடுத்தால், உலகம் நம்மைப் பாவிகள் என்று பழிக்குமே! இச்சதியாலோசனையைக் கை

விடவேண்டும்" என்று அறவுரை கூறினான். ஆனால் தொண்டைமானோ சுயநலமே உருவெடுத்தவன்; அந் நலத்தையே அடைய முடிவுசெய்தான். பல திசைகளிலும் தன் ஒற்றரை ஏவிப் பாஞ்சை யதிபர் இருக்கும் இடத்தை அறிந்து வர அனுப்பினான். ஐந்தாம் நாள் ஒற்றன் ஒருவன் தொண்டைமானைக் கண்டு, பாஞ்சைச் சிங்கம் சோளபுரத்தில் இருப்பதாகக் கூறினான்.

இச் செய்தியைக் கேட்ட தொண்டைமான் உள்ளங் களித்தான். 'கட்டபொம்முவுக்கு உதவி செய்தால் கும்பினியாரின் பகை ஏற்படும்; நமக்கு ஆபத்துவரும். கும்பினியாருக்கு உதவிசெய்தால் இலாபம் உண்டாவதுடன் அவர்களுடைய நட்பும் கிடைக்கும்' என்று எண்ணமிட்டான். உடனே தன் படைவீரரில் மூவரைச் சோளபுரத்திற்கு அனுப்பினான். இதற்கிடையில், புதுக்கோட்டை சென்று வருவதாகக் கூறிக் கட்டபொம்மு பயணமானார். அப்பொழுது தொண்டைமானுடைய ஆட்கள் அவ்விடத்தை அடைந்து, மன்னவரை வணங்கி, தொண்டைமான் அவருடைய வருகைக்குக் காத்திருப்பதாக அறிவித்தனர்.

சூதுவாது அறியாத வெள்ளை நெஞ்சத்தினர் பாஞ்சை அதிபர். தொண்டைமான் அனுப்பிய தந்தச் சிவிகை யொன்றில் கட்டபொம்மு அமர்ந்தார். தம்பியரும் தோழரும் புரவிகளின்மேல் பின் தொடர, அனைவரும் அவனது அரண்மனை வாயிலை அடைந்தனர். அங்கே வள்ளலை வரவேற்க ஒரு



ஆயத்தமும் காணப்படவில்லை. தொண்டைமான் உள்ளே யிருந்தும் விருந்தினரைக் காணாதவன் போல் பராமுகமாயிருந்தான். அதுகண்ட தோழர் மனம் கலங்கினர். அவரை அழைத்துவந்த வீரர் மாளிகையினுட் புகாது வெளியே நின்றனர்.

கட்டபொம்மு கலங்கவில்லை. சிவிகையிலிருந்து இறங்கி, நண்பனைக் காண மாடியை அடைந்தார் தம்பியருடன். அதன் பிறகும் வாளாவிருக்க இயலாமல் விஜயரகுநாதன் விரைந்தெழுந்து எதிர் கொண்டு வந்து, கைகூப்பி, "வருக! வருக!" என்று வரவேற்றான். உள்ளத்தில் வஞ்சனை; உதட்டில் வாழ்த்து! அக் கள்வனுடைய மனக் கருத்தைக் காவலர் அறிந்துகொள்ளவில்லை.

தொண்டைமான் பாஞ்சைக் காவலருக்கும் அவருடைய துணைவருக்கும் பெரும் விருந்து அளித்தான்; அருகில் அமர்ந்து நன்மொழிகள் பல பேசினான். தனி மாளிகை ஒன்றில் அவர்களை இருக்கை கொள்ளச் செய்தான். காவலர் சொன்னவற்றைக் கேட்டுத் துயருற்றவன்போல் நடித்தான்; அவருக்கு ஆறுதலும் கூறினான். பின்பு கும்பினியாரைக் காணத் திரிசிரபுரம் போய் வர ஏற்பாடு செய்யப்போவதால் அதுவரையில் தன் விருந்தினராகத் தங்கியிருக்கவேண்டுமென்றும் வேண்டி நின்றான். வஞ்சனை என்பது இன்னதென்றே அறியாத வள்ளல் கட்டபொம்மு, அவன் சொற்களைக் கேட்டு மன நிம்மதியுடன் தங்கியிருந்தார். வேளைதோறும் புத்தம் புதுஉணவு வகைகள், விதவிதமான சிற்

றுண்டிகள், சுவைமிகுந்த கனிவகைகள் முதலிய வற்றை உட்கொண்டு தோழர் எழுவரும் வருங்கேடு அறியாது வதிந்து வந்தனர்.

1799–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் நாள் வந்தது. அன்று நண்பர் எழுவரும் மங்கல நீராடி, அறுசுவை உண்டி அருந்தி, உப்பரிகையில் பஞ்சணைமீது படுத்துறங்கினர். பிற்பகல் மணி மூன்று இருக்கும். கும்பினிப் படைகள் புதுக் கோட்டைக்குள் புகுந்தன. நகரமாந்தர் துருப்பு களைக் கண்டு காரணம் அறியாது விழித்தனர். உட் புகுந்த படைவீரர் கட்டபொம்மு இறங்கியிருந்த மாளிகையை வளைத்துக்கொண்டனர். உறக்கத்தி னின்றும் விழித்தெழுந்த ஊமைத்துரை, "அண்ணு! மோசம் வந்தது" என்று கூவினுர்; மாடிப்படியில் கும்பினிப் படையினர் ஏறிவருவதைக் கண்டார். உடனே அருகிலிருந்த தடியொன்றை எடுத்துச் சிலம்பம் ஆடினுர். இரண்டு வீரர் உடல் நொறுங் கிப் படிகளின் வழியாக உருண்டு போயினர்!

ஊமைத்துரை சினம் மிகுந்து "அண்ணலே! சதி நடந்துள்ளது. தொண்டைமான் நமக்கு வஞ் சகம் புரிந்துள்ளான். முதலில் அவனைத் தொலைத்து விட்டுப் பின்பு கும்பினிப் படைகளைக் கொன்று குவிப்போம். இனியும் வாளா இருத்தல் அழகல்ல" என்று மதங்கொண்ட யானைபோல் கர்ஜித்தார். கட்டபொம்மு அவரைக் கையமர்த்தினுர். "தம்பி! உண்டவீட்டில் உயிர்க்கொலை புரியலாகாது. எல் லாம் வினைப்பயனே. தொண்டைமானை நம்பி



மோசம் போனேம். அவனைக் கொல்வதால் யாது பயன்? செந்திலாண்டவன் ஆணை. காலம், இடம் நோக்கி, கொண்ட கோபம் தணி" என்று இத மொழிகளைக் கூறினுர். அன்று கண்ணிலான் அவையில் தருமனுல் கருத்தழிந்து நின்ற வீமன் போல் அடங்கினுர் ஊமைத்துரை. வெள்ளையரின் தளபதி வீரபாண்டியரை அணுகினுன்; ஆனுல் செய்வதென்ன என்றறியாது திகைத்தான். "தயக் கம் ஏன்? கொண்ட கருத்தினை நிறைவேற்று. வஞ்சகரை நம்பி மோசம் போனேன். உன் கடமை யைச் செய். என்னிடம் போர்க்கருவிகள் ஏது மில்லை. பயப்படாதே" என்று மொழிந்தார் அவ் வீரவேந்தர்.

அவ்வளவில், அத் தளபதி ஒருவாறு மனம் தேறி, மன்னரை அணுகிக் கை நடுக்கத்துடன் அவர் கரங்களில் விலங்கை மாட்டினுன்! அது தமிழ் வேந்தருக்கு மட்டும் இடப்பட்ட விலங்கல்ல. தமிழ் நாட்டிற்கே அத் தளபதி விலங்கைப் பூட்டினுன். அவ்விலங்கைத் தகர்த்து எறிய நூற்றைம்பது ஆண்டுகள் சென்றன. மற்ற அறுவரையும் கூடவே சிறைசெய்தான் அவ் வெள்ளையன்.

என்ன துரோகச் செயல்! தொண்டைமானின் துரோகத்தினுல் தமிழ்நாடு தலைகுனிய நேரிட்டது. செங்கோல் தாங்கிய கரங்கள் விலங்கைத் தாங்கி நின்றன. அறம் வளர்த்த கைகள் மறத்திற்கு அடங்கி ஒடுங்கின. பகைவரைப் போரில் கொன்று குவித்த கரங்கள் செயலழிந்து நின்றன.

கட்டபொம்மு பிடிபட்டதைப் பற்றிய பரம்பரை வரலாறு இதுவே. ஆனால் சரித்திர வரலாறு வேறு விதமாக உள்ளது. கட்டபொம்முவைக் கண்டவர்கள் அவரை உடனே பிடித்துக் கொடுக்க வேண்டும் என்று இராமநாதபுரம் கலெக்டர் எழுதிய கடிதத்தைக் கண்ட தொண்டைமான், தன் படைகளை அனுப்பினான் என்றும், அப்படையினர் திருக்களம்பூரையடுத்த காட்டில் கட்டபொம்முவைப் பிடித்து விலங்கிட்டனர் என்றும், அதன் பின்பு தொண்டைமான் கட்டபொம்முவைக் கும்பினியாரிடம் ஒப்படைத்தான் என்றும் சரித்திரம் கூறுகிறது. தொண்டைமான்தான் கட்டபொம்முவைக் காட்டிக்கொடுத்தவன் என்பது மட்டும் மறுக்கமுடியாத உண்மை. தொண்டைமானுடைய இந்த ஈனச்செயலைப் புகழ்ந்து, சென்னைக் கவர்னர் லார்டு எட்வர்டு கிளைவ் அவனுக்குப் பல பரிசுகளை வழங்கியதாகவும் சரித்திரம் சாற்றுகிறது.

கட்டபொம்முவையும் தம்பியரையும் துணைவரையும் மூடுபல்லக்குகளில் ஏற்றித் தக்க காவலுடன் கொண்டு சென்றான் அத்தளபதி. கயத்தாறு நோக்கி அக் காவற்படை சென்றது. உடன் சென்ற தளகர்த்தன் உடல் நடுக்கம் கொண்டான். 'கம்பளத்தார் வாளா இருப்பரோ? உற்ற நண்பர் வழி மறிப்பரோ?' என்று திகில் அடைந்து, வீரரை விரட்டினான். கூண்டில் அடைபட்ட சிங்கம்போல் வீரர் எழுவரும் கட்டுக் கடங்கிச்சென்றனர்.



அக்டோபர் மாதம் ஐந்தாம் தேதியன்று, மாலைக் கதிரவன் மறையும் நேரத்தில், வீரபாண்டியப் பெருமகனாரும், அவரது துணைவரும், காவல் காத்து நின்ற படைவீரரும் கயத்தாறுபோய்ச் சேர்ந்தனர். பானர்மன் வீரத் தமிழ்வேந்தரைக் காணப் பேராவலுடன் வந்தான்; அவரைக் கண்டான். அவருடைய தோற்றம் அவனை மயக்கிற்று. 'திரண்டுருண்ட தோள்கள்; பரந்த மார்பு; ஏறுபோன்ற நடை; விலங்கு பூட்டப்பட்டும் கலங்காத நெஞ்சம்; கம்பீரமான முகவிலாசம்; என்னே இவ்வீரனுடைய ஆற்றல்!' என்று எண்ணமிடலானான். கயத்தாற்றில் ஒரு பாழடைந்த சத்திரத்தில், செயலற்று அவ் வீரமணிகள் சிறையில் கிடந்தனர்.

# 13. குற்றச்சாட்டு

பானர்மனுக்குப் பாஞ்சைச் செல்வரிடம் உள்ளத்தில் பெருமதிப்பு இருந்தபோதிலும், அவரைப் பழிவாங்கும் எண்ணமே மேலோங்கி நின்றது. ஆதலின் அம் மன்னர்மீது பல பழிகளைச் சுமத்தினான். கும்பினியாருக்கு அவரைப்பற்றிப் பொய்யும் புரட்டுமாகப் பல கடிதங்கள் எழுதினான். 'கட்டபொம்மு கொள்ளைக்காரன்; பல கொலைகளைப் புரிந்தவன்' என்றும் கட்டுரைத்தான்.

பாஞ்சையதிபருக்கோ கும்பினியாரிடம் நம்பிக்கை குறையவில்லை. 'கும்பினி அதிகாரிகள் பழைய நட்பை மறந்திருக்கமாட்டார்கள். பானர்மன் அவர்களைக் கலந்து கொள்ளாமல் ஏதும் செய்யத் துணியான்' என்று அவர் கருதினார். ஆயினும், தம்பி ஊமைத்துரைக்குக் கும்பினி அதிகாரிகளின் நடுநிலைமையில் நம்பிக்கை இல்லை. இரவில் அவர் உறக்கம் கொள்ளவில்லை; அண்ணனின் அவல நிலையை எண்ணி எண்ணி மனம் புழுங்கினார். "என்னே இவர் தலைவிதி! பஞ்சணையில் படுத்துறங்கும் எம் அண்ணல் பஞ்சைபோல் தரையில் படுத்துள்ளார்! கைகளையே தலையணையாகக் கொண்டுள்ளார்! பிள்ளையின் சொற்களைக் கேட்டுப் பதியை விடுத்து வந்ததன் விளைவு இது! கோட்டையை விட்டு நாம் நீங்கியிருக்கக் கூடாது.



வெற்றி கிடைக்காவிடினும் வீரசுவர்க்கத்தையாவது அடைந்திருக்கலாமே! அந்நியரின் கையில் சிறைப்பட்டுக் கிடப்பதைக் காட்டிலும் சிறுமை வேறுளதோ?" என்று கதறிக் கண்ணீர் பெருக்கினார்.

தம்பியின் துயரைக் கண்ட வீரபாண்டியர், "தம்பி! நீ சுத்த வீரனல்லவா? நீ மனம் தளரலாமா? ஊழ்வினையைத் தடுக்க முடியுமா? வீணாக வருந்தாதே" என்று தேற்றினார்.

"அண்ணலே! நாம் பழிக்கு ஆளானோமே. இச் சிறையில் புழுங்குவதைவிடப் புதுக்கோட்டையில் பகைவருடன் போரிட்டு இறந்திருந்தால் புகழ் கிடைத்திருக்குமே! இதுவே என்னை வாட்டுகிறது" என்று கூறினார் ஊமைத்துரை.

"பல பேசிப் பயன் என்ன? நடந்தது நடந்துவிட்டது. கும்பினியாரின் நீதியையும் நாம் பார்ப்போமே. விசாரணையின் முடிவை எதிர்பார்ப்போம். பொறுமையே பூஷணமாகக் கொள்வோம்" என்று மூத்தவர் கூறினார்.

மெய்க்காவலன் வீரணமணியக்காரன் எழுந்து நின்று, "மன்னவரே! எங்களுக்கு ஆறுதல் ஏது? தங்கள் உத்தரவு கிடைத்தால், ஒரு நொடியில் இச் சிறையை உடைத்துத் தங்களை விடுவிப்பேன்" என்று பணிவுடன் கூறினான்.

"தோழா! நன்றே சொன்னாய்! உன் தோள் வலியில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஆயினும் கட்டுண்டு இவண் வந்தேன்; அடங்கி நிற்பதே

அறம்" என்று மெய்க்காவலனைக் கட்டபொம்மு கையமர்த்தினார்.

இஃதிங்ஙனமாக, பானர்மன் பாளையக்காரர் யாவரும் கயத்தாற்றுக்கு வருமாறு அழைப்பு விடுத்தான்; பல விடங்களிலிருந்து படைவீரரை வரவழைத்தான்; பெரிய அதிகாரிகளுக்கும் செய்தி அனுப்பினான். அனைவரும் வந்து கூடாரங்களில் தங்கினர். பாளையக்காரர் யாவரும் பானர்மனுக்குக் கைகட்டி வாய் புதைத்துச் சேவை செய்தனர். அதனால், அத் தளபதிக்குத் தான் கருதியதைச் செய்யத் துணிவு பிறந்தது.

அக்டோபர் மாதம் பதினாறும் தேதி பிறந்தது. அன்று தமிழ் மக்களின் வீரம் மண்ணோடு மண்ணாய் மடிந்தது. தமிழ்த்தாய் தன் அற்ப மைந்தரின் செயலைக் காண ஆற்றாமல் வெட்கித் தலை குனிந்தனள். மக்கள் பேடிகள் போல் கண்ணீருகுத்தனர்.

கடும்பகலில் கதிரவன் தன் கதிர்களை அள்ளி வீசலானான். கயத்தாற்றை நோக்கிப் பலர் சாலையின் வழியே வண்டிகளில் விரைந்து வந்தனர். அவர்கள் முறுக்கிவிட்ட மீசையுடன் வீரரைப் போல் காணப்பட்டனர்; ஆனால் உண்மையில் அவர்கள் கோழைகள், மண்ணாசை பிடித்த அற்பர்கள். அவர்கள் யார்? ஒரு சுத்த வீரனைத் தூக்கிலிடும் திருவிழாவைக் காணவரும் பாளையக்காரப் பதர்கள்.

பானர்மன், கோட்டையின் அருகில், நடுப்பகலில் சபை கூட்டினான்; நகரெங்கும் காவற் படைகளை நிறுத்தினான். அவனுக்கு மனத்தினுள் என்ன நேருமோ என்ற திகில். ஆனால் வெளிப் பார்வைக்குக் கம்பீரமாகக் காட்சியளித்தான். தன்னையே நீதிபதியாக நியமித்துக்கொண்டான்! கைதிகளைக் கொண்டுவரக் கட்டளையிட்டான்.



சிங்கத்தைப் பிடித்துக் கூண்டில் அடைத்தாலும் அது தலைகுனிந்து நடப்பதுண்டா? வண்டியில் பூட்டப்படும் காளை தலைநிமிர்ந்துதானே செல்லும்? ஆயினும் மாந்தர் மட்டும் துன்பம் வந்துற்றாலோ தலைகுனிந்து நடப்பார் அல்லவா? ஆனால் நமது வீரத் தமிழ்வேந்தர், ஆணழகர், கட்டபொம்மேந்திரர், குலப்பெருமை குன்றாமல், தலைநிமிர்ந்து நீதி மன்றத்தை நோக்கி வந்தார். தமிழ் நாட்டின் தவப் புதல்வர், அந்நியருக்கு அடிபணியாத தன்மையர், புலவரைப் போற்றும் புரவலர், அடிமேல் அடிவைத்துச் சிங்கநடைபோட்டு நடந்தார். மன்னவரைக் கண்ணுற்ற மற்ற பாளையக்காரர் வெட்கித் தலைகுனிந்தனர்.

கட்டபொம்மு நிமிர்ந்து நின்று கூட்டத்திலுள்ளோரை ஒரு முறை பார்த்தார். அவர்களில் பலர் அவருடைய உறவினர்; பலர் நேற்றுவரை ஊழியர்; பலர் உடனிருந்து உணவருந்திய நண்பர்கள். அவர்கள் இன்று சுதந்திரம் இன்றிப் பகைவனுடன் சேர்ந்து, தலைகுனிந்து நிற்பதைக் கண்டு பாஞ்சையதிபர் மனம் புழுங்கினார். 'தமிழா! உனது இன்றைய நிலையைக் கண்டு நான் வெட்கப்படுகிறேன்' என்று எண்ணினார் போலும்!

நீதி மன்றத்தின் நடுவில் வீரபாண்டியர் தோன்றியவுடன், பாளையக்காரரில் சிலர் பயந்து எழுந்தனர்; சிலர் கைகூப்பி வணங்கினர்; சிலர் சிரம் தாழ்த்தினர்; சிலர் ஒன்றும் தோன்றாது மரம் போல் நின்றனர். பொதுமக்கள் கண்ணீர் விட்டனர்.

அந் நிலையில் கும்பினியாரின் சார்பில் வீரபாண்டியர்மீது கீழ்க்கண்ட குற்றங்களை அடுக்கினான் பானர்மன்: கும்பினியாருக்கு வரிசெலுத்த மறுத்தது முதற் குற்றம். லூஷிங்டனைப் பேட்டி காண்பதற்குப் படைகளோடும் உடைவாளோடும் வர அனுமதித்தாலன்றிப் பேட்டி காணமாட்டேன் என்று கூறிக் கும்பினியாரின் அதிகாரத்தை அவமதித்தது மற்றொரு குற்றம். கும்பினிப் படைகளை எதிர்த்துப் போரிட்டுப் பல வீரரைக் கொன்று குவித்தது மூன்றாவது குற்றம்.

இக் குற்றங்களை உறுதிப்படுத்தப் பல சாட்சிகளை விசாரித்தான் நீதிபதி ஜான் பானர்மன். இச் சாட்சிகள் உள்ளத்தை விலைகூறும் உரமிலாக் கோழைகள்; அந்நியர்க்கு அடிமை புரியும் அற்பர்கள். விசாரணை நாடகம் முடிந்ததும் பானர்மன் வீரபாண்டியரை நோக்கி, "இக் குற்றச்சாட்டுகளுக்கு உமது பதில் யாது?" என்று வினவினான்.

அதற்கு வீரவேந்தர் "இச்சாட்சிகள் கூறியவை யாவும் உண்மையே. ஆனால் அவற்றைக் குற்றங்கள் என்று நான் கருதவில்லை. நாங்கள் பாண்டியர் வழிமுறையில் தோன்றியவர்கள். எந்தக் காலத்திலும் நாங்கள் மாற்றாருக்கு அடங்கி ஆண்டதில்லை; வரி



செலுத்தியதும் கிடையாது. கும்பினியார் வாணிபம் புரிய இங்குவந்தனர். அவர்களுக்கு வரி எதற்காக? வானம் பொழிய, பூமி விளைய, நாங்கள் உழைக்க உங்களுக்கு ஏது கிஸ்தி? எங்கள் நாட்டையாளும் உரிமை உங்களுக்கு ஏது? அந்நியருக்கு நாங்கள் ஏன் வரி செலுத்த வேண்டும்? விருந்தினரை உபசரிப்பதே எங்கள் அறம். வலியச்சென்று பேட்டி காண்பது எமக்கு இழுக்கு. ஆதலின் கலெக்டரை நான் பேட்டிகாணாதது குற்றமாகாது. பாஞ்சாலங்குறிச்சி நான் பிறந்த பொன்னாடு. அதைக் காக்க நான் போரிட்டால் அது குற்றமாகுமா? ஆகவே அதுவும் குற்றம் அல்ல" என்று மறுத்துக் கூறினார்.

மேலும், "நீர் என் தலைநகரைக் கைப்பற்றிக் கொள்ளையடித்தீர். இங்கே நீதிபதியாகத் தோன்றுகின்றீர். என்னை விசாரணை செய்ய உமக்கு அதிகாரம் ஏது? கும்பினியாரின் கட்டளை எங்கே? உமது குற்றச் சாட்டையும் என் பதிலையும் கும்பினியாருக்கு அனுப்பும். அவர்கள் தீர்ப்பு அளிக்கட்டும். என்னைக் காட்டிக்கொடுத்த தொண்டைமானும், என்னைப் பகைவனாகக் கருதும் எட்டப்பனும் உமது நண்பர்கள். உமது நேர்மைக்கு அவர்கள் சாட்சிகள் போலும்!" என்று கூறி நிறுத்தினார்.

அந் நிலையில் "உமக்குத் தூக்குத் தண்டனை விதித்துள்ளேன்" என்றான் பானர்மன். அருகிலிருந்த மக்கள் வாய்விட்டு அலறினர். கோழைகளும் தலைகுனிந்தனர். தூக்குத் தண்டனை என்றதும் கட்டபொம்மு புன்முறுவல் பூத்தார். பானர்மனை

யும் மற்ற பாளையக்காரரையும் நிமிர்ந்து பார்த்தார். அவர்களோ அவரைக் காண நாணங்கொண்டு தலை கவிழ்ந்தனர்.

மங்கம்மாள் சாலைப்புறத்தே இருந்த கட்டைப் புளியமரமே தூக்குமேடையாகத் திகழ்ந்தது. அம் மரத்தில் ஒரு கயிறு தொங்கிக்கொண்டிருந்தது. அதை நோக்கிக் கட்டபொம்மு நடந்தார். அவர் நடையில் நடுக்கம் இல்லை; பார்வையில் பயம் இல்லை; முகத்தில் நாணம் இல்லை. சபையோரை வெறுப்புடன் பார்த்துக்கொண்டு சென்றார். தமது துணைவரைப் பார்த்தார். அவ்வளவில் உடல் பதறினார். "முருகா! முருகா!" என்று இறைவன் திருநாமத்தை ஆர்வத்துடன் உச்சரித்தார். "சக்கம்மையே! சரணம்" என்று சாற்றினார். தூக்குக் கயிற்றைக் கைகளால் பற்றினார். சபையோரை நோக்கி, "சுத்த வீரனுக்கு ஆறிலும் சாவு, நூறிலும் சாவு. இறப்பும் பிறப்பும் இரட்டையர். சாவுக்கு நான் அஞ்சவில்லை. ஆனால் நான் என் கோட்டையிலேயே இருந்து பகைவரைப் போர்முனையில் சந்தித்துப் போரிட்டு மடிந்திருந்தால் எனக்கும் எனது நாட்டிற்கும் பெருமையாக இருந்திருக்கும். ஆனால் வஞ்சனைக்கு ஆளாகிச் சிறுமையடைந்தேன். இதுவே என் வருத்தம். என் தம்பி ஊமைத் துரைக்குச் செவிசாய்க்காதது ஒரு பெருங்குறை. தம்பி! மனம் தளராதே. எல்லாம் வினைப்பயன்"



என்று கூறி, வரையாது வழங்கிய தம் வலக்கரத்தால் தூக்குக்கயிற்றை எடுத்துத் தம் கழுத்தில் மாட்டிக் கொண்டார்! தம்மைத் தாங்கியிருந்த நாற்காலியைக் காலால் உதைத்துத் தள்ளினார். கட்டபொம்முவின் கவினார் திருமேனி கயத்தாற்றுப் புளியமரத்தில் ஊசலாடிற்று. அந்தோ! அந்தோ! என்று சூழ்ந்து நின்ற மக்கள் கண்ணீர்விட்டுக் கதறினர். வெற்றி பல கண்ட வீரபாண்டியர் பொன்மேனி தகுந்த மரியாதைகளுடன் தகனம் செய்யப்பட்டது.

பானர்மன் உடனடியாகத் தன் இருப்பிடம் சேர்ந்தான். தாமதம் செய்தால் மக்கள் சீறி எழுவரோ என்று அஞ்சினான். அடைக்கலம் புகுந்த அண்ணலைக் காட்டிக்கொடுத்த தொண்டைமானுக்கு, புதுக்கோட்டை ஒரு தனியரசு என்ற உரிமை கும்பினியாரால் அளிக்கப்பட்டது! எட்டப்பனுக்கும் பல பரிசுகள் கிடைத்தன. கும்பினியாரின் ஆணைப்படி, பாளையக்காரர் வசம் இருந்த ஆயுதங்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன. அங்ஙனமே அவர்களது விருதுகளும் அதிகாரங்களும் பறிக்கப்பட்டன. பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை உட்பட அவர்களுடைய கோட்டைகள் யாவும் தகர்க்கப்பட்டு மண்ணோடு மண்ணாகச் சேர்க்கப்பட்டன. பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டை இருந்த விடத்தில் உப்பையும் ஆமணக்கையும் தூவி உழுதுவிட்டனர்.

“என் அண்ணனைக் கொன்றவரைப் பழிவாங்குவேன்” என்று ஊமைத்துரை சபதம் செய்தார். மன்னவன் முடிவைக் கேள்வியுற்ற தேவியும் மாண்டு போனாள். பாளையக்காரர் அனைவரும் அடங்கி ஒடுங்கி நடைப்பிணங்களாய் நகரலாயினர். பானர்மனும் இங்கிலாந்துக்குச் சென்று விட்டான்.

## 14. ஊமைத்துரையின் மறைவு

கட்டபொம்முவைக் கயத்தாற்றில் தூக்கி விட்ட பின் பதினாறு மாதங்கள் கடந்துவிட்டன. அன்னாரின் தம்பியரும் துணைவரும் பாளையங்கோட்டைச் சிறையில் அடைபட்டிருந்தனர். சரியான ஊண் உறக்கமின்றி, அவர்கள் பாஞ்சைபதியின் முடிவையும் தமது நிலையையும் எண்ணியெண்ணிச் சிந்தை மிக நொந்தனர். அவ்வீரரின் இரத்தம் கொதித்தது. ஆங்கிலேயரைப் பழிக்குப் பழிவாங்க வேண்டுமென்று முடிவு செய்தனர். ஊமைத் துரைக்கு நாட்டில் செல்வாக்கு அதிகம். அவர் சிறையிலிருப்பதை மக்கள் விரும்பவில்லை. . அதன் பயனாக நாட்டுப்பற்று மிகுந்த புரட்சிக் கூட்டம் ஒன்று உருவாயிற்று. புரட்சிவீரர் ஒட்டநத்தம் என்னும் சிற்றூரில் கூடி ஒரு திட்டம் வகுத்தனர். அதன்படி, 1801-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ஆம் தேதியன்று காலை, புரட்சிவீரர் பலர், வழிப்போக்கர், பிச்சைக்காரர், விறகுவெட்டிகள், பரதேசிகள் போன்று மாறுவேடங்களை அணிந்துகொண்டு, பாளையங்கோட்டைக்குள் நுழைந்தனர்.

பாளையங்கோட்டையில் அவ்வமயம் கும்பினியாரைச் சேர்ந்த வெள்ளையர் இருபதின்மருக்கும் குறைவாகவே இருந்தனர். அன்று மாலை மெக்காலே என்ற தளபதியின் விடுதியில் ஒரு

விருந்து. வெள்ளையர் யாவரும் அவ் விருந்துக்குச் சென்றிருந்தனர். அப்பொழுது மாறுவேடம் பூண்டு வந்த புரட்சிவீரர்கள் பாளையங்கோட்டைச் சிறையைத் தகர்த்து, ஊமைத்துரை முதலியவர்களை விடுதலை செய்தனர். விடுதலை பெற்ற ஊமைத்துரையின் தலைமையில் புரட்சிவீரர் திரண்டு, பாஞ்சைப்பதியை நோக்கிப் புறப்பட்டனர். இரவெல்லாம் நடந்துசென்று ஓட்டப்பிடாரத்தை அடைந்தனர். அங்குத் தங்கி, மேலும் செயலாற்றவேண்டியதைக் குறித்து ஆலோசித்தனர். வெள்ளையரால் அழிக்கப்பட்ட பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை மீண்டும் அமைப்பது, புரட்சிவீரருக்குப் போர்ப்பயிற்சி முறையாக அளிப்பது, கும்பினியார் தம் வசமாக்கிக்கொண்ட பாளையங்களைப் போரிட்டுக் கைப்பற்றுவது என்ற மூன்று திட்டங்களையும் வகுத்தனர். சிலநாட்கள் சென்றன.

தளபதி மெக்காலே, புரட்சிவீரரைப் பிடிப்பதற்கு ஒரு பெரும் படையைத் திரட்டிக்கொண்டு வந்தான். வழியில் இருதரப்பினருக்கும் கடுமையான போர் நிகழ்ந்தது. போரில் கும்பினிப்படைக்குப் பெருஞ் சேதம் நேர்ந்தது. ஆயினும் அவர்கள் முன்னேறி, பாஞ்சாலங் குறிச்சியை மறுநாள் காலை பத்து மணிக்கு அடைந்தனர். அங்கே அவர்கள் கண்ட காட்சி அவர்களைக் கதிகலங்கச் செய்தது.

பானர்மனால் தரைமட்டமாக்கப்பட்ட பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டை மீண்டும் வீறுடன் எழுந்து விளங்கிற்று. அலாவுதீன் அற்புத தீபத்தின்



உதவியால் ஓர் இரவுக்குள் ஒரு மாளிகையை எழுப்பியதாகக் கதை சொல்லுகிறது. அதுபோல், வெள்ளையரின் கண்ணுக்கு எதிரே, அழிக்கப்பட்ட கோட்டை, உருக்கொண்டெழுந்து நிமிர்ந்து நின்றது! நாட்டுப்பற்றே உயிர்நாடி எனக் கருதிய மக்கள் அக் கோட்டையை இரண்டே வாரங்களில் கட்டி முடித்திருந்தனர். முன்பு இருந்த கோட்டையைக் காட்டிலும் இது உறுதிவாய்ந்தது. கோட்டைக்குள் ஐயாயிரம் புரட்சிவீரர் இருப்பதாக மெக்காலே ஒற்றர் மூலம் அறிந்தான். அவ்வளவில் திலைடைந்து, உடனே பாளையங்கோட்டைக்குத் திரும்பிவிட்டான். சிறிது காலம் கழிந்தது.

இதற்குள் புரட்சிப் படையினர் சில பாளையங்களைப் பிடித்துக்கொண்டனர். தூத்துக்குடியில் இருந்த இந்திய வீரரின் ஆயுதங்களைக் கைப்பற்றினர். மேலும் அங்கு இருந்த பாகட் என்ற ஆங்கில அதிகாரியைச் சிறைசெய்தனர். அவ்வதிகாரியின் மனைவி பாஞ்சாலங் குறிச்சி சென்று, ஊமைத்துரையைக் கண்டு, அவரை வணங்கி, தன் கணவனுக்கு உயிர்ப்பிச்சை வேண்டி நின்றாள். ஊமைத்துரை அம் மாதுக்கு அடயம் அளித்து, கணவனை விடுதலை செய்து, பரிசுகள் பலவும் வழங்கி, தகுந்த காவலுடன் தூத்துக்குடிக்கு அனுப்பினார்.

மீண்டும் கும்பினிப் படை திரண்டு வந்து கோட்டையைத் தாக்கலாயிற்று. கோட்டையின் மீது வெள்ளையர் படை குண்டுமாரி பொழிந்தது.

ஆயினும் கோட்டைச்சுவர் முற்றிலும் தகர்ந்துவிடவில்லை. புரட்சிவீரர் கும்பினி வீரரைக் கொன்று குவித்தனர். கானல் ஆக்னியூவின் தலைமையில் ஒரு பீரங்கிப்படை வந்து சேர்ந்தது. வெள்ளைப் படையினர் புரட்சிவீரருக்கு உணவுகிடைக்காதபடி கோட்டையை முற்றுகை செய்தனர். உணவின்றிப் பல புரட்சிவீரர் உயிர் துறந்தனர். மே மாத இறுதியில், கடுமையான பீரங்கித் தாக்குதலின் பயனாகக் கோட்டைச் சுவர்களில் உடைப்புகள் தோன்றின. கும்பினிப் படையினர் கோட்டைக்குள்ளே நுழையாதபடி புரட்சிவீரர் ஆழமும் அகலமும் உள்ள அகழிகளைத் தோண்டி வைத்தனர். கும்பினிப் படைவீரரில் பலர் அவ்வகழிகளில் விழுந்து இறந்தனர். எங்கும் பிணக் குவியல்! எங்கும் வெடி மருந்தின் நாற்றம்! கோட்டைக்குள்ளும் சேதம் அதிகமாக இருந்தது. இனியும் கோட்டைக்குள் இருந்தால் அழிவு நிச்சயம் எனக் கருதிய ஊமைத்துரை, புரட்சிவீரருடன் அணிவகுத்துக் கோட்டைக்கு வெளியேவந்து, கும்பினிப் படையினரைக் கொன்று குவித்தார். கோட்டை கொலைக்கள மாயிற்று. ஊமைத்துரையும் சிவத்தையாவும் இப் போரில் காட்டிய வீரத்தை அளவிட இயலாது. ஊமைத்துரையின் உடல்முழுதும் புண்ணாகித் தரையில் சாய்ந்தார். புரட்சிவீரர் தம் தலைவனை இழந்து சிதறி ஓடினர்.



அச் சமயம் ஒரு புரட்சிவீரனுடைய தாயார் போர்க்களத்தை அடைந்து, தன் மகனுடைய உடலைத் தேட முயன்றாள். அவ் வீரனுடைய உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது. தனயனைக் கண்ட தாய் அலறினாள். தனயனோ கண்திறந்து, தாயை அருகில் அழைத்து, "அம்மா! அதோ பார்! அங்குள்ள நமது துரையைக் காப்பாற்று. நான் பிழைத்து யாது பயன்? அவர் பிழைத்தால் நாடு நலம்பெறும்" என்று கூறி உயிர்நீத்தான். மகனுடைய விருப்பப்படியே அத் தாய் ஊமைத்துரையை எடுத்துக்கொண்டு போய் அவருக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்தாள். அவரும் பிழைத்துக்கொண்டார்.

ஒரு நாள், கும்பினியாட்கள் புரட்சிவீரரைத் தேடிக்கொண்டு அந்த அம்மையின் ஊரை அடைந்து அவள் வீட்டிலும் நுழைந்து தேடினர்; அச் சமயத்தில் அந்த மாது ஊமைத்துரையைக் கட்டிலில் கிடத்தி, உடலைமூடி, "வைசூரி கண்டு என்மகன் மரித்தான்" என்று கூறிக் கதறி அழுதாள். வைசூரி என்று கேட்டவுடன் பகைவர் திரும்பிப்போயினர். ஊமைத்துரை காப்பாற்றப் பட்டார்!

ஊமைத்துரை மீண்டும் சிவகங்கை பாளையக்காரரான மருது சகோதரர்களின் துணைவலியுடன் ஆங்கிலேயரை எதிர்த்தார். சிவகங்கையில் கடும் போர் நடந்தது. முடிவில் ஊமைத்துரையும் சிவத்தையாவும் மருது சகோதரரும் ஆங்கிலேயரால்

சிறை செய்யப்பட்டனர். ஆங்கிலேயர் ஊமைத் துரையையும் சிவத்தையாவையும் பாஞ்சைக்கோட்டைக்கு மேற்புறத்திலிருந்த பீரங்கிமேட்டில் தூக்கி விட்டுக் கொன்றனர். மருது சகோதரர்களைத் திருப்பத்தூரில் தூக்கிலிட்டனர். கர்ண பரம்பரையாக, ஊமைத்துரை ஆங்கிலேயரிடம் சிறைப்படவில்லை என்றும், தப்பிச்சென்று காசித்தலத்தை யடைந்து, துறவியாக வாழ்ந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

## 15. வீரவணக்கம்

நாட்டுப் பற்று மிகுந்த வீரபாண்டியரும் ஊமைத்துரையும் சில ஆண்டுகளே வாழ்ந்தனர். இறக்கும்பொழுது வீரபாண்டியருக்கு வயது முப்பத்தொன்பது ; ஊமைத்துரைக்கு வயது முப்பது. இக் குறுகிய காலத்திற்குள், இவர்கள், அடிமை வாழ்வில் ஆழ்ந்து கிடந்த தமிழ்மக்களை நாட்டுப்பற்று என்னும் திருமந்திரத்தால் தட்டி எழுப்பினர். ஆயினும் அவர்களுக்கு வெற்றி கிட்டவில்லை. மக்களின் மனம் அக்காலத்தில் சீரிய நிலையில் இல்லை: சமூகத் தலைவர்கள் சுயநலம் மிகுந்தோராக இருந்தனர் ; ஒற்றுமை குன்றியிருந்தது. ஆதலால் குடிமை, மானம், வீரம் முதலிய பண்புகள் ஓங்கவில்லை. நாட்டுப் பற்றுக்குக் கிடைத்த பலன் தூக்குமேடை ! இதில் வியப்பு ஏதுமில்லை. அமெரிக்க நீக்ரோவரின் அடிமை வாழ்வை அகற்ற முயன்ற ஆப்ரகாம் லிங்கன் என்ற பெரியார் தம் இனத்தான் ஒருவனால் சுடப்பட்டு உயிர்நீத்தார். நமது நாட்டில், அண்ணல் காந்தியடிகளும் இவ்வாறே பிரார்த்தனை சமயத்தில் ஒரு கயவன் குண்டுக்குத் தலைசாய்த்தார்.

கட்டபொம்முவின் கோரமுடிவு நமக்குத் திகைப்பூட்டுகின்றது. அவரைக் காட்டிக்கொடுத்தவர் நம் நாட்டினரே. அச் செயல் நம்மை வெட்கித்

தலைகுனியும்படி செய்கிறது. அதிகாரத்தில் அமர்ந்த மாற்றான் அவரைத் தூக்கிலிட்டான். ஆயினும் தமிழர் நெஞ்சினின்றும் வீரபாண்டியர் நினைவை அகற்ற இயலவில்லை. அவர்கள் மாறுபரணராகிய வீரபாண்டியக் கட்டபொம்முவின் புகழைப் பாக்களில் இசைத்தனர்; அவர் சரிதையை நாடகமாக நடித்தனர். அந்நிய ஆட்சியாளரின் அடக்குமுறையால் அவை யாவும் அடக்கப்பட்டன. ஆயினும் பாஞ்சை மன்னர் அருங்குணங்களை மக்கள் மறக்கவில்லை. கட்டபொம்மு தமிழ் நாட்டின் தனிப் பெரும் வீரர்; நாட்டின் விடுதலைக்கு அடிகோலிய உத்தமர்; தாயின் சொல் மீறாத தனயர்; உண்மைச் சோதரர்; உற்ற நண்பர்; வரையாது கொடுக்கும் வள்ளல்; மானமும், நேர்மையும், நீதியும் திரண்டோர் வடிவெடுத்து வந்தன என்று போற்றற்குரியவர்; குடிமக்களைக் கண்ணெனக் காத்த கோமான். ஆதலின், அடக்குமுறையால் அடக்க முடியாத ஒரு கற்குவியலை மக்கள் அவருடைய நினைவுச் சின்னமாகப் போற்றி வருகின்றனர்.

பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டை இன்று ஒரு மண்மேடு. இந்த மேட்டிலுள்ள மண்ணை மக்கள் பொன்னெனை மதித்து வருகின்றனர். அந்த மண்ணில் சிறிது கொண்டுவந்து, நீரில் கரைத்துத் தம் குழந்தைகளுக்கு ஊட்டுகின்றனர். இங்ஙனம் செய்தால், அக் குழந்தைகளுக்கு வீரம் பிறக்கும் என்பது நம்பிக்கை.



“பாஞ்சாலங் குறிச்சியார் ஈடுமெடுப்புமில்லாத வீரர்கள். பாஞ்சாலங் குறிச்சி இவர்களுடைய ஜிப்ரால்டர். சிறிதும் தன்னலம் இன்றித் தன் தாய்நாட்டுக்காகப் போரிட்ட அவ் வீரமகனுக்குத் தூக்குமேடை ஏறவேண்டிய நிலைமை ஏற்பட்டது பரிதபிக்கத் தகுந்தது” என்று கர்னல் வெல்ஷ் என்ற ஆங்கியேர் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டின் உரிமைக்காகத் தன்னலமின்றிப் போரிட்ட வீரபாண்டியருக்கு நாம் தலைவணங்குவோமாக! அத் தமிழ்வீரரை நாம் என்றும் மறவாதிருப்போமாக! வாழ்க அவர் திருநாமம்! வளர்க அவர் புகழ்!

ஜெய் ஹிந்த்!

V211:51Y72 60



# மாதிரி வினாக்கள்

1. வீரபாண்டியக் கட்டபொம்முவின் முன்னோர் ஒ
பாண்டி நாட்டில் அரசுரிமை பெற்ற வரலாற்றை
கூறுக.

2. கட்டபொம்முவின் காலத்திய பாஞ்சாலங் குறிச்சி
யும் அதன் ஆட்சியையும் சுருக்கமாக வருணிக்க.

3. கும்பினியார் பாஞ்சாலங் குறிச்சித் தலைவர்மேல்
கொள்ளக் காரணம் என்ன ?

4. ஜாக்ஸன் வீரபாண்டியரை ஊரூராக வரச்
அலைக்கழித்ததன் உட்கருத்தை விளக்கி, அவர்
நாதபுரத்தில் அம் மன்னரை நடத்திய விதத்தைப்
நீங்கள் கருதுவதைத் தெரிவிக்க.

5. பாஞ்சாலங் குறிச்சி முதற் போரை வருணிக்க.

6. வீரபாண்டியரும் அவர் படையினரும் பெருவீரர்களா
யிருந்தும், கும்பினியாருடன் செய்த போர்களின்
முடிவில் தோல்வியுற்றதேன் ?

7. கர்னல் பானர்மன் சாட்டிய குற்றங்கட்குக் கட்ட
பொம்மு தந்த விடைகளைப்பற்றி நீங்கள் கருதுவ
தென்ன ?

8. தானாபதிப் பிள்ளையின் குணஞ் செயல்களைப்பற்றி
நீங்கள் கொண்டுள்ள மதிப்பைத் தெரிவிக்க.

9. வீரபாண்டியக் கட்டபொம்முவின் குணவிசேடங்களைப்
பற்றி ஒரு கட்டுரை வரைக.

10. பாஞ்சாலங் குறிச்சியில் இரண்டா முறையும் போர்
நிகழ்ந்ததற்குக் காரணம் யாது ?

11. ஊமைத்துரையின் பண்புகளைப்பற்றி ஒரு சிறு கட்டுரை
எழுதுக.

12. வீரபாண்டியக் கட்டபொம்முவின் சரித்திரத்திலிருந்து,
உங்கள் எதிர்கால வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியவை
என்று நீங்கள் கருதும் முக்கிய உண்மைகளை எடுத்துக்
காட்டுக.

TAMIL NADU ARCHIVES LIBRARY CHENNAI 11931